127

பாடம் ஆயத்தம் செய்யும் விதம்

LESSON PREPARATION

BY

EDWARD A. ANNETT

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
... AHABAD CALCUTTA, RANGOON AND COLOMBO
1914

[விலை, அணா ௪

T:3
N14
142847

பாடம் ஆயத்தம் செய்யும் விதம்

LESSON PREPARATION

BY

EDWARD A. ANNETT

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS, ALLAHABAD, CALCUTTA, RANGOON AND COLOMBO

1914

C. L. S. PRESS, MADRAS—1914

பொருளடக்கம்

அத்தி. பக்கம்

முகவுரை

I. பாட ஆயத்தம் 1

பிரிவு I

பாலர் வகுப்பு

II. குணகுணங்கள் 7
III. சரித்திரப் பாடம்: தானியேல் சிங்கங்களின் குகையில் போடப்பட்டது 11
IV. உவமை: மணலின்மேலும் கற்பாறையின்மேலும் கட்டப்பட்ட வீடுகள் 16
V. சன்மார்க்கப் பாடம்: (கதையினால் திருஷ்டாந்தப்படுத்தப்பட்டது.) இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் 19
VI. நீதி கற்பிக்கும் பாடம்: சங்கீதம் 23 22

பிரிவு II

இளம் மாணாக்கர்

VII. குணகுணங்கள் 28
VIII. சரித்திரப் பாடம்: சோதனை 33
IX. உவமை: வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் 37
X. நீதி கற்பிக்கும் பாடம்: முதலாம் கற்பனை 42
XI. ஜீவிய சரித்திரப் பாடம்: கிதியோன் 46

பிரிவு III

வாலிப மாணாக்கர்

XII. குணகுணங்கள் 51
XIII. சரித்திரப் பாடம்: (ஜீவிய சரித்திரத்தால் திருஷ்டாந்தப்படுத்தப்பட்டது.) சீஷர்கள் அழைக்கப்பட்டது 57
XIV. ஜீவிய சரித்திரப் பாடம்: (பையன்களுக்கு) தானியேல் ... 61
XV. ஜீவிய சரித்திரப் பாடம்: (பெண்களுக்கு) எஸ்தர் ... 67
XVI. உவமை: தாலந்துகள் 71
XVII. சங்கீதம்: சங். 32 76

பாடம் ஆயத்தம் செய்யும் விதம்

முகவுரை

அத்தியாயம் I

பாட ஆயத்தம்

படிப்பிப்பதில் பிரயோஜனமுண்டாக வேண்டுமானால், படிப்பிக்குமுன் பாடத்தைச் சரியானபடி ஆயத்தம் செய்யவேண்டும். இதற்கு முன்னறிவு மிக அவசியம்; சூட்சம சாமர்த்தியமும், விசாலித்த அனுபவமும் அதிக பிரயோஜனமுள்ளது; என்றபோதிலும் உபாத்தியாயர் தனக்குக் கொடுக்கப்பட்ட சமயத்தை மிகப் பிரயோஜனப்படுத்த விரும்புவாரானால், ஒவ்வொரு பாடத்தையும் தீரத் தெளிவாய் ஆயத்தம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

இவ்விஷயத்தில் இரண்டு தீமைகளுக்கு விலகியிருக்கவேண்டும். அதாவது பொருள் போதாமையும், அளவுக்கு மிஞ்சின பொருளுமே. பொருள் போதாமையாயிருக்குமானால், உபாத்தியாயர் பாதிநேரத்தை வீண்போக்கவேண்டியதாயிருக்கும், அல்லது பொருள் அதிகப்படுமேயானால் அது பிள்ளைகளின் மனதைக் குழப்பி அவர்களின் உற்சாகத்தைக் கெடுத்துப்போடும். ஆகையால் பாடத்தை ஆயத்தம் செய்வதென்றால் பொருள்களைத் தேடிச் சேர்க்கிறது மாத்திரமல்ல, நம்முடைய நோக்கத்துக்கிசைய கரிசனையோடு அவைகளிலிருந்து தெரிந்தெடுத்து ஒழுங்குபடுத்திக்கொள்ளுவதுதான். அது மாணாக்கருடைய அவசியத்திற்குத் தகுந்தபடியும், கற்பிப்பதற்கு வெகு ஒழுங்காயும் இருக்கவேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு பாடத்தையும் ஆயத்தம் செய்வதற்கு, எப்போதும் ஒரு திட்டமும் சுளுவுமான முறையைக் கையாடவேண்டும்; ஒவ்வொரு பாடத்திற்கும் அததற்குரிய விசேஷித்த வகைகளும் அவசியமாயிருக்கும்.

ஜெபமானது முக்கியமான விஷயமென்று இங்கே சொல்லுவது அனுவசியமென்று காணப்பட்டபோதிலும், ஆவிக்குரிய ஒவ்வொரு வேலையையும் தொடங்கும்போது ஜெபத்தோடே தொடங்குவது நியாயம் என்று யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் ஜெபத்தை சட்டத்தின்படி மாத்திரமல்ல, சாதனையின்படியும் அப்பியாசிக்கவேண்டும். அநேகந் தடவைகளில் தாழ்மையும் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கும் ஜெபத்தோடும் நம்முடைய பாடத்தை ஆரம்பிக்கிறதில்லை என்பது வாஸ்தவமான விஷயமே.

ஜெபம்

நாம் என்னத்திற்காக ஒவ்வொரு தடவையும் ஜெபிக்கவேண்டும்? இரண்டு முகாந்தரங்களுண்டு: (a) பிள்ளைகளுக்குப் பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களைப் படிப்பிப்பதற்கு நமக்குப் பரம வெளிச்சம் அவசியம். (b) நம்முடைய போதனையானது பிள்ளைகளின் இருதயத்தையும் ஜீவியத்தையும் கவர்ச்சித்து நடத்தவேண்டுமானால் நமக்கு வல்லமை அவசியம்.

2. படிப்பிக்கும் பாகத்தைத் தீரப் படிக்கவேண்டும். அதை மறுபடியும் மறுபடியும் கவனமாய் வாசித்து அந்தப் பாகத்தைப் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் அதை நன்றாய்க் கிரகித்துக்கொள்ளாவிட்டால் மற்றவர்களைக் கிரகித்துக்கொள்ளும்படி செய்வது அசாத்தியம். கஷ்டமான வார்த்தைகளும் வாக்கியங்களும் நன்றாய் அறிந்துகொள்ளப்பட்டு, பாடத்தின் ஒவ்வொரு விஷயமும் ஒழுங்கின்படி வரிசையாய் மனதில் பதியச் செய்யவேண்டும். பாடத்தின் முக்கிய கருத்தின் அர்த்தம் தெரியாமல் பாடத்தை நடத்துகிற உபாத்திமார் உண்டு. இது மிகவும் விநோதமானதாயிருந்தபோதிலும் விசனமான விஷயமே.

படிப்பிக்கும் பாகம்

3. பாட விஷயமாய் நாம் விசாரித்தறியவேண்டிய மூன்று கேள்விகளுண்டு.

(a) இந்தப் பாகத்திலிருந்து நான் படித்துக் கொடுக்கவேண்டிய ஆவிக்குரிய சத்தியம் என்ன? பிள்ளையின் இருதயத்தில் ஆவிக்குரிய சத்தியத்தைப் புகட்டுவது லேசான காரியமல்ல. ஒரே சமயத்தில் அநேக காரியங்களைப் புகட்டப் பிரயாசப்படுவதினால் அநேக உபாத்திமார் சித்திபெறாமல் போய்விடுகிறார்கள். ஞானமுள்ள உபாத்திமார் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே ஒரு விசேஷித்த சத்தியத்தை முக்கிய பொருளாக வைத்துக்கொள்ளுவார்கள். துவக்கத்திலேயே தெளிவாயும் திட்டமாயும் ஆரம்பித்து நடத்துவது அவசியம். அந்தச் சத்தியத்தை சாதாரணமாய்த் தங்கவாக்கியத்தில் காணலாம். ஆனால் படிப்பிப்பவர் நாடோடிய சுளுவான வார்த்தைகளாக ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை மத்திய பொருளாக வைத்துப் பாடத்தை ஆயத்தம்பண்ணும்போது, பாடத்தின் அமைப்பு நன்றாய்ப் புகட்டவேண்டும்.

மூன்று விளக்கள்

(b) என்னுடைய வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு இந்தச் சத்தியத்தை எப்படி உபயோகிப்பேன்? தொகுப்பாய்ச் சொல்லப்படும் போதனையானது பிள்ளைகளின் மனதிலிருந்து வெகு சீக்கிரம் மறைந்துபோகும். மாறாத பிரமாணமாக அவர்கள் மனதில் பதியச் செய்ய வேண்டுமானால், அவர்களுடைய தினசரி ஜீவியத்தின் குணகுணங்களில் பதியும்படியாகத் திட்டமாய்ப் படிப்பிக்கவேண்டும். பிள்ளைகள் கண்பார்க்கச் செய்யப்பட்டாலொழிய கற்றுக்கொள்ளுவது அபூர்வம். ஆவிக்குரிய இந்தப் பாடமானது தங்கள் ஒவ்வொருவருடைய ஜீவியத்திற்கும் உரியதென்று அவர்கள் கண்டுகொண்டாலொழிய, இந்தப் பாடமானது ஒரு வெளிப்படையான போலி விஷயமாக மாத்திரம் இருக்கும். உபாத்தியாயர் ஆயத்தம்பண்ணும்போதே பிள்ளைகள் அப்பியாசப்படுத்தும் விதமாய் இந்த ஆவிக்குரிய பாடத்தை எப்படி வற்புறுத்தலாம் என்பது அவருடைய முக்கிய நோக்கமாய் இருக்கவேண்டும். வகுப்புக்குப் போய்ப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும்வரைக்கும் இதை விட்டுவிடக்கூடாது; ஏனென்றால், இதுதான் படிப்பிக்கும் வேலையில் மகா முக்கியமானதும் கஷ்டமானதுமான பாகம்.

(c) இந்தப் பாடத்தில் பிள்ளைகள் விரும்பக்கூடிய முக்கிய விஷயம் என்ன? பிள்ளைகள் வளரவளர அவர்களுடைய விருப்பம் மாறு

கிறது. பாடம் மிகவும் வல்லமையோடு அவர்களுக்குள் வேலைசெய்ய வேண்டுமானால் இந்த விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் நாம் படிப்பிக்கிற பிள்ளைகளுக்கு ஏதமான விஷயமெதுவென்று முன்னதாகவே தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

4. இக்கேள்விகளுக்குப் பூரணமான விடை கொடுத்தபின் கதையை எப்படிச் சொல்லவேண்டுமென்று கவனிக்கவேண்டும். சாதாரணமாய் ஒவ்வொரு பாடமும் சரியான முறையாய் ஆயத்தம் செய்யப்பட்டால், கதைப்போக்காய் அல்லது சரித்திரநடையாய் இருக்கும்; அப்படி நேரிடாவிட்டாலும் பாடத்தையே சரித்திரநடையாய் அடிக்கடி நடத்தலாம். பாலகருக்கும் மற்றும் சிறு பிள்ளைகளுக்கும் படிப்பிக்கும்போது இது மிகவும் கவனிக்கப்படத்தக்கது. பிள்ளைகள் வளரவளர கதையின் அவசியம் கொஞ்சங் கொஞ்சமாய் நீங்கிப்போகும்; என்றபோதிலும் பெரிய பிள்ளைகளுக்கும் கவனத்தைக் கவர்ச்சிக்கும்படியாக இவ்விதக் கதைகளே இடைக்கிடையே மிகவும் பிரயோஜனமானவை.

கதை

கதை நன்றாய்ச் சொல்லப்படவேண்டுமானால், ஒவ்வொரு சாட்சியும் அல்லது விஷயமும் மனதிலே கிரகிக்கப்பட்டு நடக்கிறபிரகாரமாகவே வர்ணிக்கப்படவேண்டும். முக்கியமான காரியாதிகள், நடை உடை பாவனை முதலியன எப்படிக் காணப்படும் என்று உபாத்தியாயர் தாமே மனோபாவனையாய் எண்ணிக்கொள்ளவேண்டும். இந்தப் பாடத்திற்கு இன்னும் உயிர்கொடுத்து உற்சாகபபடுத்தவேண்டுமானால், இந்தக் கதைக்குச் சிற்சில விஷயங்களில் சம்பந்தப்படுத்தக்கூடிய ஏதாவது தமது அனுபவத்தில் அறிந்த விஷயங்களையும் நினைத்து இதோடே சேர்த்துக்கொள்ளலாம்; அந்தச் சமயத்தில் அவர் நடந்துகொண்ட விதத்தையும் கண்ட விஷயங்களையும் சொல்லலாம். படிப்பிக்கும் நேரம் வரும்போது கதையைச் சாங்கோபாங்கமாய் வல்லமையோடு சொன்னதற்காக ஆச்சரியப்படுவார். முதலில் இப்படிச் செய்வது குழப்பமாயிருக்கும், மனங் குழம்பி யோசனைத் தடுமாறிப்போகும். என்றாலும் பழக்கம் பூரணப்படுத்தும்.

வேதக் கதைகளைச் சொல்லும்போது, மனோபாவனைகளை உபயோகிப்பதில் மட்டு இருக்கவேண்டும். நடந்த சங்கதியை நடக்கிற பிரகாரம் விஸ்தரிப்பதினால், ஜனங்களுக்கும் அந்த விஷயத்திற்கும்

உயிர்கொடுப்பதற்காக மாத்திரம் உபயோகிக்கலாம். வேறு கட்டுக் கதைகளை உண்டுபண்ணவும், வேதத்தில் தெளிவாய்த் தொக்கிநிற்காத புது குணகுணங்களை எடுத்துக்காட்டவும் நம்முடைய மனோபாவனைக்கு இடங்கொடுக்கக்கூடாது.

வேதசரிதைகளைச் சொல்லும்போது பிள்ளைகளின் மனதில் வெறும் கதையை அல்லது நடந்த சம்பவங்களைவிடக் கதையின் சாராம்சம் அதிகமாய்ப் பதியும்படி செய்வதே நம்முடைய முழு நோக்கம். படிப்பிக்கப்பட்ட பாடமானது மனதில் படிப்பினையாக மாத்திரமல்ல, கேட்கிற பிள்ளைகளின் மனதில் ஒரு உருவகம் பதியும்படியாக இருக்கவேண்டும். அதை நினைவுகூரும்போதெல்லாம் அவர்களின் விருப்பம் மாறுகிறதாயிருக்கவேண்டும். பிள்ளைகளின் இருதயம் கதை கேட்க மிகவும் ஆவலுள்ளதென்பது முக்கிய விஷயமே. இந்தக் கதைகள் இருதயத்தில் படுமானால், பிள்ளைகளின் அறிவோடு கூட்டப்படுகிற வெறும் படிப்பினைகளும் சங்கதிகளுமாக அல்ல, நாம் விரும்புகிற நற்குணங்களை அவர்களில் உண்டாக்கக் கூடியதாயுமிருக்கும். சன்மார்க்கத்துக்குரிய நன்னெறிகளை அவர்களுடைய மனதில் உணர்த்தவேண்டுமானால், கதை சொல்லும்போது பிள்ளைகளின் முகத்தையே கவனிக்கவேண்டும்.

5. முகவுரையை மிக ஞானமாய்த் தெரிந்தெடுத்து, பிள்ளைகளின் கவனத்தை ஆரம்பத்திலிருந்தே கவர்ந்துகொள்ளவேண்டும்.

முகவுரை

பிள்ளைகளின் விருப்பம் பாடத்தில் உண்டாகுமுன், படிப்பிக்கும் பாகத்தை அவர்களுக்கு வாசிப்பது தப்பு. அதற்காகப் பாடத்தின் பொருள்விஷயமாய்ச் சில முக்கியமான கேள்விகளைக் கேட்கலாம்; அல்லது சென்ற வாரத்தின் பாடத்திலிருந்து சில கேள்விகளைக் கேட்டு அந்த விதமாய் இந்த வாரத்தில் படிப்பிக்கப்போகிற பாடத்தை வருவிக்கலாம். வேளாவேளைகளில் சிறு கதைகளினால் பாடத்தைத் தொடங்கலாம். அல்லது திடீரென்று 'நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்' என்று தொடங்கலாம். உபாத்தியாயர் பாடத்தின் துவக்கத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்; எப்போதும் ஒரேமாதிரியாகத் தொடங்காமல் வெவ்வேறு விதமான நல்ல மாதிரியாய்த் தொடங்கவேண்டும். எந்தவிதமான முகவுரையை உபயோகித்தபோதிலும், அது முகவுரையாயிருப்பதால் சுருக்கமாயிருக்கவேண்டுமென்பதை

மனதில் வைக்கவேண்டும். கூடிய சீக்கிரம் அந்த நாளுக்குரிய கதையை ஆரம்பித்து நடத்தவேண்டும்.

மாணாக்கரின் தரத்திற்குத் தகுந்தபடி பின்வரும் அத்தியாயங்களில் அவர்களுடைய குணங்களுக்கும் விருப்பத்திற்கும் தகுந்தாற்போல் விபரமாய்ப் பாடங்களைக் கவனித்து எழுதும்போது, இந்தப் பொதுவான விதிகள் சில சமயங்களில் மட்டுப்படுத்தப்பட்டும், சில சமயங்களில் அதிகப்படுத்தப்பட்டும் காணப்படும். ஆனாலும் இதைப் போலொத்த ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையை உபாத்தியாயர் கையாடுவாரானால் வாரந்தோறும் புதுப்பாடம் ஆயத்தம் செய்யும் போது மிகவும் உதவியாயிருக்கும்.

முதலாவது அத்தியாயத்தின்பேரில் கேள்விகள்

1. பாடத்தை ஆயத்தஞ்செய்யாத உபாத்தியாயருக்கு உண்டாகிற முக்கியமான கஷ்டங்கள் எவை?

2. பாடத்தில் அதிகமான பொருள் இருக்குமானால் படிப்பிக்கும்போது இடைஞ்சல் உண்டாகும் என்பதை உம்முடைய சொந்த வார்த்தைகளில் எழுதும்.

3. ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துப் பாடத்தை ஒழுங்காய் ஆயத்தம் பண்ணுவதற்கு ஐந்து விதிகள் கூறும்.

4. தான் ஆயத்தம்செய்யும் பாடத்தின்பேரில் உபாத்தியாயர் கேட்கும்படியாய்க் குறிக்கப்பட்ட மூன்று கேள்விகள் எவை?

5. வகுப்பில் படிப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய சத்தியத்தை சாதனையில் உபயோகிக்கப்படும்படி பார்க்கவேண்டிய அவசியம் என்ன?

6. ஒவ்வொரு பாடத்தின் போக்கிலும் ஒரு கதை இருக்கவேண்டும் என்பதின் அவசியம் என்ன?

7. ஒரு கதையை நடக்கிறபிரகாரம் காணக்கூடிய விதமாய்ச் சொல்லுவதென்றால் என்ன என்பதை உம்முடைய சொந்த வார்த்தைகளில் எழுதும்.

8. வேதக்கதை சொல்லும் உம்முடைய மனோபாவனையை எவ்வளவு தூரம் உபயோகிப்பீர்?

9. வேதக்கதை சொல்லுவதின் நோக்கம் என்ன?

10. ஒவ்வொரு பாடத்திற்கும் நல்ல முகவுரையை ஆயத்தம்செய்ய வேண்டிய அவசியம் என்ன?

பிரிவு I

பாலகர்

அத்தியாயம் II

குணாகுணங்கள்

இளமைப் பருவத்தை அனுபவ சித்தாந்தத்திற்காக, ஒவ்வொன்றிற்கும் நாலு வருஷங்கள் வித்தியாசப்பட்ட நாலு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இது நாம் எளிதில் மனதில் வைக்கக்கூடிய பிரிவுகள்.

1 வயதுமுதல் 4 வயதுவரை: குழந்தைப் பருவம்.

4 வயதுமுதல் 8 வயதுவரை: இளம் பாலியப் பருவம்; பாலர் வகுப்பு.

8 வயதுமுதல் 12 வயதுவரை: பிந்தின பாலியப் பருவம்; இளமாணாக்கர்.

12 வயதுமுதல் 16 வயதுவரை: இளமைப் பருவம்; வாலவயதுள்ள மாணாக்கர்.

இதில் நமது கவனத்திற்கு முதலாவது வருகிறவர்கள் பாலர் வகுப்புப் பிள்ளைகள். இந்த வயதில்தான் பிள்ளைகள் ஓய்வுநாள் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும்.

இப்பிள்ளைகளின் இரண்டு குணங்கள் கற்பிக்கும்போது கஷ்டம் உண்டாக்கும்; அவையாவன: அமைதியின்மை, அறிவின் குறைவு.

முக்கிய குணாகுணங்கள்

ஆனால் உபாத்தியாயர் பக்கத்தில் பிள்ளைகளின் மனோபாவனையும், விநோதபுத்தியும், உருவகப் படங்களை நேசிக்குங் குணமும், ஆச்சரியமான நம்பிக்கையுமுண்டு.

பிள்ளையின் அறிவும் மனோதத்துவங்களும் மிகச் சொற்பம். அது அறிந்து பழகிக்கொள்ளக்கூடிய சமயம் இன்னும் உண்டென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ராஜா, பட்டணம், தேசம், சேனை இவைகளைப்பற்றிக்கூட நல்ல அறிவு இல்லை. இன்னும் அனுபவமில்லாதபடியால் இந்த அறிவு மாணாக்கனுடைய

மனோதத்துவத்திற்கு மேலானது பிள்ளைகளுக்குப் பழக்கமாயிருக்கிறவைகளையும், தினந்தோறும் அவர்கள் அருகாமையிலிருக்கிற விஷயங்களையும்பற்றித்தான் நன்றாய் அறிந்துகொள்ளுவார்கள். பார்க்கிறதும், தொடுகிறதும், ருசி பார்க்கிறதுமான விஷயங்களைத் தள்ளி மற்றவைகளைப்பற்றி ஒன்றுந் தெரியாது. பேசக்கூடிய வார்த்தைகளும் சொற்பந்தான். பாலர் வகுப்புப் பிள்ளைகள் அநேகரிடத்தில் அவர்கள் தினசரி உபயோகிக்கிற நாடோடிய வார்த்தைகள்தான் நாம் எதிர்பார்க்கக்கூடியவை.

சிறு பிள்ளையினிடத்தில் மனோபாவனை அதிகமாயுண்டு. மெய்யான விஷயத்திற்கும், மெய்யல்லாத விஷயத்திற்கும், கூடிய காரியத்திற்கும், கூடாத காரியத்திற்கும் வித்தியாசப்படுத்தும் பகுத்தறிவு இல்லை. ஆகையால் உலகத்திலுள்ள அநேக விஷயங்கள் புதிதாய்ப் படிப்புத் தொடங்கின பிள்ளைகளுக்கு விபரீதமாயிருக்கும். ஆகையால் பிள்ளையின் மனோபாவனைக்கு உலகமுழுவதும் விரும்பப்படத்தக்கதாயிருக்கும். பிள்ளைக்கு விநோத புத்தி ஏராளம். ஆகையால் அதின் துடிதுடிப்புக்கு ஏற்றவிதமாய்ப் படிப்பிக்கும் சூட்சத்தைக் கண்டுகொள்ளுகிறோம். பிள்ளையானது தன்னைச் சூழ்ந்திருக்கும் உயிருள்ள அல்லது உயிரற்ற எந்த வஸ்துவைப்பற்றியாவது கதை கேட்டு அதைப்பற்றி அறியக்கூடியதை எல்லாம் அறிய விரும்பும்.

• படங்கள் விசேஷமாய்த் தானறிந்த வஸ்துக்களைப்பற்றியதாயிருந்தால் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். அவைகள் பழைய சிநேகிதர். பிள்ளையின் கண்கள் படத்தின்மேல் வெகு ஆவலாய்ச் செல்லுகிறது. தான் அறிந்திருக்கிறபடியே உயிராயிருக்கிறதாக யோசிக்கிறது. இந்தவிதமாய்ப் பாடமானது அவர்களுக்கு நன்றாய் விளங்கக்கூடியதா யிருக்கிறது.

பிள்ளையின் நம்பிக்கைதான் அதின் மார்க்கத்துக்கு விசேஷித்த குறிப்பு. நாம் சொல்லுவதை யெல்லாம் உடனே நம்புகிறது.

மார்க்கம்

ஆகையால் இந்தச் சமயத்திலேதான் விசுவாசத்தின் அஸ்திபாரம் மிகவும் பலமாய்ப் போடப்படவேண்டும். இந்த வயதிலே தேவனுடைய அதாவது இயேசு கிறிஸ்துவினுடைய பிரசன்னம், கவலை, அன்பு இவை நன்றாய் அறிந்துகொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும். இயற்கையமைப்

பை அவன் சுற்றிப்பார்க்கும்போது அவையெல்லாம் தேவனுடைய வல்லமை ஞானம் இவைகளைப்பற்றிச் சாட்சி கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். இவை எல்லாவற்றிலும் தேவனைக் காணும்படியாகக் கற்பிக்கவேண்டும். தேவனைப் பிரியப்படுத்தும்படியாகச் சரியானவைகளைச் செய்யும்படியான விருப்பத்தை உண்டாக்கவேண்டும். காணக்கூடாத உலகம் சீக்கிரமாயும் நிச்சயமாயும் வரும். சில சமயங்களில் பிள்ளைகளின் ஜெபம் நேராயும் மனதை உருக்கக்கூடியதாயுமிருக்கும். இந்த வகுப்பில் வேலை சரியாய்ச் செய்யப்படுமானால், வருகிற எல்லா வருஷங்களிலும் உறுதியாயும் ஸ்திரமாயும் நிற்கக்கூடிய தெய்வ விசுவாசத்தை விதைக்கிறோம்.

மேற்கண்ட விஷயங்களிலிருந்து மூன்று காரியங்களை அனுமானிக்கலாம். முதலாவது, கதைகள்தான் பிள்ளைகளின் கவனத்தைக் கவரக்கூடும். இரண்டாவது, பிள்ளைகளின் பிரியத்திற்கும் அனுபவத்திற்கும் தகுந்த விதமான கதை சொல்லப்படவேண்டும். மூன்றாவது, சாதாரணமான வார்த்தைகளில் கதை சொல்லப்படவேண்டும். பரத்துக்குரிய விஷயங்களில் ஆசையுண்டாக்கவேண்டுமானால் பிள்ளைக்கு விளங்கக்கூடிய பூலோக விஷயங்களோடு சம்பந்தப்படுத்திக் காட்டவேண்டும். பிள்ளைக்குத் தெரிந்த ஒரு விஷயத்தோடு சம்பந்தப்படுத்தவேண்டுமென்பதை இது விளக்கிக் காட்டுகிறது. பிள்ளைக்குச் சம்பந்தப்படாத விஷயங்களைப் படிப்பிக்கக்கூடாது. நாம் படிப்பிப்பதற்கும் பிள்ளை முன்னமே அறிந்திருக்கும் விஷயத்திற்கும் சம்பந்தம் ஏற்படவேண்டும். பிள்ளை அறியாத விஷயத்திலிருந்து படிப்பிக்கக்கூடாது. இவ்விதமாய் நம்முடைய புதிதான அறிவை நுழைக்கக்கூடிய வழி உண்டாகிறது.

கதை கவர்ச்சிகள்

பிள்ளைகளுக்குக் கதையின்மேல் விருப்பம் உண்டாகவேண்டுமானால் சொல்லப்படும் கதைகள் முக்கியமாய் அவர்கள் அறிந்து பழகின விஷயங்களைப் பற்றினதாயிருக்கவேண்டும். தங்களைப்போன்ற மற்றச் சிறு பிள்ளைகள், அவர்களைப்பற்றின சங்கதிகள், முயற்சிகள், அனுபவங்கள் இப்படிப்பட்டவைகள் அவர்களுடைய கவனத்தை அதிகப்படுத்தும். மோசேயைக் கண்டெடுத்தல், நாகமானுடைய அடிமைப் பெண், சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான், இயேசு பாலகனின்

இளமைப் பருவம், யவீருவின் குமாரத்தி இவைகள் கதைப்போங்காய்ச் சொல்லப்படுமானல், பாலர் வகுப்புப் பிள்ளைகளின் மனதில் வல்லமையாய்க் கிரியை செய்யும். ஆனல் இதைவிட அதிகமாய் இயற்கையான விஷயங்களைப்பற்றிய கதைகள் பிள்ளைகளின் கவனத்தைக் கிரகிக்கக்கூடும். வேத பாடங்களைத் திருஷ்டாந்தப்படுத்தி வற்புறுத்திச் சொல்லுவதற்கு மிருகங்களும் பட்சிகளும் என்றும் புதிதான விஷயங்கள். அவைகளுக்கும் பிள்ளைகளைப்போலவே அனுபவமும் தேவையான விஷயங்களுமுண்டு. ஜீவியமும் மிகவும் சுலபமானது. அவைகளெல்லாம் தன்னைச் சந்தோஷப்படுத்தும்படியாகவே உண்டாக்கப்பட்டவைகளாகத் தோன்றலாம். பிள்ளைக்குத் தெரிந்த ஒரு மிருகத்தைப்பற்றி அல்லது பறவையைப்பற்றிக் கதை சொல்லப்போகிறேன் என்று சொன்னவுடனே, பிள்ளைக்கு எவ்வளவு ஆனந்தம்! புஷ்பங்களும் மரங்களும் அப்படியே பிள்ளையின் அன்புக்குரியவை' ஆனல் இவைகள் உயிருள்ள நடமாடுகிற மிருகங்களைப்போல அவ்வளவு விரும்பப்படத்தக்கதல்ல. ஆனல் புஷ்பங்களைப் பிடுங்கி தாராளமாய்க் கையில் வைத்துக் காட்டலாம். கரிசனையோடே வேதாகமத்தில் ஆராய்ந்து பார்ப்போமானல் அது இயற்கையமைப்பால் நிறைந்திருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம்.

பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்குச் சரித்திரப்போக்கு அவசியமில்லை; ஏனென்றால் அக்காலத்து ஜனங்களின் காலவறுதி, சரித்திர முடிவு, காலக்கிரமம், இவைகளின்மேல் அவர்களுக்கு விருப்பம் உண்டாகிறதில்லை. அவர்களுக்கு ஏற்றபடி கதைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். கதை சொல்லும்போதே மார்க்கத்துக்கு அவசியம் தேவையான விஷயத்தைத் தெளிவாயும் திட்டமாயும் புகட்டவேண்டும். அப்படிச் செய்வதினல், அன்புள்ள பரம பிதாவுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்கிற அந்தச் சுளுவான கடமையைச் செய்யும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஆழ்ந்த பொருள்களையும், மறைவான விஷயங்களையும், இந்த வகுப்பில் சொல்லாதபடி பின்னல் சொல்லும்படியாக வைத்துக்கொள்ளவேண்டும். கதை சொல்லும்போது வேதத்திலுள்ள சாராம்சத்தையே உண்மையாய்ச் சொல்லவேண்டும். ஏனென்றால் மறுபடியும் அந்தக் கதை சொல்லக் கேட்கும்போது அதில் ஏதாவது விகற்பமிருக்குமானல் அதைக் கண்டுபிடித்து அந்த

மாறுபாட்டிற்காக அதிக விசனப்படுவார்கள். கெட்ட குமாரனுடைய உவமையில் பார்க்கிற பிரகாரம், கூடும்போதெல்லாம் கதையிலுள்ள குணகுணங்களைப் பிள்ளைகளே கண்டுகொள்ளும்படி விட்டுவிடவேண்டும். இப்படிச் செய்வதினால் கதையின் உண்மை விளங்கும்.

இரண்டாவது அத்தியாயத்தின்பேரில் கேள்விகள்

1. ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தில் பாடஞ் சொல்லும்போது, பாலர் வகுப்புப் பிள்ளைகளிடத்தில் உபாத்தியாயருக்கு உதவியாயிருக்கிற இரண்டு லக்ஷணங்களையும், பாடத்திற்குத் தடையாயிருக்கும் இரண்டு லக்ஷணங்களையும் எழுதும்.

2. பிள்ளையின் அறிவின் குறைவு பாடத்தைக் கெடுக்கும் என்பதை விவரித்துக் காட்டும்.

3. பிள்ளையின் மனோபாவனையும், விசாலித்த விநோதபுத்தியும் படிப்பிக்கும் வேலையைச் சுளுவாக்குமா? அல்லது கஷ்டப்படுத்துமா? முகாந்தரங்களோடு விவரியும்.

4. ஐந்து வயதுள்ள சிறுபிள்ளையின் மார்க்கத்துக்குரிய குணகுணங்களை உம்முடைய சொந்த வார்த்தையில் சுருக்கி எழுதும்.

5. பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கதையினால் உண்டாகும் மனக்கவர்ச்சிகள் என்ன?

6. பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லும்போது கவனிக்கவேண்டிய சில முறைகளை எழுதும்.

அத்தியாயம் III

ஒரு சரித்திரம்—தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டது

பாடம்—தானி. 6.

தங்கவாக்கியம்.—'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.' 1 பேது. 5. 7.

ஜெபம்செய்து பாடத்தை வாசித்த பிற்பாடு, இந்தப் பாகத்தி லிருந்து ஆவிக்குரிய சத்தியத்தை முதலாவது படிப்பிக்கவேண்டு மென்று நிச்சயித்துக்கொள்ளவேண்டும். தங்க வாக்கியத்தில் அவர் உங்களை விசாரிக்கிறார் என்றிருக்கிறது. அதை இன்னும் சுளுவாக் கிச் சொல்லவேண்டுமானால் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காகக் கவலைப்படுகிறார் என்றும் சொல்லலாம். இதுதான் பிள்ளைகள் மன தில் பதியச் செய்யவேண்டிய முக்கிய சத்தியமாகையால், பாடம் ஆயத்தம் செய்யும்போதே இதை நம்முடைய மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். தானியேல் நல்ல மனிதன் ஆகையால் தன்னு டைய எல்லாக் காரியங்களிலும் கர்த்தர் காப்பாற்றுவார் என்று அவர் பேரிலே சார்ந்திருந்தான். இந்தப் பாடத்திலிருந்து தேவன் அந்தக் காலத்தில் சிங்கங்களின் மத்தியிலிருந்து தானியேலை எப்படிக் காப் பாற்றினாரோ அப்படியே இந்தக் காலத்திலும் தினசரி ஜீவியத்தில் நம்மையும் காப்பாற்றக்கூடியவராயிருக்கிறார் என்று பிள்ளைகளுக்கு எடுத்துக் காண்பிக்கவேண்டும். காய்ச்சல் முதலிய வியாதிகளிலிருந் தும், அபாயம், பாம்பு, தேள் முதலிய விஷ ஜெந்துக்களினின்றும் காக்கப்படவேண்டும். இவைகளைப் பிள்ளைகளிடமிருந்தே வருவிக் கலாம். இதைவிட அதிகமாய் உள்ளான பாவத்தினின்றும் சாத்தா னுடைய மோசத்தினின்றும் தற்காக்கப்படவேண்டியது அவசியம். இந்த மோசங்களினின்றும் தேவன் நம்மைத் தற்காக்கக்கூடும், ஆனால் நாம் தானியேலைப்போல் இருக்கவேண்டும். எல்லாச் சமயங்களிலும் தேவன் தன்னைச் செய்யும்படி விரும்பினதையே செய்தான்; தேவனை நோக்கி ஜெபித்தான்; தேவனை நேசித்தான்; தேவ சித்தத்தின்படி செய்தான். பிள்ளைகள் திட்டமானபடி கீழ்ப்படியவும் ஜெபிக்கவும் உற்சாகப்படுத்தவேண்டும். பிள்ளைகளிடமிருந்தே பின் வருபவை களை வருவிக்கலாம்: தாய்க்கு உதவிசெய்தல், தம்பி தங்கச்சிமாருக் குப் பட்சங்காட்டுதல், சொன்னபடி செய்தல், தங்கள் விளையாட்டுச் சாமான்களை மற்றப் பிள்ளைகளும் விளையாட இடங்கொடுத்தல், காலை மாலை ஜெபம்செய்தல். இப்படிப்பட்டவைகளைச் செய்தல் தேவ னுக்குப் பிரியமென்று பிள்ளைகளுக்கு உணர்த்திக் காட்டவேண்டும். இவ்விதமாய் நடந்துகொண்டால் தானியேலைப்போல இருக்கிறார்கள் என்றும், அப்படியானால் அவனுக்குக் கிடைத்த பராமரிப்பை நாமும் எதிர்பார்க்கலாம் என்றும் அவர்கள் உணரும்படி செய்யவேண்டும்.

நாம் முந்தின அத்தியாயத்தில் சிறு பிள்ளைகளின் கவனத்தைக் கவரக்கூடியது மிருகங்களின் சரித்திரம் என்று பார்த்தபடியால்,

முக்கிய கவர்ச்சி

இங்கே முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது சிங்கங்களின கெபிதான். மற்றொரு பிரியமான பாகம் தூதர்கள். தூதர்களைப்பற்றி ஞானமாய் இந்தப் பிள்ளைகளோடே பேசுவோமானால், அவர்களுக்கு மெத்தப் பிரீதியாயிருக்கும். நல்ல தூதர்களைப்பற்றிப் பிள்ளைகளுக்கு அதிகமாய்த் தெரியாதிருக்கலாம். மத். 18. 10-ஐ மனதில் வைத்துக்கொண்டு, பிள்ளைகளுக்குத் தூதர்களைப்பற்றி வெகுதெளிவாய்ச்சொல்லப்பிரயாசப்படவேண்டும்.

மனதில் படம்போல் வைக்கக்கூடிய முக்கியமான விஷயங்களைக் கதையிலிருந்து தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும். இந்தக் கதையி

கதை

லிருந்து ஐந்து விஷயங்களை அனுமானிக்கலாம். உபாத்தியாயரின் மனதில் தெளிவாய் உருவாகுமட்டும் ஒவ்வொரு விஷயத்தையும் விவரமாயும் தெளிவாயும் யோசித்துப் பார்க்கவேண்டும். அவைகளை வரிசையாய்ப் பார்ப்போம்.

1. தானியேல் தன்னுடைய ஜன்னலிலிருந்து ஜெபித்தல்

தானியேல் நல்ல மனுஷனும் மெய்த்தேவனை வணங்கினான். ஆனால் விக்கிரகாராதனைக்காரனான ராஜாவைச் சேவித்தான். தானியேலின் துஷ்ட சத்துருக்கள் நாற்பது நாள்வரையில் தேவனை நோக்கி ஜெபம்செய்தால் சிங்கங்களின் கெபியில் போடப்படுவார்களென்று ஒரு பத்திரம் ராஜாவினால் உண்டாகும்படி செய்துகொண்டார்கள். பிற்பாடு அவர்கள் தானியேலுடைய தோட்டத்தில் மரங்களின் மறைவில் ஒளித்துக்கொண்டு, அவன் இன்னும் தேவனை நோக்கி ஜெபிக்கிறானா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கையில், தானியேல் தோட்டத்தில் காணப்படும்படியாகப் பெரிய திறந்த ஜன்னலண்டை வருகிறான். அவனை வர்ணி: விருத்தாப்பியன், அன்புள்ள முகப் பார்வையுடையவன்; நீண்ட வெண்மையான தாடியுண்டு. தன்னுடைய வழக்கம்போல முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறான்.

2. சத்துருக்கள் ராஜாவினிடத்தில் வருதல்

ராஜா சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். இளநீலமும் இரத்தாம்பரமும் கலந்த தங்க உடுப்பு உடுத்தி, கையில் செங்கோல் பிடித்து

தலையில் கிரீடம் அணிந்து இருக்கிறான்; அவனைச் சுற்றிலும் போர்ச் சேவகர் ஈட்டிகளைப் பிடித்து நிற்கிறார்கள். பையன்கள் பெரிய விசிறிகளைப் பிடித்து விசுறுகிறார்கள். தானியேலுடைய சத்துருக் களோ வருகிறார்கள். வந்து ராஜாவுக்கு முன்பாக முழங்காலில் நின்று தானியேல் பத்திரத்திற்குக் கீழ்ப்படியவில்லையென்று சொல்லுகிறார்கள். ராஜாவுக்கோ தானியேலின்பேரில் அதிகப் பிரியம். ஆகையால் சிங்கங்களின் கெபியில் போடப்படாதபடி அவனைத் தற்காக்க முயற்சிக்கிறான்.

3. தானியேல் கெபியில்

இது கற்சுவருள்ள ஒரு குழி தரைக்குக் கீழே உள்ளது. துர்நாற்றமும் அவலட்சணமுமுள்ள எலும்புகள் அங்குமிங்கும் கிடக்கிறது. அங்கே சிங்கங்கள் கபில வர்ணமுள்ள பிடரி மயிர்களோடு வாலை அசைத்து கெர்ச்சித்து அந்த எலும்புகளை மோந்து புதிதான ஆகாரத்திற்காக எதிர்பார்த்து உலாவிக்கொண்டிருக்கிறது.

தானியேலை அங்கே போடுகிறார்கள். அவனுடைய கையில் தன்னைக் காத்துக்கொள்ளும்படியான ஆயுதம் ஒன்றுமில்லை. கெபியின் வாசலில் பெரிய கல்லொன்று வைக்கப்படுகிறது. தானியேல் பயமற்றவனாய் தேவனை நோக்கி ஜெபித்து நிற்கிறான். (இங்கே தானியேலுடைய உறுதியான விசுவாசத்தைக் கவனியுங்கள்.) சரியான சமயத்தில் அவர் தம்முடைய தூதனை அனுப்புகிறார்.

4. ராஜாவுக்குத் தூக்கம் வரவில்லை

ராஜாவின் படுக்கை அறையும் அழகிய படுக்கையும் (எஸ். 1. 6, 7). ராஜா தூக்கமற்று நிர்ப்பாக்கியமாய் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருக்கிறான். சாப்பாடு கீதவாத்திய முதலிய எல்லா சௌக்கியங்களையும் மறந்துவிடுகிறான்.

5. காலையில் ராஜா சிங்கங்களின் கெபிக்கு வருகிறான்

ராஜா அழகிய உடைதரியாமல், களைத்த முகப்பார்வையோடு தானியேலைப்பற்றிய பயத்தோடே நிர்விசாரியாய் இருக்கிறான். ‘உன் தேவன் உன்னைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்’ என்று தானியேலைக் கூப்பிட்டுச் சொன்னான்.

தானியேலின் மறுமொழி; சுற்றி நின்றவர்கள் ஆச்சரியப்படுகிற தையும் ராஜாவின் சந்தோஷத்தையும் பார். தானியேல் வெளியே சுகபத்திரமாய்க் கொண்டுவரப்படுகிருன். அவனுடைய சத்துருக் கள் அவனுக்குப் பதிலாகப் போடப்படுகிருர்கள்.

இவ்விதமாக ஐந்து படங்களை வெகு தெளிவாயும் திட்டமாயும் ஆயத்தம் செய்தோம். இப்போது இவைகளைச் சொல்லலாம். உபாத் தியாயர் மனதிலுள்ள பிரகாரம் பிள்ளைகளுடைய மனதில் பதியச் செய்யவேண்டுமானுல் உயிருள்ள பிரகாரமாய் உற்சாகமாய்ப் படிப் பிக்கவேண்டும். அவர்களுடைய எண்ணத்தில், தேவனை நேசித்து அவருக்கு ஊழியஞ் செய்கிறவர்களின்மேல் அவருடைய ஆச்சரிய மான பாராமரிப்பைப்பற்றி பதியச் செய்வதுதான் இதின் முக்கிய நோக்கம்.

கதையின் ஆரம்பமானது, பிள்ளை அறிந்த அறிவிலிருந்து பாடத் தை இணைக்கக்கூடியதும், பிள்ளையின் விநோத புத்தியை எழுப்பி விடக்கூடியதுமான சம்பந்தமுடையதாயிருக்க வேண்டும்.

முகவுரை

இவ்விஷயத்தில் பிள்ளைகளின் ஆசையை எழுப்பிவிடும்படி சிங்கங்களைப்பற்றிச் சில கேள்விகளைக் கேட்கலாம். சிங்கத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அது எவ்வளவு பெரிது? நீ அதினிடத்தில் போனுல் அது பட்சங்காட்டுமா? அல்லவென்ருல் என்ன செய்யும்? இப்படிக் கேள்வி கேட்டபிறகு 'நான் உங்களுக்குச் சிங்கங்களைப் பற்றிக் கதை சொல்லப்போகிறேன்' என்று சொல்லுங்கள்.

பாடக் கதையைச் சொல்லத் தொடங்குமுன் இப்போது பிள்ளை களின் கவனமெல்லாம் படிப்பிக்கத் தயாராயிருக்கிறது. கதை சரி யாய்ச் சொல்லப்படுமானுல், பாடம் முடியும்வரை பிள்ளைகளின் கவ னத்தைச் சிதறவிடாமல் பார்த்துக்கொள்ளுவது கஷ்டமல்ல.

அத்தியாயம் IV

ஒரு உவமை—இரண்டு வீடுகள்

பாடம்—மத். 7. 21-27. லூக். 6. 46-49.

தங்கவாக்கியம்.—'திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.' யாக். 1. 22.

ஆவிக்குரிய பாடம்

தங்கவாக்கியத்தில், இதில் அடங்கியிருக்கிற ஆவிக்குரிய பாடம் வெகு தெளிவாயிருக்கிறது. இப்பொழுது நாம் படிப்பிக்கும் பாடத்தில், பிள்ளைகள் வகுப்பில் கேட்கிறதைச் செய்யும்படி வற்புறுத்துவதே நம்முடைய முழு நோக்கமாயிருக்கவேண்டும். அவர்களுக்குள் அந்தவிதமான விருப்பத்தை பலப்படுத்தவேண்டும். இந்த விஷயத்தைக்குறித்து நாம் அஜாக்கிரதையாயிருக்கக்கூடாது.

அனுபவ முறை

இந்தப் பாடத்தைக் கற்பிக்கும்போது முன் நடந்த பாடங்களை மறுபடியும் வினவலாம். நாம் மூடரா? ஞானிகளா? நாம் எப்படிச் சொல்லக்கூடும்? முன் நடந்த பாடங்களைக் கேட்டு அதன்பிறகு எப்படி நடந்துகொண்டோம் என்பதைக் கவனிக்கும்போது சொல்லலாம். கடந்த ஓய்வுநாட்களில் பிள்ளைகளுக்கு நடந்த உபதேசங்களை நினைப்பூட்டி அவர்கள் அதற்கிசைய எப்படி நடந்துகொண்டார்கள் என்று அறியலாம். இது மிகவும் உதவியாயிருக்கும். ஏனென்றால் இது அவர்களுடைய பழைய ஆசையை எழுப்பிவிட்டு, தாங்கள் இதுவரையும் கவலையீனமாய் நடந்துகொண்ட விஷயங்களில் ஜாக்கிரதையாயிருக்க ஏவிவிடும்.

விசேஷித்த மனக் கவர்ச்சி

சாதாரணமாய்ப் பிள்ளைகள் நடக்கிற சங்கதியைக் கவனித்து, அவைகள் நடந்தேறும் விதத்தை ஆராய்ந்தறிய ஆசைப்படுகிறார்கள். ஆகையால் இந்தச் சரித்திரத்தில் சொல்லப்படும் வீடுகட்டும் தொழில் பிள்ளைகளுக்குப் பிரியத்தை உண்டாக்கக்கூடியது. ஒரு சுவர் அல்லது வீடு கட்டப்படும்போது அதில் சேர்க்கப்படும் வஸ்துக்களைப் பார்த்து பிள்ளைகள் சந்தோஷப்படுகிறார்கள்.

பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு ஜலப்பிரளயமென்றால் பயத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தபோதிலும் வெகு பிரியமான விஷயம் தான். அப்பேர்ப்பட்ட ஒரு விஷயத்தைப் பார்க்காவிட்டாலும், தங்கள் மனதில் மனோராஜ்யம் பண்ணிக்கொள்ளக்கூடும்.

அஸ்திபாரத்தைப்பற்றிப் பிள்ளைகள் அவ்வளவு பெரிய காரியமாக எண்ணுகிறதில்லை; ஏனென்றால் அது அவர்கள் அனுபவத்திற்கு அவசியமானதல்ல. ஆனால் அஸ்திபாரத்தைப்பற்றித்தான் மிகவும் கவலையோடே கற்றுக்கொடுக்கவேண்டும். இதுதான் கதையின் முக்கிய அங்கம்.

கதை

இந்த உவமையைக் கதைப்போங்காய்ச் சொல்லலாம். இந்தப் பாடத்தை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1 வீடுகட்டும் இரண்டு மனிதர்

ஒவ்வொருவனும் ஒவ்வொரு வீட்டைக் கட்டுகிறான். ஒருவன் மெதுவான மணலின்மேல் கட்டுகிறான். மற்றவன் மண்ணைத் தோண்டித் தோண்டிக் கற்பாறை கண்டுபிடிக்கும்வரை தோண்டுகிறான். அந்தக் கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டுகிறான். முதல்வனுடைய வேலை இலேசு. அவனுடைய வேலை வெகு சீக்கிரத்தில் முடிந்துபோயிற்று. வீடு எழும்புகிற விதத்தைக் கவனி. கடைசியாக இரண்டு வீடுகளும் கட்டிமுடிந்தது. இரண்டும் சேர்த்தியாய் வசதியாய்த்தான் இருக்கின்றன. ஜனங்களும் அங்கே குடியிருக்கிறார்கள்.

2. புசல்

மேகங்கறுத்து மழை பொழிகிறது, காற்று வீசுகிறது, மின்னல் மின்னுகிறது. ஆற்றில் ஜலம் நிறைந்துகொண்டே வருகிறது, அப்புறம் கரைபுரண்டோடுகிறது. இந்த வீடுகளைச் சுற்றிலும் வெள்ளம் இரைச்சலிட்டுப் பாய்கிறது. மழையும் காற்றும் பலமாய் மோதினபோதிலும், இரண்டாவதானவனுடைய வீடு பத்திரமாய் எவ்விதத் தீங்கும் நேரிடாதபடி நிற்கிறது; ஆனால் முதல்வனுடைய வீட்டிற்கு ஏதோ நேரிடுகிறது. தண்ணீர் வீட்டினடியில் போய் மணலை அரித்துக்கொண்டுபோகிறது. வீடு கலகலத்துப் போகிறது. அதிலுள்ள

ஜனங்கள் பயப்படுகிறார்கள். மறுபடியும் காற்று அதின்மேல் வீசும் போது, வீடு விழுந்து அழிந்துபோகிறது. அது நிற்கும்படியான அஸ்திபாரம் ஒன்றுமில்லை.

3. புசலுக்குப்பிறகு

மேகம்போய்ச் சூரியன் பிரகாசிக்கிறது. மின்னல் இல்லை, காற்று நன்றாயிருக்கிறது. ஆற்றில் தண்ணீர் மட்டாய் ஓடுகிறது. பட்சிகள் பாடுகின்றன. ஒரு வீடு பத்திரமாயிருக்கிறது, அதிலுள்ள ஜனங்கள் சந்தோஷமாயிருக்கிறார்கள். மற்ற வீடு அங்கே காணப்படவில்லை, அது இருந்த இடமும் தெரியவில்லை.

இந்தக் கதையின் அர்த்தம் சொல்லும்போது, நடக்கையில் காட்டுவதற்கு எப்படிச் செய்யவேண்டுமென்று படிப்பிக்கவேண்டும். விஸ்தரித்துக் காட்டும்போது சுருக்கமாயும் தெளிவாயும் சொல்லவேண்டும். என் ஒரு வீடு நின்றது, மற்ற வீடு விழுந்தது என்று அவர்களையே சொல்லச் செய்து, இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை அவர்களையே கண்டுகொள்ளச் செய்யவேண்டும். சில மனிதர் கற்பாறையின் மேல் கட்டின புத்தியுள்ள மனுஷனைப்போல் இருக்கிறார்களென்றும், சிலர் மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனைப்போல் இருக்கிறார்களென்றும் கர்த்தராகிய இயேசு சொன்னார். அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதின்படி செய்கிறவர்கள் புத்தியுள்ளவர்கள். கஷ்டமாகிய புசல் அடித்து, மரணமென்னும் அலை மோதினாலும் அவர்கள் பயப்படமாட்டார்கள். அவர்களுக்கு மோசமில்லை. கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டின மனுஷனைப்போல மனப் பாக்கியமும் சந்தோஷமுமாயிருப்பார்கள்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்டும் அதின்படி செய்யாதவர்களோ அந்தப் புத்தியில்லாத மனுஷனைப்போலிருக்கிறார்கள். அவர்களுக்கு மெய்யாகவே பெருங்கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும். அவர்களைப் பலப்படுத்தவும், கஷ்டம் வரும்போது சுகமாய்க் காக்கவும் அவர்களிடம் ஒன்றும் இல்லை. (இங்கே அவர்களுடைய நடக்கையைப்பற்றிச் சொல்லலாம்.)

வீடு கட்டுகிறதின்மேல் பிள்ளைகளுடைய விருப்பமெல்லாம் இருக்கும் என்று பார்த்தோம். ஆகையால் அதையே நம்முடைய முகவுரையாக வைத்துக்கொள்ளலாம்.

வீடு கட்டப்படும்போது எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? மேலேயிருந்து கட்டுகிறார்களா? முதலாவது என்ன போடுகிறார்கள்? (அஸ்திபாரம் என்று சொல்லலாம்.) கர்த்தரா

முகவுரை

கிய இயேசு வீடு கட்டின இரண்டு பேரைப்பற்றிச் சொன்ன விஷயந்தான் இன்றைக்கு நம்முடைய பாடக்கதை.

அத்தியாயம் V

சன்மார்க்க பாடம்—பாக்கிய வாழ்வு

பாடம்—1 சாமு. 1. 2.

தங்கவாக்கியம்.—'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.' மத். ͡ 5. 8.

இந்தப் பாடம் ஒரு கதையுமல்ல, அல்லது கதைப்போங்காய்ச் சொல்லக்கூடியதுமல்ல. வேளாவேளைகளில் இப்படிப்பட்டவைகளிலிருந்து பிள்ளைகளுக்குப் பெரிய முக்கியமான சத்தியத்தைப் படிப்பிக்கக் கூடுமாகையால் இப்படிப்பட்டவைகளைப் படிப்பிக்கிறோம். சிறு பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதில் கதைப்போங்குதான் முக்கியமான மாதிரி என்றறிந்து வேறுபக்கத்திலுள்ள ஒரு கதையினால் இந்தப் பாக்கியஸ்திதியைத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டலாம். தற்காலத்தில் உபாத்தியாயருக்குத் தெரிந்த ஒரு பிள்ளை இருக்குமானால் அதைப் பற்றிச் சொல்லலாம். ஆனால் வேதாகமத்தில் இதற்கொரு நல்ல திருஷ்டாந்தமுண்டு. சாமுவேல் தேவனைப் பார்க்கவில்லை, ஆனால் அவருடைய சத்தத்தைக் கேட்டான். ஆகையால் இந்தக் கதை இந்தப் பாக்கிய வாழ்வை ஆச்சரியப்படத்தக்க விதமாய் விளங்கச் செய்யக் கூடும். சாமுவேலைப்பற்றிய கதை நம்முடைய பாடமல்ல. இந்தப் பாடத்தில் சில விஷயங்களைக் கூட்டிச் சொல்லவேண்டும்; ஏனென்றால், பிள்ளைகளின் மனதில் பதியச்செய்ய விரும்பும் முக்கிய விஷயம் பாக்கியவான்கள் யார் என்பதுதான்.

தங்கவாக்கியத்தில் ஆவிக்குரிய பாடம் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது—சுத்த இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள். பிள்ளைகளுடைய இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்க வாஞ்சிக்கவேண்டுமென்பதே நம்முடைய முழு நோக்கமாயிருக்கவேண்டும்.

ஆவிக்குரிய பாடம்

அவர்களுடைய தினசரி ஜீவியத்தைக் கவனிக்கும்படியாக, சிறு பிள்ளைகள் விசேஷமாய் உன்னுடைய பிள்ளைகள் செய்யக்கூடிய பாவங்களென்ன என்று பார். திருடுதல், அசுத்த கைகள், பொய் பேசுவது, அசுத்த உதடுகள், கோபம், கீழ்ப்படியாமை, அசுத்த இருதயம் இவைகளைப் பிள்ளைகளிடமிருந்து வருவி. இந்தப் பாடத்தை நன்றாய் விளங்கச் செய்யும்படியாகச் சேற்றில் அழுக்கான சுத்த உடுப்பைப்பற்றியும், சுத்த கைகள் மையையாவது வர்ணத்தையாவது தொட்டதினால் அழுக்கடைந்ததைப்பற்றியும் சொல்லலாம். ஒவ்வொரு பிள்ளையும் இந்த வாரத்தில் முன் சொல்லப்பட்ட பாவங்களைச் செய்யாதபடி பார்த்துக்கொள்ளும்படியாகச் சொல்லு. இயேசு கிறிஸ்துவை நமக்கு உதவிசெய்யும்படியாகக் கேட்டால், நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிப்பார்.

பாடத்தில் ஒரு கதையுமில்லாதபடியால் சாமுவேலின் கதையில் தான் பிள்ளைகளின் விருப்பமெல்லாம் இருக்கும். பிறகு அந்தப் பிள்ளையின்மேலும் அதின் சிறு சட்டையின் மேலும் அவர்களுக்கு விருப்பம் உண்டாகும்.

முக்கிய கவர்ச்சி

கதை — கதையை மூன்று விதமாய்ப் பிரிக்கலாம்.

1. சாமுவேல் ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டான்

சாமுவேலின் தாய் ஒரு பிள்ளைக்காக அநேக நாள் ஜெபித்து வந்தாள். தேவன் சாமுவேலைக் கொடுத்தபோது, சாமுவேலுக்குச் சரியான வயது வந்தவுடன் தேவாலயத்தில் தேவனுக்கு ஊழியஞ் செய்யும்படியாக விட்டுவிடுவேன் என்று வாக்குப்பண்ணியிருந்தாள். அவர்கள் நெடும் பிரயாணமாய்ப் புறப்பட்டார்கள் (I சாமு. 1. 24,25). பலசாலியான சமுசாரியும் அவன் மனைவியும் சிறு பையனும் காணிக்கைகளோடே புறப்படுகிறார்கள். கடைசியாக, பிரயாணத்தின் முடிவில் வந்து சேருகிறார்கள். தேவாலயமானது இருண்டநிறமான

தோலால் செய்யப்பட்ட ஒரு கூடாரமாயிருந்தது. அதினுள்ளே நீலம், இரத்தாம்பரம், சிவப்பு முதலிய நிறங்களால் செய்யப்பட்ட அழகிய திரை போடப்பட்டிருந்தது. அன்புள்ள வயதுசென்ற பிரதான ஆசாரியனாகிய ஏலி, நீண்ட தாடியோடு அழகிய வஸ்திரந் தரித்து சாமுவேலை அவனுடைய பெற்றோரிடமிருந்து வாங்குகிறான்.

2. சிறுவன் தேவாலயத்தில் வேலைசெய்தல்

ஆசாரியர்களுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறான். ஆசாரியனைப்போல சணல்நூல் ஏபோத்தைத் தரித்து தோளிலிருந்து இடுப்புவரையில் சித்திரந்தீர்ந்த சட்டை அணிந்து இருக்கிறான். வருஷா வருஷம பெரிய பண்டிகை கொண்டாடப்படும். அதற்காக ஏராளமான ஜனங்கள் ஆலயத்திற்கு வருவார்கள். சாமுவேலின் தாயும் வருவாள். வரும்போதெல்லாம் அழகிய புதிதான சட்டையைத் தைத்துக்கொண்டு வருவாள். தேவாலயத்தில் வேறே பிள்ளைகளில்லை மற்றவர்கள் ஆசாரியர்தான். சாமுவேல் தேவனையும் அவருடைய ஊழியத்தையும் நேசித்து ஏலியோடு சந்தோஷமாயும் சுகபத்திரமாயும் இருந்தான். அவன் மிகவும் நல்ல பையனாயிருந்தபடியால், தேவன் அவனை ஆசீர்வதித்து; மற்றவர்களும் அவனை நேசிக்கும்படி செய்தார்.

3. தேவ அழைப்பு

சாமுவேல் ஏலியின் பக்கத்தில் நித்திரை செய்தான். இரவெல்லாம் விளக்குக் கொஞ்சமாய் எரிந்துகொண்டேயிருக்கும்! 'சாமுவேலே, சாமுவேலே' என்று கூப்பிடுகிற சத்தங்கேட்டு விழித்து, ஏலிதான் கூப்பிட்டார் என்று நினைத்து அவரண்டை ஓடினான். இப்படி மூன்று விசை செய்தான். பிறகு ஏலி 'இது தேவனுடைய சத்தம்' என்று சொன்னான். மறுபடியும் இந்தச் சத்தம் கேட்டபோது 'கர்த்தாவே, சொல்லும்; அடியேன் கேட்கிறேன்' என்று சொன்னான். இந்தக் காட்சியை நன்றாய் வர்ணி. பையன் பயபக்தியாய் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கிறான், பயப்படவில்லை; ஏனென்றால் தேவனுடைய சத்தம் எப்போதும் அன்புள்ளதாயும் சாந்தமாயும் இருக்கிறது. ஏலியினிடத்திலாவது மற்ற

ஆசாரியரிடத்திலாவது பேசாமல், சாமுவேலிடத்தில் பேசினார். ஏனென்றால் சாமுவேல் இருதயத்தில் சுத்தமுள்ளவனாயிருந்தான். இதைப்பற்றித் தெளிவாய் விளங்கக்காட்டு.

இப்போது பிள்ளைகள் தங்கவாக்கியத்தைப் பாராயணமாய்ச் சொல்லச்செய்.

முகவுரை

சுத்தம் என்கிற வார்த்தையைப் பிள்ளைகளின் முன் வைத்து அதின் அர்த்தம் என்னவென்று கேட்டுப் பாடத்தை ஆரம்பி. பிள்ளைகளும் சுத்தமான சில வஸ்துக்களைச் சொல்லட்டும். எந்த ஜலம் நன்றாயிருக்கும்? (சுத்த ஜலம்) சுத்தம் என்றால் மாசுமறு இல்லாமை. சுத்த வஸ்திரம், சுத்தமான முகங்கள். நீங்கள் எப்போதாவது சுத்த இருதயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சுத்த இருதயம் என்றால் என்ன? இருதயத்தில் சுத்தமுள்ள ஒரு பையனைப்பற்றி உங்களுக்குச் சொல்லப்போகிறேன் என்று சொல்லி சாமுவேலின் கதையைத் தொடங்கலாம்.

அத்தியாயம் VI

நீதி கற்பிக்கும் பாடம்

பாடம்—சங். 23.

தங்கவாக்கியம்.—'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.' சங். 23. 1.

இதுவும் முந்தின பாடத்தைப்போலவே கதைப்போக்கானதல்ல. ஆனால் இதிலேயே பிள்ளைகளின் விருப்பத்திற்கும் உற்சாகத்திற்கும் உரிய அநேக விஷயங்களிருப்பதால், வேறு இடத்திலிருந்து கதை எடுத்து இந்தப் பாடத்தைத் திருஷ்டாந்தப்படுத்த வேண்டியதில்லை. இதைக் கதையைப்போலவே சொல்லலாம். இயற்கையிலிருந்து கற்றுக்கொள்ளுவதுதான் பிள்ளைகளுக்கு இஷ்டம்.

இந்தப் பாடத்தில் தங்கவாக்கியத்தை மாத்திரம் பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டியதாய் இருந்தபோதிலும், முழு சங்கீதத்தையும் மற்ற வேதபாகங்களைப்போலவே பாலர் வகுப்புப் பிள்ளைகள் பாரா

யணமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய பாடம் தங்கவாக்கியத்திலேயே வெகு நேர்த்தியாயும் தெளிவாயும் காட்டப்பட்டிருக்கிறது.

ஆவிக்குரிய பாடம்

இயேசு இரட்சகருக்கும் தங்களுக்குமுள்ள சம்பந்தத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அதுவுமல்லாமல், முக்கியமாய் என்னுடைய என்னும் பதத்தை வெகு கவலையோடு பிள்ளைகளின் மனதில் பதியச் செய்யவேண்டும். பிள்ளைகள் தனிமையாய் இருக்கிறதில்லை. இயேசு அவர்களோடிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி பிரயாசப்படவேண்டும்.

இயேசுவின் ஆடுகளாயிருப்பது எவ்வளவு நேர்த்தியானது! தப்பிதமான காரியங்களைச் செய்வதினால், அவரைவிட்டு வழிவிலகிப் போகாதிருப்போமாக.

தினசரி ஜீவியம்

நாம் எந்த நேரமும் அவரை நோக்கி ஜெபிக்கலாம். அவருடைய சமீபத்தில் இருக்கவேண்டுமானால் நாம் ஜெபிக்கத்தான் வேண்டும். ஒவ்வொருநாட் காலையிலும் 'நல்ல மேய்ப்பரே, இன்றைக்கு என்னை உம்மண்டை வைத்துக்கொள்ளும்' என்று ஜெபிக்கக் கற்பி.

ஆடுகளின்மேல் பிள்ளைகளுக்கு அதிகப் பிரியம். மிருகங்களும், விளையாட்டு குணமும் சாந்தமுமான ஆட்டுக்குட்டிகளும், அமரிக்கையும் குற்றமற்றதுமான ஆடுகளும் பிள்ளைகளுக்கு இஷ்டந்தான். ஆகையால் இவைகளைப்பற்றிச் சொல்லப்படும் விஷயங்களை வெகு கவனமாய்க் கேட்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தச் சங்கீதத்தில் பலஸ்தீனாவிலுள்ள மேய்ப்பனையும் அவனுடைய ஆடுகளையும்பற்றி வெகு தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

கதை

உபாத்தியாயர் தன் மனதில் தெளிவாயும் விஸ்தாரமாயும் பாடம் ஆயத்தம் செய்யும்படியாக யோவான் 10-ம் அதிகாரத்தைக் கவனமாய் வாசித்துக்கொண்டால் நல்லது.

1. அவர் தம்முடைய ஆடுகளைப் போஷிக்கிறார்

ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் நேர்த்தியான பசும்புல்லைத் தின்கிறது. மேய்ப்பன் கோலும் தடியும்கொண்டு அவைகளுக்கு எவ்விதமான கஷ்டமும் நேரிடாதபடி கவலையோடே பார்த்துக்கொண்டிருக்கிறான். நாயும் யாராவது தொந்தரவுசெய்தால் துரத்தும்படியா

கக் காத்துக்கொண்டிருக்கிறது. பிள்ளைகள் ஆட்டைப் பார்த்திருப்பார்களானால், சுலபமாய்த் தங்கள் மனதில் இந்தக் காட்சியை உண்டு பண்ணிக்கொள்ளுவார்கள்.

இயேசு இரட்சகர் தம்முடைய ஆடுகளை எப்படிப் போஷிக்கிறார் என்று அவர்களுக்குச் சொல்லவேண்டும். 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்' என்று நாம் ஜெபிக்கும்வண்ணமாகவே, அவர் நமக்குத் தினசரி ஆகாரத்தைத் தருகிறார். நாம் வேதத்தை வாசிக்கும்போது நம்முடைய ஆத்துமாவுக்கு ஆகாரங் கொடுத்து பாவத்தை எதிர்க்கும்படியாக நம்மைப் பலசாலிகளாக்குகிறார்.

2. அவர் தம்முடைய ஆடுகளை நடத்துகிறார்

பலஸ்தீனாவிலுள்ள மேய்ப்பன் மந்தைக்கு முன்னே நடந்து வேளாவேளைகளில் கையில் ஒரு ஆட்டுக்குட்டியைச் சுமந்தவனாகப் போகிறான். அப்பொழுது தாய் ஆடு மேய்ப்பன் பக்கமாய் நடந்துகொண்டு, அவனுடைய முகத்தை மனத்திருப்தியோடே பார்த்துக்கொண்டு போகிறது. மற்ற ஆடுகளும் பின்னாலே வருகிறது. நாய் இவைகளுக்குப் பின்னால் வந்து கடைசியில் வருபவைகள் சிதறிப்போகாதபடி பார்த்துக்கொள்ளுகிறது.

நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை எங்கே நடத்திக்கொண்டு போகிறார்? அவர்களைச் சந்தோஷப்படுத்தும்படியான அமர்ந்த தண்ணீர்களண்டையில் நீதியின் பாதையில் நடத்துகிறார். அவர்கள் அங்கே நல்லவர்கள் ஆகலாம். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் நல்லவர்களாயும், சந்தோஷமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

3. அவர் தம்முடைய ஆட்டைத் தேடிக் கண்டுபிடிக்கிறார்

மலையில் காணாமற்போன ஆடு களைத்து தோலுரியுண்டு ரத்தம் பீறுண்டு, பசியோடே, தாகமாய், தனிமையாய், திகிலடைந்து இருக்கிறது. மேய்ப்பனும் வெகுதூரம் தேடி மிகவும் களைத்து ஆட்டண்டை வந்து அதைக் கையில் எடுத்துத் தோளில் சுமந்து வீட்டிற்குக் கொண்டுவருகிறான்.

ஆடுகள் எளிதில் வழிதப்பிப்போகும், அவைகளைத் தேடிப் போக வேண்டும். தங்களுடைய வழியை அவைகள் கண்டுகொள்ளக்

கூடாது (ஏசா. 53. 6). நாம் வழிதவறிப்போகிறோம். எப்படி? பாவஞ்செய்வதினால். அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டும்? நல்ல மேய்ப்பன் நம்மைத் தேடி தம்முடைய பாதையில் கொண்டு வரும்படியாக அவரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நாம் அவரைக் கேட்டால் அப்படிச் செய்வாரா? ஆம், அவர் தம்முடைய ஆடுகளுக்கும் ஆட்டுக்குட்டிகளுக்கும் உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார். தடை சொல்லுகிறதேயில்லை.

4. அவர் தம்முடைய ஆடுகளைக் காப்பாற்றுகிறார்

ஆடுகள் திகிலடைந்து ஒன்றின்மேலொன்றாய் நிற்கிறது. நாயும் பயப்படுகிறது. ஆட்டைத் தின்ன சிங்கம் வருகிறது. மேய்ப்பன் தன் நீண்ட தடியோடே ஆட்டுக்கு எதிரே நின்று சிங்கத்தோடே சண்டைசெய்து அதை ஓட்டிவிடுகிறான்.

இவ்விஷயங்கள் உன் மனதில் ஒரு படம்போல உண்டாகுமட்டும் அதைப்பற்றி யோசி. ஆடுகளுக்குச் சத்துருக்கள் அநேகமுண்டு. சிங்கம், கரடி, ஓநாய் முதலியன. மேய்ப்பனில்லாவிட்டால் அந்த ஆடுகளுக்கு உதவிசெய்கிறது யார்? இயேசுவின் ஆடுகளுக்கும் சத்துருக்களுண்டு. திருட்டு, பொய்பேசுவது, கோபகுணம் முதலியன. நாம் அவரைக் கேட்டால் நமக்கு உதவிசெய்வார், நம்முடைய சத்துருவை ஒவ்வொரு தடவையும் தோற்கடிப்பார்.

5. அவர் தம்முடைய ஆடுகளுக்கு ஒரு வாசஸ்தலம் கொடுக்கிறார்

மழைக்காற்று அடிக்கும்போது ஆடுகளெல்லாம் கிடையில் சேர்க்கப்படுகிறது. குளிர்ந்த காற்றுக்கும் சத்துருவின் வாய்க்கும் நீங்கலாகிச் சுகபத்திரமாய் அடைக்கப்பட்டிருக்கிறது. மேய்ப்பன் அவைகளைவிட்டுப் போகாமல் அங்கேயும் அவைகளைப் போஷித்து தினந்தோறும் அவைகளைக் கவனித்துவருகிறான்.

இந்தச் சங்கீதத்தின் கடைசி வாக்கியத்தில் இயேசுவின் ஆடுகள் அவரோடு அவருடைய வீட்டில் எப்படி இருப்பார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஐந்து விஷயங்களையும் பிள்ளைகளின் விரல்களில் எண்ணச் சொல்லு. ஒவ்வொரு விரலுக்கும் ஒன்று.

ஆட்டைப்பற்றிச் சில கேள்வி கேட்டு ஆரம்பி. ஆட்டை யாராவது பார்த்திருக்கிறீர்களா? அது எதைப்போலிருக்கிறது? அது அணிந்திருக்கும் உடுப்பு எப்படிப்பட்டது? அது முறமுறப்பானதா? பலமானதா? ஆட்டுக்குட்டியை யாராவது தூக்கியிருக்கிறீர்களா? ஆட்டைக் கவனித்து நடத்துகிறவனுக்குப் பேர் என்ன? இந்தவிதமாய்ப் பாடத்தை ஆரம்பித்து நடத்தலாம்.

முகவுரை

பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்குரிய பாடத்தின்பேரில் கேள்விகள்

1. பின்வரும் சரிதைகளில் பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்குப் பிரியமுண்டாகும் சில குறிப்புகளைச் சொல்லும்.

(a) சிருஷ்டிப்பு. (ஆதி. 1.)

(b) விதவையின் எண்ணெய். (2 இரா. 4.)

(c) சிவந்த சமுத்திரத்தைக் கடந்தல். (யாத். 14.)

2. பின்வருபவைகளிலிருந்து பிள்ளைகளுக்கு என்ன ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுக்கொடுப்பீர்.

(a) நோவாவும் பேழையும். (ஆதி. 6. 7.)

(b) விதைக்கிறவனுடைய உவமை. (மத். 13.)

(உத்தரவு சுருக்கமாயும் தெளிவாயும் இருக்கவேண்டும்)

3. பின்வருபவைகளிலிருந்து பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டிய ஆவிக்குரிய சத்தியமும், தினசரி ஜீவியத்தில் அனுஷ்டிக்க வேண்டிய மாதிரியையும் காட்டும்.

(a) நல்ல சமாரியனுடைய உவமை. (லூக். 10.)

(b) யவீரு மகளை உயிரோடே எழுப்புதல். (லூக். 8.)

4. பின்வரும் ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு சுருக்கமும் வித்தியாசமுமான முகவுரைகள் பாடத்திற்கு அனுகூலமாயிருப்பதற்காக உபயோகியும்.

(a) இயேசுவின் பிறப்பு. (லூக். 2.)

(b) ஐயாயிரம் பேரைப் போஷித்தது. (யோவா. 6.)

(c) பவுலுக்குக் கப்பல் சேதமானது. (அப். 27.)

5. பின்வரும் கதைகளை ஆயத்தம் செய்யும்போது மனதில் படம்போல உபயோகிக்கும் விஷயத்திற்குத் தலைப்பு மாத்திரம் கொடும்.

(a) எலியாவும் காகங்களும். (1 இரா. 17. 1–5.)

(b) வெகு நாளாய் வியாதியாயிருந்த மனிதனைக் குண மாக்குதல். (யோவா. 5. 2–9.)

6. மாதிரிப் பாடம் ஆயத்தம்செய்து காட்டியிருக்கும் வண்ண மாகப் பின்வரும் விஷயங்களிலிருந்து பாலர் வகுப்புப் பிள்ளைகளுக் குச் சுருக்கமாய்ப் பாடம் தயார்செய்யும்.

(ஒவ்வொன்றிற்கும் உத்தரவு ஐந்நூறு வார்த்தைகளுக்கு மேல் போகக்கூடாது)

சரித்திரம்

(a) பாவத்தில் விழுந்தது (ஆதி. 3). தங்கவாக்கியம். (நீதி. 28. 13.)

(b) கடலை அமரச் செய்தது (மாற். 6. 47–51). தங்கவாக்கியம். 'சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்.' (சங். 95. 5.)

(c) நாகமான் சுத்தமானது (2 இரா. 5). தங்கவாக்கியம். 'என்னைக் கழுவும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.' (சங். 51. 7.)

(d) ஆதி சீஷர்களை அழைத்தல் (மாற். 1. 14–20). தங்கவாக்கியம். (மாற். 1. 17.)

உவமை

(e) ஆகாயத்துப் பறவைகளும், காட்டு லீலிப் புஷ்பங்களும் (மத். 6. 25–34). தங்கவாக்கியம். (மத். 6. 26.)

(f) கலியாண வஸ்திரம் (மத். 22). தங்கவாக்கியம். 'ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்.' (வெளி. 19. 9.)

சன்மார்க்கத்துக்குரியவை

(g) எட்டாங் கற்பனை 'களவு செய்யாதிருப்பாயாக.' தங்கவாக்கியம். பாடத்தின் தலைப்புப்போல.

(*h*) பாக்கிய நிலைமை. 'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்' (மத். 5). தங்கவாக்கியம். பாடத்தின் தலைப்புப்போல.

(*i*) நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் (மத். 5). தங்கவாக்கியம். பாடத்தின் தலைப்புப்போல.

(*j*) பரலோகம் (வெளி. 21, 22). தங்கவாக்கியம். (வெளி. 21. 27.)

பிரிவு II

இளம் மாணாக்கர்

அத்தியாயம் VII

குணாதிசயங்கள்

குணாதிசயங்கள்

இந்தப் பிரிவிலுள்ள பாடங் கற்பிக்கும் மாதிரியைத் தீர்மானிக்கிற இளம் மாணாக்கருடைய குணகுணங்களைக் கவனிப்போம். பையன்களும் பெண்களும் தங்கள் வீட்டையும் அதைச் சுற்றிலும் உள்ளவைகளையும் விட்டு, உலகத்தின் விசாலமான சமபூமியை நோக்குகிறார்கள். ஜீவியமானது அவர்களுக்கு ஒரு போர்ச்சாலையாகக் காணப்படுகிறது. அங்கே அவர்கள் வீரச் செயல்களை நடப்பிக்கிற ஆண்களையும் பெண்களையும் பார்த்து அவர்களைப் பின்பற்றும்படியாக இயல்பாகவே ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இந்த மாணாக்கர் தங்களைவிட மேலான குணமுடையவர்களின் வல்லமையினாலே அதிகமாக இழுக்கப்படக்கூடியவர்கள். அதுவுமல்லாமல் தாங்கள் அதிகமாய் மதிக்கிறவர்களோடே ஒன்றாயிருக்க விருப்பமுள்ளவர்கள். கடமைகளைப்பற்றிப் பெரிய காரியமாக எண்ணுகிறதில்லை. ஆனால் வீரச்செயல்கள் கட்டுக்கதைகள் இவைகளைக் கேட்கும்போது மயங்கிவிடுகிறார்கள். தாங்கள் எவ்வளவு பராக்கிரமசாலிகள் என்று காட்டப் பிரியப்படுகிறார்கள். அவர்களுடைய விளையாட்டுகளில் எதிராளியை மேற்கொள்ள வாஞ்சிக்கிறார்கள்.

பையன்களைப்போலவே பெண்களும் இந்தக் காலத்தில் நியாயத்தைப்பற்றி அதிகமான உணர்வுடையவர்களா யிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் இந்தச் சற்குணத்தின்மேல் அவர்களுடைய நோக்கம் அவ்வளவு பூரணமாயிருக்கிறதில்லை. எல்லா விஷயமும் அவர்களுக்குச் செய்யக்கூடியதா யிருக்கவேண்டும், இன்னும் யோசனையின் ராஜ்யத்திற்கு உள்ளானவர்களல்ல. தற்காலத்தில் ஜீவிக்கிற அவர்கள் தற்காலம் அவர்களுக்குக் கிடைக்கிற நன்மைகளைப் பெரிதாக எண்ணுவார்களே தவிர வருங்கால வெகுமதிகளைக்குறித்து எண்ண முடியாது.

மார்க்கத்தைப்பற்றியும் சற்குணங்களைப்பற்றியும் அவர்கள் பேசுகிற விதமானது பெரியவர்கள்பேசுகிற விதத்திற்கு வித்தியாசமானது.

மார்க்கம்

பையன்களும், பெண்களும் எண்ணம், குணம் இவைகளைவிடச் செய்கையின்மேல் அதிக உரிமை காட்டுகிறார்கள். இரு அல்லது செய் என்பதே அவர்களுடைய பிரதான வார்த்தை.

கிறிஸ்துவானவருடைய விஷயத்திலுங்கூட அவர் சொன்னவைகளைவிட அவர் செய்தவைகளே பிள்ளைகளின் மனதைக் கவரத்தக்கதாயிருக்கிறது. அவர் சவுக்கைக்கொண்டு காசுக்காரரைத் துரத்தினது அல்லது அவரைக் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முன்பாக தைரியமாய் நின்றது இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்பது பிள்ளைகளுக்கு மெத்தப் பிரீதி. கிறிஸ்துவை அவர்களுடைய வீரராகவும், சிநேகிதராகவும், தளகர்த்தராகவும், இரட்சகராகவும் அவர்களுக்குக் காண்பி.

என்றாலும் அவர்கள் உண்மையான மார்க்கத்தை அநுசரிக்கக் கூடாதவர்களென்று நாம் எண்ணக்கூடாது. அதின் துவக்கமானது பெரியவர்களுடைய குணப்படுதலைப்போல அதிகமான பாவ உணர்ச்சியோடே ஆரம்பிக்காதபடியால், குணப்படுதலைப்போல் காணப்படாது. அது ஓர் தீர்மானந்தான். கிறிஸ்துவின் பக்கத்திலிருப்போம்; அவருடைய எதிராளியின் பக்கத்திற்குப் போகமாட்டோம் என்ற தீர்மானம். கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக விசுவாசித்து, அவருடைய திவ்விய நடத்துதலைப் பின்பற்றுவதே இந்த மாணாக்கருடைய மார்க்கத்தின் முக்கிய தோற்றமாயிருக்கிறது.

அவனுடைய கிறிஸ்துமார்க்கமானது மெய்பேசுதல், தைரியங்காட்டுதல், முகமலர்ச்சியாயிருத்தல், மற்றவர்களுக்கு அன்புகாட்டுதல் இப்படிப்பட்டவைகளைப்பற்றினதா யிருக்குமேயொழிய, விசுவாசத்தைப் பற்றியும் கொள்கையைப்பற்றியும் பேசுகிறதாயிராது. அன்புள்ள இருதயத்தோடு அவன் செய்ய விரும்பும் கிரியைகளை நாம் அலட்சியஞ்செய்து தடுக்கக்கூடாது.

கதையின் மனக்கவர்ச்சி

இந்தப் பிராயத்துப் பிள்ளைகளுக்குப் பிராயாணம், வீரச்செயல்கள், பராக்கிரமசாலிகள் இவைகளைப்பற்றிய கதைகள்தான் முக்கியமாய்ப் பிரியங்கொடுப்பவை. வீரதீரமான செய்கைகளைப்பற்றிய கதைகள் கேட்பது அவர்கள் இயல்பு. அதினால் இந்தக் கதை உண்மை என்று சொல்லக்கூடியதாய் இருக்கவேண்டும். ஏனென்றால் இது கட்டுக்கதையல்ல, அவர்கள் விரும்புகிற விஷயங்களே; இது மனோபாவனையான கதையுமல்ல, மெய்யாய் நடந்தவைகளே. ஆனாலும் கதையில் வீரச்செயல்கள், பராக்கிரமச் செய்கைகள் இவைகளைப்பற்றிய விஷயங்கள் இருக்கவேண்டியது அவசியம். 'நமக்கு அதிக சுளுவாயும் பிரியமாயும் இருப்பவைகள் குற்றஞ்சொல்லப்படாமலும் எதிர்க்கப்படாமலும் வெகு லேசாய் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.' புதிய ஏற்பாட்டிலும், சங்கீதத்திலும் ஜீவியத்திற்கு ஆதாரமான நோக்கங்களைப்பற்றிய பாடங்களைவிட, பழைய ஏற்பாட்டில் உண்மையாய் நடந்த விஷயங்களைப்பற்றிப் படிப்பிப்பது இவர்களுக்கு ஏற்றதாயிருக்கும்.

நோக்கம்

கிறிஸ்துவைப் பின்பற்றுவோமென்று பிள்ளைகள் தீர்மானிக்க வேண்டுமென்பது மாத்திரமல்ல, மார்க்கத்துக்குரிய சத்தியங்களை அவர்களுக்குப் போதிப்பதினால், அவர்களுடைய குணம் பூரணப்பட வேண்டுமென்பதும் நம்முடைய நோக்கமாய் இருக்கவேண்டுமென்று நாம் நினைத்துக் கொள்ளுவது மிக முக்கியமானது. மேற்காட்டின மாதிரி கதைகளைச் சொல்லுவதினால்தான் இப்படிச் செய்வது கூடியது. ஏனென்றால் மற்றவர்களுடைய வீரச்செய்கைகளை விவரித்துக் காண்பிப்பதினால் பிள்ளைகளுக்கு இயற்கையான விருப்பம் உண்டாகிறது. இவைகளைக் கேட்கும்போது அவர்களைப் பின்பற்றவேண்டு

மென்கிற ஆசை தன் உள்ளத்தில் இருப்பதாக உணருகிறான். 'ஒரு பிள்ளை தான் உணர்ந்து அறிந்துகொண்டதை மறக்கமாட்டாது. ஆனால் தான் சும்மா கேட்டவைகளை ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக மறந்துவிடும்.' இந்துமார்க்கப் பிள்ளைகள் மார்க்கவிஷயமாய் அவர்களுடைய வீரர்களைப்பற்றிச் சொல்லப்பட்ட அசுத்தமான காம விகாரத்திற்கடுத்த கதைகளைக் கேட்டதினால் தற்காலத்திலும் அவர்களுடைய ஜீவியம் இப்பேர்ப்பட்ட கதைகளின் மூலமாய்க் கறைப் படுத்தப்பட்டிருக்கக் காணலாம். பையன்களும் பெண்களும் அழகியதும், வீரமுள்ளதும், உண்மையுள்ளதுமான விஷயங்களைப் பின்பற்றத்தக்க இயல்புடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இவைகளை அவர்கள் வியப்படையத்தக்கவிதமாய் விஸ்தரித்துக் காண்பிக்க வேண்டும். உசிதமான விஷயங்களைக்குறித்துச் சட்டங்களை வெளிப்படையாய் உண்டுபண்ணுவது உபாத்தியாயருடைய வேலையல்ல, ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களை மகிமைப்படுத்தி அழகுபெறச் செய்யவேண்டும். நன்மையான விஷயங்களைப்பற்றி அவர்கள் மெச்சிக்கொள்ளும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவானவரைப்பற்றிப் படிப்பிக்கும்போதும், அவருடைய ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றிச் சரியாய் விளங்கக் காட்டுவது முக்கியமானதென்றாலும் அதுவே அவ்வளவு முக்கியமானதென்று நம்முடைய முழு நோக்கமாக வைக்கக்கூடாது. ஆனால் கிறிஸ்துவானவரைப்பற்றியே அவர்களுக்கு வியப்பும் அபேட்சையும் உண்டாகும்படி பார்க்கவேண்டும். இந்த உணர்விலிருந்து அன்பு உண்டாகிறது, அன்பு தெரிந்துகொள்ளும்படி செய்கிறது; அப்படித் தெரிந்துகொள்ளுவது பலமாயும் ஸ்திரமாயும் இருக்கும். அவர்கள் இன்றைக்கு அதிசயப்படுவதை நாளைக்குத் தெரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கும். இம்மாணாக்கருடைய ஆச்சரியப்படும் குணத்தின் மூலமாய்த்தான் அவர்களுடைய இருதயத்திற்குள்ளே போகும் வழி உண்டாகிறது.

அப்படியானால் முக்கியமாய்ப் பிள்ளைகளுக்கு இந்த வயதில் கதைகள் தானாகவே, நாம் சன்மார்க்கத்துக்குரிய ஒன்றையும் கூட்டாமலே தன்னுடைய வேலையைச் செய்யக்கூடுமென்று நாம் அறிந்துகொள்ளுவோமாக. பையன்களும் பெண்களும் நன்றாய்ச் சொல்லப்பட்ட

கதையின் முக்கிய பாகத்தைச் சீக்கிரத்தில் கண்டுகொள்ளுவார்கள். இதைப்பற்றி நமக்குச் சந்தேகமுண்டானால் கதை சொன்னபிற்பாடு பிள்ளைகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கதை சொல்லுவதில் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும்; அதாவது: நன்மையான விஷயங்கள் நன்மையாகவே தெளிவாய்க் காண்பிக்கப்படவேண்டும். கெட்ட விஷயங்களும் அப்படியே கெட்டதாகக் காண்பிக்கப்படவேண்டும்.

கதையிலுள்ள குணகுணங்களைப்பற்றிய சன்மார்க்கத்தைப்பற்றிப் பிள்ளைகளின் மனதில் நியாயம் கண்டுபிடிக்கும்படி செய். அவர்களுடைய மதிப்பில் கெட்ட விஷயங்களை இழிவானதும் தகாததுமாகப் புறக்கணிக்கும்படி செய். இப்படி நியாயம் சொல்லும்போது ஆழ்ந்த மாறாத பதிப்பு உண்டாகிறது. இப்படிச் செய்யும்படியாக நாமே கதைகளை நேசிக்கவேண்டும். கதைகளைப்பற்றிய வெறும் அறிவு மாத்திரம் போதாது. இது பெரிய இரகசியம். ஏனென்றால் நாம் கதைசொல்லும் விதத்திலேயே கதையின்மேல் நமக்கிருக்கும் பிரியத்தைப் பிள்ளைகள் அறிந்துகொள்ளுகிறார்கள். இந்தவிதமாய் நம்முடைய வகுப்பிலுள்ள பிள்ளைகளின் மனதைத் திறந்துவைக்க உதவி செய்வோமானால், இதை முழு மனதோடே செய்யப் பிரயாசப்படும் உபாத்திமாருக்கு மிகவும் உற்சாகமாயிருக்கும்.

ஏழாவது அத்தியாயத்தின்பேரில்
கேள்விகள்

1\. ஜீவியத்தில் பிள்ளைகள் கவனிக்கும் விஷயத்தில் பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கும் இளம் மாணாக்கருக்கும் வித்தியாசம் என்ன?

2\. ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துப் பாடம் கற்பிக்கும் விதத்தில் இளம் மாணாக்கர் தீர்மானிக்கிற குணாதிசயங்களில் சிலவற்றைச் சொல்லும்.

3\. இந்தப் பருவத்துப் பிள்ளைகளுக்கு மார்க்கத்தைப்பற்றி அவர்கள் அறியக்கூடியதை உம்முடைய சொந்த வார்த்தையில் எழுதும்.

4\. 8 முதல் 10 வயதுவரை பிள்ளைகளுக்கு வீரச்செயல்களைப் பற்றிய கதைகள் பிரியமுண்டாக்குவது ஏன்?

5. இளம் மாணுக்கருடைய குணங்கள் கதைகளின் மூலமாய் ஸ்திரப்படுவதெப்படி?

6. கிறிஸ்துவின் அழைப்பு பிள்ளைகளின் மனதில் பலமாய்ப் படும்படியாக நாம் அவரைப் பிள்ளைகளுக்கு எப்படிக் காட்ட வேண்டும்?

அத்தியாயம் VIII

கதை—இயேசுவின் சோதனை

பாடம்—மத். 4. 1–11. மாற். 1. 12, 13. லூக். 4. 1–13

தங்கவாக்கியம்.—'ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டு, பாடு பட்டதினாலே அவர் சோதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.' எபி. 2. 18.

இந்தக் கதையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய பாடம் என்னவென்றால், நமக்கொரு சத்துரு இருக்கிறான் என்றும் அவனை நாம் ஜெயிக்கவேண்டுமென்பதும் தான்.

ஆவிக்குரிய பாடம்

நம்முடைய கர்த்தராகிய இயேசு மனிதருக்காகப் போர்புரிகிற பராக்கிரமசாலியாகவும், நாம் ஜெயிக்கும்படியாக நமக்காகப் போர்புரிந்த நம்முடைய வீரனாகவும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டுமென்பதுதான் நம்முடைய முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். சோதனை என்றால் நாம் போராடவேண்டிய ஒரு மெய்யான யுத்தமேயொழிய விளையாட்டுச் சண்டையல்ல என்று பிள்ளைகள் அறியும்படிசெய். இயேசுவும் இதைக் கஷ்டத்தோடு அனுபவித்து, ஜெயவீரனாய் விளங்கி நாம் அதிகமாய் ஆச்சரியப்படத்தக்கவரானார். இதை நாம் தெளிவாய்ச் சொல்லும்படியாக மனுகுலத்தின் பெரிய சத்துருவை மேற்கொள்ளவேண்டுமானால், பலத்த யுத்தம் நடந்தாலொழிய மற்றப்படி முடியாதென்று காண்பிக்கவேண்டும்.

இயேசுவானவர் எப்படி மெய்யான சாத்தானை எதிர்த்து மெய்யான யுத்தம் செய்யவேண்டியிருந்ததோ அப்படியே நாமும் செய்ய வேண்டும்; நாம் திட்டமாய் ஜெயிக்கவேண்டுமானால் இரட்சகருடைய

உதவியைத் தேடி அவர்பக்கம் பேர் எழுதிக்கொள்ளவேண்டியது தான் நாம் செய்யவேண்டிய முதல் சங்கதி. பையனாவது பெண்ணாவது தானாக ஜெயிக்கமுடியாது. ஜெயவீரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும்படி தீர்மானஞ் செய்யவேண்டிய அவசியத்தைப் பிள்ளைகளின் மனதில் பதியச்செய்வதற்கு இதுதான் நல்ல சமயம். இப்படிச் செய்யும்படியாக மற்றவர்கள் முன்பாக வெளியரங்கமாய்க் கேட்பது நன்றாயிராது; ஆனால் அதை எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்லி தற்சமயம் அவர்களே அதைப்பற்றிச் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி விட்டுவிடு.

அனுதின அப்பியாசம்

இந்தப் பாடத்தில் முக்கியமாய்ப் பிரியமுண்டாக்குவது யுத்தம் ஜெயம் என்பதுதான். சண்டை என்றால் பையன்களுக்கு வெகு பிரியம். ஜெயிக்க விரும்புவது அவர்களுடைய இயல்பு. இந்தப் பாடத்தில் முதன்மையாகக் காணப்படும் சத்துரு சாத்தான் என்பதை அவர்கள் மனதில் வைக்கும்படி பார். எந்த சோதனையைப்பற்றியும் அதிக நேரம் செலவழிக்கவேண்டாம். சோதனையின் முழு அர்த்தமும் பெரிய பிள்ளைகளுக்குரியது. யுத்த சங்கதிதான் இந்தப் பருவத்துப் பிள்ளைகளுக்கேற்ற முக்கிய விஷயம்.

முக்கிய மனக்கவர்ச்சி

மறுபடியும் இந்தக் கதையை எவ்வளவுக்கு அதிகமாய் உற்சாகமாக நாடகப்பிரகாரமாய்ச் சொல்லுகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய்ப் பிள்ளைகளின் மனதில் கிரியைசெய்யும்.

கதை

1. யுத்தகளம்

அந்த இடத்தைப்பற்றிய பூமிசாஸ்திரத்தைக்கொண்டு படிப்பித்தால் உதவியாயிருக்கும். ஆனால் இந்த விஷயத்தைப்பற்றியே அநேக விஷயங்களைச் சொல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் இதினால் வெகுநேரமும் வீணாய்ப்போகும். பிள்ளைகளும் தளர்ந்துபோவார்கள். இந்த இடம் எருசலேமுக்கு வடகிழக்கே எரிகோவுக்குப் போகும் பாதைக்குச் சமீபமாயுள்ள பசுமையான பள்ளத்தாக்குக்கு அடிவாரத்திலே இருக்கிற காடுமேடும் மலைச்

செரிவுமான இடம் என்று உத்தேசிக்கப்படுகிறது. இது வனாந்தரமும் துஷ்டமிருகங்கள் வசிக்கிறதுமான இடம்.

இயேசு தனிமையாய், பாறையும் முட்செடியும் நிறைந்த இடத்தில் ஜெபம்செய்கிறார். அதி உக்கிரமான வெயிலுக்கு மறைவாக எந்த விதமான நிழலும் இருந்ததில்லை. நாற்பது நாளாகச் சோதனையோடே ஓயாமல் போராடினபடியால் அகோரப் பசியுண்டாகி அவருடைய முகம் வாடிக் களைத்துப்போயிற்று.

அவரைச் சுற்றியிருக்கும் விஷயங்களில் முக்கிய கவனத்தை வைக்கவொட்டாமல் ஒவ்வொன்றும் அவருக்கு விரோதமாய் இருந்தது என்ற விஷயத்தைப் பிள்ளைகள் விசேஷமாய்க் கவனிக்கும்படி செய்.

2. முதல் சோதனை

சுற்றிலும் கிடந்த கற்களைக்கொண்டு அப்பம் உண்டாக்கும்படி செய்யச்சொன்னது.

இதில் காணப்பட்ட மயக்கம் என்ன? (a) நாற்பதுநாள் உபவாசமிருந்த பிற்பாடு அவருக்குண்டான பசியைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற இயல்பான ஆசையிருந்தது. (b) 'நீர் தேவனுடைய குமாரனேயானால்' என்று கேட்ட கேள்வியின் மாதிரியில், அவர் தேவனுடைய குமாரனல்ல என்று குறித்துக் காட்டினான். இந்த அற்புதத்தைச் செய்வதினால் இந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்துகொள்ளலாம். இதற்கு இணங்குவதினால் பாவமென்ன? அவரைப் பின்பற்றுகிறவர்கள் செய்யக்கூடாதவிதமாய்ச் செய்து தன் பசியை ஆற்றிக்கொள்ளலாமே. அவர் எப்படி ஜெயம் பெற்றார்? வேதத்தை அறிந்து உபயோகித்ததினாலேயே.

அவர் ஜெயித்தார், சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்.

3. இரண்டாம் சோதனை

தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் இருந்து விழும்படி சொன்னது.

ஆலயப்பிராகாரங்கள் ஆராதிக்கும் ஜனங்களால் நிறைந்திருக்கும்போது இவர் குதித்திருப்பாரானால் என்ன நடந்திருக்கும்?

இதில் காட்டப்பட்ட ஆசை என்ன? எல்லா ஜனங்களுக்கு முன்பாக மேலேயிருந்து விழுந்து சேதப்படாமலிருந்தால், இதுவே அவருடைய தேவதத்துவத்திற்கு நல்ல ரூபகாரம். அவரை நிச்சயமாய் ஏற்றுக்கொள்ளுவார்கள். இதற்கு இணங்குவதினால் பாவமென்ன? இது தேவனை நம்பாமல் அவரைப் பரீட்சை பார்ப்பதாகும். தேவனுடைய வேலையைச் சாத்தானுடைய வழியிலே செய்வதாம். இதையும் வேத அறிவின் பிரயோகத்தினாலே ஜெயித்தார்.

இங்கேயும் அவர் ஜெயித்தார், சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்.

4. மூன்றும் சோதனை

உலகராஜ்யங்களை ஜெயிப்பது; அதை நிறைவேற்றும்படியாகவே வந்தார். தம்முடைய பாடுகளினாலும் சிலுவையின் மரணத்தினாலும் இதை நிறைவேற்றவேண்டுமென்று அவர் நன்றாய் அறிந்திருந்தார். இதில் அவருக்கு என்ன ஆசை காட்டப்பட்டது? இந்தப் பெரிய காரியத்தை யுத்தமில்லாமலும் காத்திருக்காமலும் பெற்றுக்கொள்ள எல்லாவிதமான எதிராளியையும் நீக்கிப்போட்டு, உலகத்தை அவருடையதாக்குகிறேன் என்கிறான். இதற்கு இணங்குவதினால் பாவமென்ன? சாத்தானை வணங்கி, தேவனைவிடச் சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து நன்மை வரும்படியாகத் தீமைசெய்வதே. இதையும் வேத அறிவை உபயோகப்படுத்தி ஜெயித்தார்.

இவர் ஜெயித்தார், சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்.

இந்தச் சோதனை 'பின்னாலே போ, சாத்தானே!'—உன்னை அடித்துத் தள்ளிவிட்டேன் போ என்ற நேர்த்தியான வார்த்தைகளால் முடி.

5. யுத்தத்திற்குப் பிற்பாடு

நீண்ட பலமான மல்யுத்தத்தால் இயேசுவானவர் களைப்படைந்தவராய் இருக்கிறார். தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்கிறார்கள். ஆகாரமும் கொடுத்திருக்கலாம். அவர்களுடைய சத்துருவும் நம்முடைய சத்துருவுமாகிய சாத்தானைத் தோற்கடித்த தங்கள் எஜமானைப்பற்றித் தூதர்கள் களிகூருகிறார்கள். அவரைத் தேற்றி அவருக்கு உதவிசெய்கிறார்கள்.

வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குத் தகுந்தாற்போல் சந்தர்ப்பத்தைப் பற்றிய குறிப்பை வித்தியாசப்படுத்திக்கொள்ளலாம். அப்பொழுது நடந்திருக்கும் பந்து விளையாட்டு, பாடசாலை விளையாட்டு இவைகளை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.. ஜெயித்தது யார்? எப்படி ஜெயித்தார்கள்? உட்கார்ந்து அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதினுலா அல்லது ஊக்கமாய் விளையாடினதினுலா? நாம் அதிகமாய் விரும்புகிறது எது ஜெயமா அபஜெயமா? இயேசுவானவர் எப்படிப் பெரிய ஜெயம் பெற்ருர் என்று கேளுங்கள்.

முகவுரை

அல்லது அவர்களுக்கு ஞாபகம் வரக்கூடிய ஒரு பேர்பெற்ற ஜெயத்தைப்பற்றிப் பேசு. அவர்களிடமிருந்து உண்டாகிற எந்த உதாரவையும் உபயோகிக்கலாம். ஜெயம் எப்படிக் கிடைத்தது? போர் செய்யாமல் சுளுவாய்க் கிடைத்துவிட்டதா? கஷ்டமின்றி, போர் செய்யாமல் எந்தப் பெரிய ஜெயமும் கிடையாது. இன்று இயேசுவானவர் அடைந்த பெரிய ஜெயத்தைப்பற்றித்தான் நம்முடைய பாடம்.

நம்முடைய கர்த்தருடைய ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றிய சங்கதியிலிருந்தே இந்தப் பாடத்தை எடுத்துக்கொள்ளலா மாதலால் முந்தின பாடத்தோடு இணைத்து முகவுரை எடுத்துக்கொள்ளலாம்.

அத்தியாயம் IX

ஒரு உவமை—வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும்

பாடம்—மத். 25. 31–46.

தங்கவாக்கியம்.—'மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்.' மத். 25. 40.

இது உவமைகளில் ஒன்று. ஆனுலும் இது வருங்காலத்தில் மெய்யாகவே நடக்கப்போகிற விஷயங்களின் தோற்றமாயும் இருக்

கிறது. கதை எனது வார்த்தையின் பிரகாரம் கதையாயில்லாவிட்டாலும் கதைப்போங்காகச் சொல்லலாம்.

நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் அன்பான காரியங்களைச் செய்வதினால் அல்லது செய்யாமலிருப்பதினால் ஒன்று செம்மறியாட்டைப் போலிருக்கிறோம் அல்லது வெள்ளாட்டைப் போலிருக்கிறோம். இந்த உவமையில் சொல்லப்பட்ட விஷயங்கள், நம்முடைய ஜீவிய வழக்கத்திற்கு மாறாக நாம் வேளாவேளைகளில் செய்கிற விஷயங்களைப் பற்றினதல்ல, நாம் சாதாரணமாய்ச் செய்கிற விஷயங்களைப் பற்றினதே. நாம் ஒழுங்காய் நடப்பிக்கிற இந்த விஷயங்களே நாம் எந்தப் பக்கத்தில் இருக்கிறோம் என்று காட்டுகிறது. நாம் கர்த்தர் நிமித்தமாக மற்றவர்களுக்குச் செய்கிற நன்மைகளைத் தனக்கே செய்ததாக எடுத்துக் கொண்டு அதற்காகப் பலனளிப்பார்.

ஆவிக்குரிய பாடம்

பையன்களும் பெண்களும் தாங்கள் இருக்கும் பக்கத்தை எப்படிக் காட்டக்கூடும்? விளையாட்டிலும், வேலையிலும், சிநேகிதர் மத்தியிலும், வீட்டிலும், பாடசாலையிலும் நாம் அன்பாயும் சுயநயமற்றவர்களாயும் நடந்துகொள்ளக்கூடிய எண்ணிறந்த சமயங்களுண்டு. இந்த விஷயங்களில் நாம் நடந்துகொள்ளும் விதமும், இந்தப் பாடத்தில் சொல்லப்பட்டிருக்கும் விசேஷித்த விஷயங்களும் ஒன்றுபோலத்தான். பிள்ளைகள் இந்தமாதிரி உடனே செய்யும்படியாகக் குறித்துக் காட்டலாம். அதாவது வியாதியாயிருக்கும் பிள்ளையை அல்லது பாடசாலைக்கு வராத பிள்ளைகளைச் சந்திக்கும்படி சொல்லலாம். தினந்தோறும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளுகிற விஷயத்தில் இது காட்டப்படவேண்டுமென்று முக்கியமாய் வற்புறுத்திச் சொல்லவேண்டும்.

அனுதின அப்பியாசம்

இப்பருவத்துப் பிள்ளைகளுக்கு நீதியின்மேல் பிரியப்படுவது ஒரு விசேஷித்த லக்ஷணமாகையால், நியாயம் விசாரிப்பதில் அவர்களுக்கு இயல்பாகவே பிரியம் இருக்கும். இயேசுவானவர் தாமே நியாயந் தீர்க்கப்பட்டு மரணதண்டனை யடைந்தபிற்பாடு நியாயாதிபதியாக வீற்றிருப்பார் என்ற சத்தியமானது பிள்ளைகளுக்கு அதிக பிரியத்தை உண்டாக்கும்.

வழக்கம்போல உவமையை நாடகப்போங்காய்ச் சொல்லுவது பிரயோஜனமாயிருக்கும். இந்தப் பாடத்தின் விபரத்தை வாசிக்கிறது மாத்திரம் போதாது. அதைப்பற்றி ஆவலாய்

கதை

வாசித்துக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த விதமாய்ச் செய்யப் பழகிக்கொண்டால் எல்லாச் சமயங்களிலும் இது நமக்கு உதவியாயிருக்கும்.

1. நியாயாதிபதி

கிறிஸ்து மகிமைப்பட்டது.

மறுரூபமான விஷயத்தைப்பற்றி வாசி (மத். 17. 2. லூக். 9. 29. வெளி. 1. 13–18). வாசித்து அதின் கருத்தைக் கிரகித்து உன்னுடைய சொந்த வார்த்தைகளில் விளக்கிக் காட்டு. உயிர்த்தெழுந்த இரட்சகர் பரிசுத்த தூதர்களால் சூழப்பட்டு (ஏசா. 6. 2. வெளி. 5. 11) சிம்மாசனத்தில் வீற்றிருப்பதை (வெளி. 4. 3) விவரித்து எழுதிக்கொள்ளலாம்.

வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தில் யோவானைப்பற்றிச் சொல்லப்பட்டவைகளைப் பிள்ளைகளின் மனதில் பதியச்செய்யப் பார். அநேக பாடங்களில் கர்த்தர் தாழ்மையுள்ளவரும் கஷ்டப்படுகிறவருமாகக் காட்டப்பட்டிருக்கிறது; இங்கேயோ அதிகாரம் செலுத்தி வல்லமையோடே ஆளுகிறவராக இருக்கிறார். தற்காலம் அவருக்கிருக்கும் மேன்மையைப்பற்றிப் பிள்ளைகளுக்கு நினைப்பூட்டுவது நல்லது. ஆகையால் பாடத்தைப் பிரயோஜனப்படுத்தும்படி கஷ்டம் எடுத்துக்கொள்.

2. கூட்டம்

அதிக கூட்டமான ஜனங்கள்—ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், இந்தியர்கள், பிரிட்டிஷ்காரர், சீனக்காரர், அமெரிக்கர், ஆப்பிரிக்கர், பல நிறமுள்ள மனுஷர், பணக்காரர், ஏழைகள், ராஜாக்கள், அதிகாரிகள், வியாபாரிகள், கூலி ஜனங்கள், பல வகுப்பு ஜனங்கள்; பார்க்கக்கூடியமட்டும் முகங்களே தெரிகிறது; எங்கே பார்த்தாலும் முகங்களாகவே இருக்கிறது.

ஆயிரக்கணக்கான முகங்கள் காணப்பட்ட பெரிய கூட்டத்தைப் பற்றி நினைத்துக்கொள். அதை எப்படி விஸ்தரிப்பாய் என்று

யோசி. பிள்ளைகள் அதை மனோபாவனையில் காணும்படி செய்யப் பிரயாசப்படு.

அங்கங்கே சிலதைப் பொறுக்கி எடுத்துக்கொள். 'பார், இரட்சகரைக் குற்றப்படுத்தின பிலாத்து அங்கே இருக்கிறான்; இயேசுவை அவமதித்த சாகுங் கள்ளன் அங்கே இருக்கிறான்; அவரைப் பின்பற்றின பேதுரு, பராக்கிரம ராஜாவாகிய தாவீது, அபாத்திர ராஜாவான எகோராம், தன்னுடைய ஜனங்களுக்காகத் தன் உயிரை அற்பமாய் எண்ணின எஸ்தர், தேவனை விரோதித்த யேசபேல்.' நாம் இன்னும் கூர்ந்துபார்த்தால் நம்மையே அந்தக் கூட்டத்திற் காணலாம் என்று சொல்லு.

ஆனால் அவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டார்கள் என்பதைக் கவனி. இடதுபக்கத்திலுள்ளவர்களுடைய முகங்களில் நிர்ப்பாக்கியம் இருக்கிறது. வலதுபக்கத்திலுள்ளவர்கள் மனமகிழ்ச்சியாய் இருக்கிறார்கள். வலதுபக்கத்தில், பேதுரு, தாவீது, ஏனோக்கு, தீமோத்தேயு, யோவான், மரியாள், எஸ்தர், ரூத் இன்னும் அநேக மநேகமான பேர் உண்டு. ஆனால் இடதுபக்கத்திலுள்ளவர்களோ மௌனத்தோடே தங்கள் தலையைக் கீழே போட்டுக்கொள்ளுகிறார்கள். நாம் அவர்களைப் பார்க்கிறதற்காக வெட்கப்படுகிறார்கள். இருதிறத்தாரும் உவமையில் செம்மறியாடுகளென்றும் வெள்ளாடுகளென்றும் சொல்லப்படுகிறார்கள். ஏன்? அவர்களுடைய குணத்தினாலே தான். செம்மறியாடுகள், நற்குணம், சாந்தம், கீழ்ப்படிதல், சமாதான குணம் இவைகளுக்கு அடையாளம்; வெள்ளாடுகள், முரட்டுத்தனம் கலகக்குணம், துஷ்டத்தனம், அயோக்கியத்தனம் இவைகளுக்கு அடையாளம்.

3. நியாயத்தீர்ப்பு

இந்தப் பிரிவு எப்படி உண்டானது? நியாயத்தீர்ப்பு நாளில் சடுதியாய் உண்டானதல்ல. தினசரி அவரவர் ஜீவியத்தில் உண்டானது. தினசரி ஜீவியத்தில் நடக்கும் சாதாரண விஷயங்கள்தான் கடைசியில் அவர்கள் வலதுபக்கத்தில் காணப்படுவார்களோ இடதுபக்கத்தில் காணப்படுவார்களோ என்று தீர்மானித்துவிட்டது என்பதை விவரி. அவர்கள் செய்த ஒவ்வொரு விஷயமும், அன்புள்ள

தானாலும், அன்பற்றதானாலும், கீழ்ப்படிதலானாலும், எதிர்க்கும் குணமானாலும், எதானாலும் கர்த்தருக்கே செய்யப்பட்டதாக எண்ணப்படும். அவரவருடைய அனுதின நடத்தைகளை அவரவருடைய மெய்யான குணத்தைக் காட்டுகிறது. (உதாரணம்: நீந்துகிறதினால் மீனும், மணியடிப்பதினால் கடிகாரமும் அறியப்படுவதுபோல, கிறிஸ்தவன் அவனுடைய நடத்தைகளால் அறியப்படுகிறான்.)

ராஜா நியாயத்தீர்ப்புக் கூறுகிறார். வலதுபக்கத்திலுள்ளவர்கள் பக்கமாய் முதலாவது திரும்புகிறார் (வாக். 34–40). கண்ணீர்கள் உலகத்தின் கஷ்டங்கள் எல்லாம் போய்விட்டது. நீதிமான்கள் இப்போது அழகாயும், பலமாயும், சந்தோஷமாயும், ராஜாவோடே சேர வருகிறார்கள்.

பிறகு இடதுபக்கத்திலுள்ளவர்கள் பக்கமாய்த் திரும்புகிறார் (வாக். 41-45). எவ்வளவு அழுகை, எவ்வளவு பயங்கரமான துக்கம், நம்பிக்கையற்ற துயரம்! இங்கே ஒளித்துக்கொள்ளவே முடியாது. தங்களுடைய ஜீவகாலம் முழுதும் கிறிஸ்துவைத் தங்களுடைய வழிகாட்டியாகவும் எஜமானாகவும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று மறுதலித்துவிட்டார்கள். இப்பொழுது அவர்கள் ராஜ்யத்தில் பிரவேசிக்கமுடியாது.

தரிசனம் என்றால் என்ன? (வருங்காரியங்களைக் காண்பது என்று பிள்ளைகளிடமிருந்தே வருவிக்கப் பார்.) வேத தரிசனங்களைப்பற்றி ஞாபகமிருக்கிறதா? (தானியேலுடைய தரிசனம், யோவானுடைய தரிசனம்.) இன்றைக்கு நம்முடைய பாடத்தில் ஒரு உவமை சொல்லப்படுகிறது, அந்த உவமையில் ஒரு ஆச்சரியமான தரிசனத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தத் தரிசனத்தில் உனக்கும் எனக்கும், நம்முடைய எல்லா சிநேகிதருக்கும் இடமுண்டு.

முகவுரை

அத்தியாயம் X

நீதி கற்பிக்கும் பாடம்—முதலாம் கற்பனை

பாடம்—உபா. 13.

தங்கவாக்கியம்.—'என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.' யாத். 20. 3.

நம்முடைய பிள்ளைகளுக்கு, கர்த்தருடைய ராஜ்யத்திற்குரிய பெரிய சன்மார்க்கப் பிரமாணங்களை விசேஷமாய்ப் பத்துக்கற்பனைகளில் அடங்கியவைகளைக் கற்பிப்பது அத்தியந்த அவசியம். இங்கேயும் எப்போதும்போலவே, பிள்ளைகளுடைய சுபாவ விருப்பத்திற்கிசைய பாடத்தை நடத்தவேண்டும். வெறுங்கற்பனை அல்லது சட்டம் பிள்ளைகளுக்குப் பிரியமிருக்காது. இதை வெகு திட்டமாய் மனதில் பதியச்செய்யலாம். ஆனால் அது பிள்ளையின் இருதயத்திலும் விருப்பத்திலும் பிரவேசித்து அதின் நடக்கையில் வெளியரங்கமான கிரியையாகக் காண்பிக்கப்படுமென்று நாம் திட்டமாய்ச் சொல்லக்கூடாது. இதை நிறைவேற்றும்படியாக, பிள்ளைகளின் விருப்பத்தைக் கவர்ந்துகொண்டு கற்பனைகளைச் சாதனையான உதாரணங்களோடு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டவேண்டியது அவசியம் (அத்தி. 5 பார்). இப்படித் திருஷ்டாந்தப்படுத்தும்படியாக, நடந்த விஷயங்களில் சிலவற்றைத் தெரிந்துகொள். ஆகையால், கர்மேலில் எலியா அடைந்த ஜெயத்தை பாடத்தின் முக்கிய பாகமாகத் தெரிந்துகொள்ளலாம். கவனத்தை இழுக்கும் வண்ணமாய் இந்தச் சரித்திரத்தைச் சொன்னால் சன்மார்க்கத்துக்குரிய நாட்டமும் ஆவிக்குரிய தேட்டமும் உண்டாகும்.

ஆவிக்குரிய பாடம் இதிலிருந்து சொல்லப்படலாம். தேவன் முதல். முதலாவது தேவனே. பிள்ளைகள் ஆவிக்குரிய பாடத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் அது கதையிலிருந்துதான் இயல்பாயும் லேசாயும் உண்டாகவேண்டுமென்பதை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். முன்னே வற்புறுத்திச் சொன்னபிரகாரம் கதை சொல்லும்போதே

ஆவிக்குரிய பாடம்

ஆவிக்குரிய பாடமும் அடுத்தடுத்து வரும்படியாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். இதுதான் கதையின் முக்கிய தாற்பரியமாய் இருக்கவேண்டும்.

தற்காலத்திலும் பிள்ளைகளுக்கு விக்கிரகங்களை வைத்துக்கொள்ளும்படியான சோதனை உண்டு. சிலருக்கு மாத்திரமும் கற்களாலும் உலோகங்களாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை வணங்கும்படியான சோதனை உண்டு.

அனுதின அப்பியாசம்

(கிறிஸ்தவர்களல்லாத மாணாக்கராயிருப்பார்களானால் இதைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லு.) ஆனால் எல்லாருக்கும் ஒவ்வொரு விதமான விக்கிரகம் உண்டு. கையால் தொட்டு சம்மட்டியால் அடிக்கக் கூடாததாய் இருந்தும், அவைகளைப்போலவே அவலட்சணமும் கேடுள்ளவைகளுமான விக்கிரகங்களுண்டு. அவைகள் என்ன? யாராவது என்னவென்று சொல்லக்கூடுமோ? நான் என்பதுதான் விக்கிரகங்களிலெல்லாம் பெரிதும் அவலட்சணமுமான விக்கிரகம். தன்னயம் காட்டப்படுகிற சில விஷயங்களைப் பிள்ளையையே சொல்லும்படி செய். உதாரணமாக, அவர்களுடைய சொந்த வழிகளின்படி முரட்டாட்டம் செய்வது, பங்கிட இஷ்டமில்லாமை, முதலாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற விருப்பம், மற்றவர்களைப்பற்றி நினையாமை. சில பிள்ளைகள் எப்பொழுதும் தங்களைப் புகழவேண்டுமென்பதே பிரியம். தங்களைப்பற்றியும் தங்கள் கிரியைகளைப்பற்றியுமே பேசிப் பெருமைபாராட்டுவார்கள். தன்னையே வணங்குகிற சில பிள்ளைகளின் மற்றவிதமான நடத்தைகளைப்பற்றி உபாத்தியாயர் அறிந்திருக்கலாம். நேரமிருந்தால் பொக்கிஷம் நிறைந்த விக்கிரகத்தை மகமது உடைத்த விஷயத்தையாவது, ஆபிரகாம் சிறுபிள்ளையாயிருந்தபோது தன்னுடைய தகப்பன் கடையிலுள்ள விக்கிரகங்களை உடைத்த விஷயத்தையாவது சொல்லித் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டலாம். முடிக்கிறதற்குமுன்னே, பிள்ளைகளுடைய மனதில் இந்தக் கற்பனை தெளிவாய்ப் பதிந்திருக்கிறதா என்று பார்த்துக்கொள்.

கதைமுழுவதும் உற்சாகமான விஷயங்களால் நிறைந்திருப்பதால் மாணாக்கருக்குப் பிரியமாயிருக்கும். முக்கியமாய் எலியாவின் பயமின்மை அவர்களுடைய கவனத்தைக் கவரக்கூடியதாயிருக்கலாம்.

முக்கிய மனக்கவர்ச்சி

1 இரா. 18-ம் அதிகாரத்தை நன்ருய் வாசித்து, அதிலிருந்து நாலு முக்கிய குறிப்புகளை எடுத்துக்கொள்ளலாம். சில தகுதியான

சரித்திரம் வார்த்தைகளால் இந்தச் சரித்திரத்தையும் கற்பனையையும் இணைக்கலாம்.

1. கர்மேல் பர்வதத்தின்மேல் கூடுதல்

பின்வருமாறு வர்ணி. தட்டைச் சிகரமுள்ள குன்று, மழையில்லாமையால் மரங்களில்லாமல் காய்ந்துபோய் இருக்கிறது. ஒரு பெரிய ஜனக்கூட்டம், ஐசுவரியவான்களும், ஏழைகளும், வயோதிபரும், வாலிபரும், தேவனுக்கும் விக்கிரகமாகிய பாகாலுக்கும நடக்கப்போகிற பெரிய யுத்தத்தைப் பார்க்கும்படியாக எலியாவினுல் அழைக்கப்பட்டிருக்கிருர்கள். ராஜாவாகிய ஆகாபும், அழகிய வஸ்திரந் தரித்த கோர்ட்டு உத்தியோகஸ்தரும், புதிதாய்ச் செய்த பலிபீடத்திற்கு முன்பாக பாகாலுடைய நானூறு தீர்க்கதரிசிகளும் நிற்கிருர்கள்; எலியாவோ தனிமையாய்ப் பயமில்லாமல், ஒட்டகமயிருடையைத் தரித்தவனுய் தேவனுடைய உடைந்துபோன பலிபீடத்தின் முன்பாக ஏகாந்தமாய் நிற்கிருன்.

2. பலிபீடத்தண்டை பாகாலுடைய பூசாரிகள்

பாகால் அக்கினி தெய்வமென்றும், ஆகையால் பாகால் செய்ய வேண்டிய அதே விஷயத்தையே எலியா தெரிந்துகொண்டதாகவும் நன்ருய் விளக்கிக்காட்டு. அக்கினியின் மூலமாய் உத்தரவு அருளப்போகிறது யார்? மெய்க்கடவுளாகிய ஏகோவாவா அல்லது பாகாலா? அந்த அக்கினியானது வானத்திலிருந்து இறங்கி பலியைப் பட்சிக்க வேண்டும். முதலாவது அவர்கள் தங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடும்படியாக எலியா இடங்கொடுக்கிருன்.

காலையில் இந்த விவாதம் தொடங்குகிறது. பாகாலுடைய பலிபீடத்தைப் பாருங்கள், எருதுகள் துண்டிக்கப்பட்டு கட்டைகளின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. நானூறு தீர்க்கதரிசிகளும் பாகாலை நோக்கிக் கூப்பிட்டு, தங்களுடைய முயற்சியிலே மூர்க்கங்கொண்டவர்களாய்க் கத்திகளினுல் தங்களைக் கீறிக்கொண்டு, தங்களுடைய பலிபீடத்தின்மேல் குதித்துக்கொண்டு நிற்கிருர்கள். ராஜாவும் ஜனங்களும் வெகு ஆத்திரத்தோடே எதிர்பார்க்கிருர்கள். நேரமும்

மெதுவாய்க் கடந்துபோகிறது. மறுமொழி இல்லை. எலியா அவர்களருகே நின்றுகொண்டு பரிகாசம் செய்கிறான். (வாக். 27.)

3. பலிபீடத்தண்டை எலியா

இப்பொழுது மத்தியானம் ஆகிவிட்டது. எலியா தேவனுடைய பலிபீடத்தை இஸ்ரவேல் கோத்திரம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கல்லாக பன்னிரண்டு கற்களால் செப்பனிட்டு, ஜனங்களைத் தன்னருகில் வரக் கூப்பிடுகிறான். தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, நேரிடப்போகிறது எந்த தந்திரத்தினாலும் அல்ல என்று காண்பிக்கும்படியாக பலிபீடத்தின்மேல் நாலு குடம் தண்ணீர் மூன்று தடவை ஊற்றுகிறான்; சுற்றியுள்ள கால்வாயையும் நிரப்பும்படியாக ஊற்றுகிறான். (வாக். 31–35.)

4. வானத்திலிருந்து அக்கினி

எலியா தெளிவான நீலவர்ணமான ஆகாயத்திற்கு முன்பாகத் தன் கைகளை விரித்து அக்கினியால் உத்தரவருளவேண்டுமென்று தேவனை நோக்கிப் பிரார்த்திக்கிறான் (வாக். 36, 37). ஜனங்களோ ஆவலோடே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உடனே திடீரென்று அக்கினி இறங்கி பலியைப் பட்சித்துக் கால்வாயிலுள்ள தண்ணீரையும் நக்கிப்போட்டது; ஜனங்கள் பிரமித்து 'கர்த்தரே தெய்வம்' என்று கத்தினார்கள்.

இந்த ஜனங்களைப் பாவத்தில் நடத்தின பாகாலின் தீர்க்கதரிசிகள் ஓடத் தலைப்பட்டார்கள். ஜனங்களோ இனிமேல் விக்கிரக வணக்கத்தை நிறுத்திப்போடத் தீர்மானம் செய்தவர்களாய் அவர்களைப் பிடித்துக் கொன்றுபோட்டார்கள். இன்னும் ஜனக்கூட்டத்திலிருந்து 'கர்த்தரே தெய்வம்' என்று சத்தம் உண்டாகிறது.

ஒரு பக்கத்தில் எத்தனை தளகர்த்தர் இருக்கவேண்டும்? (ஒன்று.) தளகர்த்தன் சொன்னதை ஒரு பையன் செய்யாவிட்டால் அவனை என்ன செய்யவேண்டும்? (விளையாட்டிலிருந்து தள்ளிப்போடவேண்டும்.) கிறிஸ்துவின் பக்கத்திலுள்ளவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரையே வணங்கவேண்டும். அவர்தான் நம்முடைய கர்த்தர் (எபி. 2. 10). முதலாம் கற்பனை-

முகவுரை

நமக்குக் கற்பிப்பது இதுதான். இதை நாமெல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து சொல்லுவோம். அதற்குப்பிறகு இதைப்பற்றி ஒரு நல்ல கதை சொல்லுவேன்.

அத்தியாயம் XI

ஜீவிய சரித்திரம்—கிதியோன்

பாடம்—நியா. 6. 8.

தங்கவாக்கியம்.—'பலங்கொண்டு திடமனதாயிரு.' யோசு. 1. 7.

இது ஒரு ஜீவிய சரித்திர பாடம். பிள்ளைகள் இன்னும் ஜீவிய சரித்திரத்தில் அதிக பிரியம் வைக்கும்படியான நிலைமைக்கு வரவில்லை. முழு ஜீவியத்தையும் விட அதின் கிரியைகளில் பிரியப்படுவார்கள். ஆகையால் கிதியோனுடைய குணாதிசயங்களில் சிலவற்றை இங்கே சொல்லாமல் விட்டுவிடவேண்டும். படிப்பிக்கவேண்டிய முக்கிய சத்தியத்தை வற்புறுத்தும்படியான விஷயங்களையே எடுத்துக்கொள்ளவேண்டும். கிதியோனுடைய சரித்திரத்தைத் தப்பில்லாமல் கற்பிப்பது அல்ல, அவனுடைய தைரியமுள்ள ஜீவியத்திலிருந்து ஆவிக்குரிய பாடம் கற்பிப்பதே இதின் முக்கிய நோக்கம். இதை நினை.

இதிலுள்ள ஆவிக்குரிய பாடம் தைரியம், தேவனுக்காகவும் நேர்மைக்காகவும் காட்டின தைரியம். தைரியத்தைப்பற்றி அதிசயிப்பது பிள்ளைகளுக்குப் பிரியம். நீதியினிமித்தம் தைரியங்காட்டுவது மிகவும் நேர்த்தியானதென்பதே நாம் படிப்பிக்கவேண்டிய பாடம். கிதியோன் தேவனுக்கென்று பெரிய காரியங்களைச் செய்யத் துணிந்த மனிதன் என்று பிள்ளைகள் நினைக்கும்படி செய்யவேண்டும்.

ஆவிக்குரிய பாடம்

கிதியோனுடைய சகோதரரும் தேசத்தார்களும் எதிர்த்துத் தடுத்த விஷயத்தைச் செய்யும்படியாக அவனுக்குத் தைரியம் அவசியமாயிருந்ததுபோலவே நம்முடைய மாணாக்கருக்கும் தைரியம் அவசியம். சரியல்ல என்று நாம் அறிந்ததும், கர்த்தராகிய இயேசுவை விசனப்படுத்துகிறதுமான

அனுதின அப்பியாசம்

அநேக விஷயங்களை அநேக பெண்களும் பையன்களும் செய்கிறார்கள். மாணாக்கரைச் சுற்றி நெருங்கி நிற்கும் முக்கியமான சோதனைகளைப்பற்றிப் பேசுவதற்கு இது நல்ல சமயம். அவர்களுடைய சிநேகிதர் செய்யும் விஷயங்களை அறிந்த உபாத்தியாயர் அதற்கு விரோதமாய் எதிர்த்து உறுதியாய் நிற்கும்படி வற்புறுத்திச் சொல்ல வேண்டும். கிதியோன் தேவனிடமிருந்து தைரியத்தைப் பெற்றுக்கொண்டதுபோலவே மாணாக்கரும் பெற்றுக்கொள்ளக்கூடும்.

இது பிள்ளைகளுக்குப் பிரியமுண்டாக்கக்கூடிய எழுப்புதலான சங்கதிகளடங்கிய ஓர் சரித்திரம்; ஆனால் சத்துருவின் பாளையத்துக்குள் இரகசியமாய்ப் போன விஷயமே பிள்ளைகளின் மனதுக்கு மிகக் கிளர்ச்சியை உண்டாக்கும்.

முக்கிய மனக்கவர்ச்சி

அநேகமான பொருட்களிலிருந்து நாம் விரும்புகிற அதாவது தேவனுக்கென்று தைரியமான பக்தி காண்பிப்பது என்ற ஆவிக்குரிய சத்தியத்தை நன்றாய்ப் பதியச்செய்யக்கூடிய அந்தப் பாகங்களைமாத்திரம் தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யும்படியாக, வழக்கம் போல முக்கியமான காட்சிகளை உருவகப்படுத்துவோம்.

சரித்திரம்

1. கிதியோன் அழைக்கப்பட்டது

இஸ்ரவேல் ஜனங்கள் மீதியானியரால் ஜெயிக்கப்பட்டு அவர்களால் மிகவும் கொடூரமாய் நடத்தப்படுகிறார்கள். இந்த ஜனத்தை விடுதலைசெய்யும்படியாக ஒரு மனுஷன் அவசியம். இந்த மனுஷன் அதிக தைரியசாலியாயிருக்கவேண்டும். இந்த வேலைக்காக தேவன் வாலிபனான கிதியோனைத் தெரிந்துகொள்ளுகிறார். அவனைப் பாருங்கள். தைரியமுள்ளவன், பலசாலி, சத்துருக்களுக்குப் பயந்து, அடர்ந்த கர்வாலி மரத்தின்கீழே கோதுமையைப் போரடித்துக்கொண்டு தன்னுடைய தேசத்தாரின் தப்பிதங்களை நினைத்து அதிக விசனப்பட்டுக்கொண்டிருக்கிறான். கர்த்தருடைய தூதன் காணப்பட்டு, பாகாலுடைய விக்கிரகத் தோப்புகளை அழித்துப்போடும்படியாக உத்தரவு கொடுக்கிறான். (6. 14-26.)

தன்னுடைய விக்கிரகாராதனை செய்கிற சிநேகிதராலும், பந்துக்களாலும் கடினமாய் எதிர்க்கப்படும் என்று அறிந்திருந்தபோதிலும்,

கிதியோன் எப்படி இதைச் செய்து நிறைவேற்றினுன் என்பதை வெகு சுருக்கமாய்ச் சொல்லு. இந்த விஷயத்தில் உண்மையும் தைரிய முமுள்ளவனென்று காண்பித்தபிற்பாடு, அவர்களுக்கு விரோதமாய்ப் பெரிய சேனையை அனுப்பியிருக்கிற மீதியானியருக்கு விரோதமாகச் சண்டைசெய்யும்படியாக ஜனங்களைச் சேர்க்கும்படி தேவன் சொல்லுகிறுர்.

2. கிதியோனுடைய சேனை

மகா வலிமையுள்ள பயமற்ற கிதியோனைப் பாருங்கள். யுத்த எக்காளம் ஊதி ஜனங்களை அழைக்கிறுன். அவனுடைய சேனையில் ஆயிரக்கணக்காய் வந்து சேருகிறுர்கள். முப்பத்திரண்டாயிரம் ஜனங்கள். இது எவ்வளவு ஏராளமான கூட்டம். தாங்கள் அதிக ஏராளமாயிருப்பதால் ஜெயித்துவிடுவோம் என்று நம்பிக்கையாயிருக்கிறுர்கள். ஆனுல் தேவனுக்கு அத்தனைபேர் அவசியமில்லை. (காரணம் நியா. 7. 2-ல் பார்.) முன்னூறு பேர் மாத்திரம் இருக்குமட்டும் எப்படி கிதியோனுடைய சேனை இரண்டுதரம் குறைக்கப்பட்டது என்பதை விவரித்துக் காண்பி. அவன் பக்கமாய் இவ்வளவுபேர் சேர்ந்தபோது மனம் பூரித்தான். ஆனுல் கொஞ்சப்பேர் ஆனபோதோ அதைரியப்பட்டு நம்பிக்கையற்றவனுயிருந்தான்.

3. கிதியோன் தைரியப்படுத்தப்பட்டது

பயப்படுகிற மனுஷனை தேவன் உபயோகிக்க முடியாது. ஆகையால் தேவன் கிதியோனைத் தைரியப்படுத்தி பலப்படுத்தும்படியாக ஒரு ஏற்பாடு செய்கிறுர். கிதியோன் தன்னுடைய வேலைக்காரனோடே மீதியானியருடைய பாளையத்துக்குப் போய் அங்கே அவர்கள் பேசுகிறதைக் கேட்கும்படி தேவன் சொல்லுகிறுர். பிள்ளைகளில் யாராவது சத்துருவின் பாளையத்தின் ஓரத்துக்குத் தனிமையாய்ப் போவார்களா? என்று கேள்.

பள்ளத்தாக்கின்மேலுள்ள அந்த விஸ்தீரணமான கூடாரங்கள் நிறைந்த பாளையத்தில் இராத்திரிவேளையில் எல்லாம் அமைதலாயும் இருட்டாயும் இருக்கிறது. கிதியோனும் அவனுடைய வேலைக்காரனும் மெதுவாய்ச் சமீபமாய் நகர்ந்துபோய் உற்றுக் கேட்கிறுர்கள். இரண்டுபேர் பேசிக்கொள்ளுகிறுர்கள். ஒருவன் சொப்பனத்தைச்

சொல்லுகிறான் (நியா. 7. 13, 14). கிதியோனின் தைரியம் பலப் படுத்தப்படுகிறது. யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டவனாகத் திரும்புகிறான். எப்படியென்றால், தேவன் அவனுடைய மனதிலே ஜெயிக்கக்கூடிய ஒரு உபாயத்தைக் காட்டினார்.

4. கிதியோனுடைய ஜெயம்

கிதியோனுடைய முன்னூறு மனிதரும் யுத்தத்திற்காக எப்படி விநோதமாய் ஆயுதம் தரிப்பிக்கப்பட்டார்களென்றும் அமைதலாய் இருட்டிலே அந்த விஸ்தாரமான பாளயத்தை எப்படி வளைந்து கொண்டார்களென்றும் ஊக்கமாய் விவரித்துக் காண்பி. இப்போது நடுராத்திரி, பாளயத்தில் சத்தமேயில்லை; எல்லாரும் தூங்குகிறார்கள். கிதியோன் அடையாளம் காண்பித்தவுடனே எக்காளங்கள் தொனிக்கின்றன. அங்கே உண்டாகிற பயத்தையும் குழப்பத்தையும் கவனி. பானைகள் உடைக்கப்பட்டு முன்னூறு வெளிச்சங்களும் காட்டப்பட்டபோது, கலங்கியிருந்த மீதியானியருக்குத் தங்களைச் சுற்றிலும் பெரிய சேனை வந்துவிட்டதாகக் காணப்பட்டது. கிதியோனுக்குப் பயந்து விரோதமாயிருந்த மற்ற இஸ்ரவேலரும் தேசத்திலிருந்து வந்து இந்த வெற்றித்தொழிலில் சேர்ந்துகொண்டார்கள்.

இன்றைக்கு ஒரு வாலிபன் தன்னுடைய தேசத்தைப் பயங்கரமான சத்துருக்களினின்று எப்படி இரட்சித்தான் என்பதைப்பற்றிய ஓர் ஆச்சரியமான கதை சொல்லப்போகிறேன். இப்படிச் சொன்னால் போதும். உடனே அவர்களுடைய கவனம் நிலைநிறுத்தப்படும்.

முகவுரை

இளம் மாணாக்கருடைய பாடங்களின்பேரில் கேள்விகள்

1. பின்வரும் சரித்திரங்களில் இளம் மாணாக்கருக்கு விசேஷித்த விருப்பத்தை உண்டாக்குகிற முக்கியமான குறிப்புகளென்று நீர் நம்புகிறவைகளை எழுதும்.

(a) கொர்நேலியுவின் விருத்தாந்தம். (அப். 10.)

(b) அலங்கம் கட்டப்பட்டது. (நெகே. 4.)

(c) எரிகோ பிடிபட்டது. (யோசு. 6.)

2. பின்வருபவற்றில் மாணுக்கருக்கு முக்கியமான ஆவிக்குரிய பாடம் என்று நீர் எண்ணுகிறதை எழுதும்.

(a) பெனியேலில் யாக்கோபுடைய அனுபவம். (ஆதி. 32.)

(b) சமாரியாவில் நடந்த சம்பவம். (2 இரா. 7.)

(c) கலியாண விருந்து உவமை. (லூக். 14. 16–24.)

3. பின்வருபவைகளிலிருந்து ஆவிக்குரிய பாடம் சொல்லி, அதை இந்த வகுப்புப் பிள்ளைகளிடத்தில் எப்படி உபயோகிப்பீர் என்று காண்பியும்.

(a) ஐந்தாம் கற்பனை. (யாத். 20. 12.)

(b) தாவீது சவுலினிடத்தில் நடந்துகொண்டது. (1 சாமு. 26.)

(c) திராட்சத்தோட்டமும் வேலையாட்களும் உவமை. (மாற். 12.)

4. பின்வரும் பாடங்களுக்குச் சுருக்கமான முகவுரை எழுதும்.

(a) எகிப்தியர் அழிக்கப்பட்டது. (யாத். 14.)

(b) யோசுவாவின் தரிசனம். (யோசு. 5. 13–15.)

(c) நல்ல சமாரியனுடைய உவமை. (லூக். 10.)

5. மாதிரிப் பாடத்தில் காட்டப்பட்ட விதமாகப் பின்வருபவைகளிலிருந்து பாட ஆயத்தம் செய்யும். (ஒவ்வொரு பாடமும் ஐந்நூறு வார்த்தைகளுக்கு அதிகப்படாமலிருக்கவேண்டும்)

சரித்திரம்

(a) நாயீனூர் வாலிபன் (லூக். 7). தங்கவாக்கியம். 'என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.' (நீதி. 23. 26.)

(b) அக்கினியின் நடுவில் மூன்று மனிதர் (தானி. 3). 'நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.' (தானி. 3. 17.)

(c) தாவீதும் கோலியாத்தும் (1 சாமு. 17). தங்கவாக்கியம். (1 சாமு. 17. 45.)

உவமை

(*d*) மன்னிக்கமாட்டாத வேலைக்காரன் (மத். 18). தங்கவாக்கியம். (மத். 6. 14, 15.)

(*e*) காணாமற்போன ஆடு (லூக். 15). தங்கவாக்கியம். (லூக். 15. 7.)

சன்மார்க்கத்துக்குரியவை

(*f*) எட்டாம் கற்பனை (யாத். 20. 15. லேவி. 6. 1–7). தங்கவாக்கியம். (யாத். 20. 15.)

ஜீவிய சரித்திரம்

(*g*) பேதுரு விழுந்துபோனது (லூக். 22. 31–34, 54–62). தங்கவாக்கியம். (1 யோவா. 2. 1.)

(*h*) சிம்சோன் (நியாயாதிபதி அதிகாரங்கள் 13–16). தங்கவாக்கியம். (1 கொரி. 10. 12.)

(*i*) பவுல் குணப்பட்டது (அப். 9. 1–20). தங்கவாக்கியம். (எபே. 2. 8, 9.)

பிரிவு III

வாலிப மாணாக்கர்

அத்தியாயம் XII

குணகுணங்கள்

இந்த முதிர்ந்த மாணாக்கருடைய குணாதிசயங்களைப்பற்றித் தகுந்தபடி சொல்லவேண்டுமேயானால், ஒரு அதிகாரம் போதாது, ஒரு புஸ்தகம் எழுதவேண்டும்; ஆனால் நாம் படிப்பிக்கவேண்டிய விதத்தைத் தீர்மானிக்கிற விஷயங்களை மாத்திரம் சுருக்கமாய்க் கவனித்துக்கொள்ளவேண்டும் இவர்கள் நீதி, நியாயம், மனச்சாட்சி இவைகளால் நடத்தப்படும் வய

குணகுணங்கள்

துக்கு வந்துவிட்டார்கள். மனது சரீரத்தை ஆள ஆரம்பித்து விட்டது. அறியவேண்டியதையெல்லாம் அறிந்துவிட்டாற்போல மேலான ஞானத்தை உடையவர்களாகத் தங்களைக் காண்பிக்கக்கூடிய வர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றிச் சுய எண்ண முடையவர்களாயிருப்பது உபாத்தியாயருக்குச் சில சமயங்களில் கஷ்டத்தை உண்டாக்கும்; ஆனால் இதுதான் அவர்கள் புருஷதத்துவம் அல்லது ஸ்திரீதத்துவம் அடைந்ததின் பயன் ஆகையால் அவர்களுக்கு இந்த விஷயத்தில் அன்பான வழிகாட்டி உதவிசெய்ய வேண்டும். ஜீவியத்தில் தங்களுடைய வேலையைச் செய்து வாலிபர் என்று அறியப்படும்படி விரும்புகிறார்கள். அவர்கள் உபாத்தியாயருடைய கேள்விகளுக்கு இளம் பிராயத்தில் உத்தரவு கொடுத்தது போல உடனே உத்தரவு இப்பொழுது கொடுக்கமாட்டார்கள்.

இந்த வாலிபப் பிள்ளைகளைப்பற்றிக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இவைகளே. எளிதில் வெளிக்குக் காணப்படாத மிகவும் பேர் போன குணம் அவர்களுக்கு உண்டு. தங்களுடைய அவாவைத் திருப்திசெய்யும்படியாகத் தங்களுடைய ஜீவியத்திற்கு ஏதோ ஒரு இலக்கு தேடுகிறார்கள். இதை அவர்களே அறிந்துகொள்ளுகிற தில்லை. அதினால் பரவாயில்லை. இதை உபாத்தியாயர் அறிந்து கொள்ளவேண்டும்; ஏனென்றால் இதின் மூலமாய்த்தான் அதிகமான சித்திபெறவேண்டும்.

இந்தக் காலத்தின் முக்கியத்தைப்பற்றி அதிகமாய் விவரிக்க முடியாது. இப்பொழுதுதான் அவர்களுடைய குணமானது ஸ்திரமான கடைசியான வடிவம் எடுக்கப்போகிறது; இதுதான் தீர்மானிக்கும் வயது. அதுவுமல்லாமல் இதுவே எவ்வித விஷயமும் மனதில் பதியும் சமயம். இது சீக்கிரம் கடந்துபோகும். அபாயத்துக்குள்ளாவது அல்லது சத்தியத்திற்கு இணங்குவது என்ற இரண்டு தன்மையும் வாலிப மாணாக்கரிடத்தில் முதிர்ந்த பக்குவத்திலிருக்கிறதென்பதை மனதில் வைத்தவர்களாய் அவர்கள் மத்தியில் பயபக்தியான நோக்கத்தோடே வேலைசெய்யவேண்டும். இரண்டு வல்லமைகளும் ஒன்றையொன்று மேற்கொள்ளும்படியாகப் போராடுகிறது. போராட்டத்தின் பலன் சிலவேளைகளில் தெளிவாய் இருக்கிறதில்லை. பிள்ளைகள் கிறிஸ்துவுக்காகத் தீர்மானஞ் செய்திருக்கிறார்களா?

அப்படியில்லாவிட்டால் ராஜ்யத்திற்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறார்கள் என்ற ஆவிக்குரிய இடத்தைப்பற்றி உபாத்தியாயர் யூகமாய்க் கண்டுபிடித்துக்கொள்ளவேண்டும். விடியற்காலத்திற்காகக் காத்திருக்கும் ஜாமக்காரனைப்போல கிறிஸ்துவை விரும்பும் அடையாளத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் அவர்களில் ஒருவனை இணங்கும்படியாக எப்போது நடத்துவாரோ நமக்குத் தெரியாது. சமயம் நேரிடும்போது உபயோகிக்கும்படியாகத் தகுதியான வார்த்தைகளோடு தயாராயிருக்கவேண்டும்.

வாலிபப் பிள்ளைகளுக்கு மார்க்கமானது இன்னும் உள்ளான பிரகாரமாய்க் கிரியை செய்கிறதில்லை; ஆனால் நடத்துகிறவர்களுக்கும், சிநேகிதருக்கும் உண்மையாயிருத்தல், பயிற்றுவிக்கப்படுதல், கீழ்ப்படிதல், உபயோகமாயிருத்தல், கஷ்டங்களை மேற்கொள்ளுதல், தன்னையடக்குதல் இப்பேர்ப்பட்ட வெளிப்படையான விதமாய்க் கிரியைசெய்கிறது.

மார்க்கம்

இரண்டு இயற்கையறிவு பூர்த்தியாய் விருத்திசெய்யப்படவேண்டும். அவையாவன: போர்செய்யும் அறிவும், அந்நியோந்நியமுமே. மல் யுத்தம் அல்லது ராணுவயுத்தம் இவைகளில் ஜெயம் அடையும்போது எப்படிக் கனமாய் எண்ணுகிறார்களோ அப்படியே கிறிஸ்து மார்க்கத்தின் ஜெயத்தைப்பற்றியும் அவர்கள் எண்ணிக்கொள்ளக்கூடும். இப்பருவத்தில் அவர்கள் எக்காரியத்தையும் வைராக்கியத்தோடு செய்யக்கூடிய சுபாவமுடையவர்களா யிருப்பதால் மார்க்க விஷயங்களையும் வைராக்கியத்தோடு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். சில பெரிய பையன்கள் மார்க்கமானது கிரியையல்லாத ஓர் விஷயமென்றும், ஒன்றும் செய்யாமல் சோம்பலாயிருப்பது பாவமின்மை என்றும் எண்ணுகிறார்கள். ஆகையால் மார்க்கம் அவர்களிடத்தில் நல்ல வேலை செய்கிறதில்லை. ஆனால் அவர்களுக்கு ஊழியந்தான் ஜீவியத்தின் முக்கிய சட்டமாய் இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு உதவிசெய்தல், அவர்களுடைய வறுமையைக் குறைத்தல், அவர்களுடைய நோவு துக்கத்தில் ஆதரவாயிருத்தல், மற்ற மிருக ஜாதிகளிடத்தில் அன்பாயிருத்தல் இப்படிப்பட்ட விஷயங்கள் வேலை செய்யும்படியான விருப்பத்தை எழுப்பிவிடுவதற்கு ஏற்ற வழிகள்.

இந்தப் பருவத்தின் கடைசிக்கு அவர்கள் வரும்போது, கிறிஸ்து வுக்காக உண்மையாய்த் தீர்மானம் செய்திருப்பார்களானால், பூரண புருஷர் ஆகும்போது மார்க்க அனுஷ்டானம் தேவபக்தியில் வளர்ந்து வரும்.

இந்த வயதுப் பிள்ளைகளுக்கு ஏதாவது ஆண்மையைக் காட்டும் வீரனுடைய ஜீவிய சரித்திரத்தில்தான் அதிகப் பிரியமிருக்கும்.

கதையில் விருப்பம்

கெட்ட உதாரணங்கள் பாடத்தில் கொண்டுவரப் படுவது அவ்வளவு அவசியமில்லை; ஏனென்றால், அவைகளால் அவ்வளவு பிரயோஜனமில்லை. ஆனாலும் வேளாவேளை களில் ஒரு தவறுதலை எடுத்து பாவத்தின் பலன் என்று சொல்ல லாம். கதையில் விருப்பங்கொள்ளுவதில் வாலிபப் பிள்ளைகளுக்கும் இளம் யௌவனருக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இப் பொழுது இவர்களுக்கு அதிகப் பிரியம் உண்டாக்குவது வீரச் செய்கை அல்ல, வீர ஜீவியமே; செய்கைக்குப் பின் மறைந்திருக்கும் குணமே. ஜெயம் அல்லது அபஜெயம் உண்டாக்குகிற மூலாதாரம் அவர்களால் மதிக்கப்படுகிறது. செய்கையை உண்டாக்கும் எண் ணங்களும், வீரன் நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளும்படி செய்த சன்மார்க்க விருப்பங்களும் போராட்டங்களுமே. மேன்மையான உத்தம ஜீவியத்தின் சிறப்பைப்பற்றி நிச்சயப்படுத்தும்போது அவ் விதமாகவே ஜீவிக்கவேண்டுமென்ற விருப்பம் இயல்பாகவே உயிர்ப் பிக்கப்படுகிறது. பெரியவர்களோடு சகவாசம் செய்வதினால் மேலான நல்ல ஜீவியம் செய்யும்படியான ஏவுதல் உண்டாகிறது. ஜீவிய விருத்தாந்தம் வாலிபப் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு முக்கிய பிர யோஜனமானது.

ஜீவிய சரித்திரத்தைப் படிப்பிக்கும்போது, அது ஒரு சரித் திரம் மாத்திரம் அல்ல, ஒரு உறுதியான ஜீவியத்தின் படம் என்று நன்றாய் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். மற்ற அறிவுகளைப் போலவே வேத எழுத்தின் அறிவும் குணத்தைச் சீர்ப்படுத்துவதற்குச் சக்தியற்றதாயிருக்கிறது. நாம் சொல்லுகிற ஜீவிய சரித்திரத்தைப் பற்றி உண்டாகிற எண்ணமானது அந்த வீரனுடைய முழு குணத் தையும் கவர்ச்சிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். இவ்விதம் முக முகமாய் நடத்திப் பாடம் முழுவதும் கையாடப்படவேண்டும்; என்ற

போதிலும் அவனுடைய செய்கையின் நோக்கம், பலன் இவைகளைக் கண்டுபிடிக்கும்படியாக நம்முடைய பாடத்தை விவரித்துக் காட்டலாம்.

வேதாகமம் முக்கியமாய் வாலிப மாணுக்கருக்குத் தகுதியானது. இது சட்டம் அல்லது குணத்தைக் காட்டும் சட்டநூல் அல்ல, ஆனால் முக்கியமாய்க் கட்டளைப்படி எழுதப்பட்ட சரித்திரக் குவியல். வேதாகமத்தில் ஏறக்குறைய ஐயாயிரம் நாமங்களுண்டு. இவற்றில் ஆண்கள் அல்லது பெண்களுடைய ஒப்பற்ற சுபாவத் தன்மையைப் பற்றிய சில சரித்திரங்களுண்டு. முக்கியமாய் வேதாகமம் போதிக்கிறது உறுதியான செய்கைகளைப்பற்றித்தான்.

நோக்கம்

ஜீவியத்தை உருவகப்படுத்தும்போது, மாணுக்கனுடைய எண்ணத்தில் வீரனுகக் காணப்படும்படியாக அவனுடைய நோக்கம் கிரியை செய்யும்படி தூண்டுவதுதான் உபாத்தியாயருடைய முக்கிய கருத்தாயிருக்கவேண்டும். வீரனையும் அவனுடைய நற்குணங்களையும் நன்குமதிக்கும்படியாக ஏவிவிடுவதே முக்கியமான முயற்சி. சரியானபடி நியாயந்தீர்க்கும் சக்தி உண்டாகி நல்ல எண்ணங்கள் பிறப்பதினுல், மார்க்கத்துக்குரிய சுபாவத்தை விருத்திசெய்ய உபாத்தியாயர் பிரயாசப்படுகிறதுண்டு. இந்த ஜீவிய சரித்திரத்தின் கதைகள் நன்ருய்ச் சொல்லப்படுமானுல், மாணுக்கரின் அனுபவத்தைப் பிடித்து அவர்களுடைய விருப்பத்தை உயிர்ப்பிக்கவேண்டும். அவைகள் புதிய ஏற்பாட்டின் சன்மார்க்கப் பாடங்களை வற்புறுத்தி ஜீவிய சட்டங்களை ஏற்படுத்தும் எண்ணங்களை விருத்திசெய்யும். ஆகையால், மாணுக்கருடைய ஜீவியத்தில் இந்த நற்குணங்கள் பலன் செய்யும்படியான விருப்பம் உண்டாகும்படியாக அறிவிப்பதைவிடப் பதியச்செய்வதே முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும்.

பலாபலன்

இந்தப் பிராயத்துப் பையன்களும் பெண்களும் சீக்கிரமாய் மறுமொழி கொடுக்கமாட்டார்கள்; தங்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்துவது தங்களுக்கு அவமானம் என்று அடிக்கடி நினைக்கிருர்கள். சரியானதைத் தெரிந்துகொள்ளுவதில்தான் அவர்களுடைய மறுமொழி காணப்படும். ஒவ்வொரு பாடத்திலும் ஜீவியத்தில் சில தீர்மானங்களைச் செய்யும்

படியான எவுதல் உண்டாகவேண்டும். இந்தச் சிறு சிறு தீர்மானங்கள் ஒன்ருய்ச் சேரும்போது பெரிய தீர்மானத்திற்கு வழியை ஆயத்தம் செய்கிறது. எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்சென்று ஒப்புக்கொடுப்ப தென்ற இந்தத் தீர்மானமே நம்முடைய முக்கிய நோக்கம். நம் முடைய வேலையின் பலனும் இதுதான். இதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது, மறந்தவிட்டால் தவறிப்போவோம்.

ஒவ்வொரு மனுஷனுடைய ஜீவியத்திலும் முக்கிய விஷய மாவது அவனுடைய சித்தத்திலிருந்துதான் உண்டாகிறத. உபாத்தியாயர் ஜெயிக்கவேண்டிய கோட்டை இதுதான்; சொல்லப் படும் குணகுணங்களின்பேரில் மாணுக்கர் சொல்லுகிற நியா யங்களின்மூலமாய் இந்தக் கோட்டையைப் படிப்படியாய் ஜெயிக் கலாம். அவர்கள் தங்களுடைய நியாயங்களைச் சொல்லாமலி ருக்கலாம். ஆனால் இவைகள் அவர்களுடைய இருதயத்துக் குள்ளே சந்தடியில்லாமல் முத்திரிக்கப்படுகிறது. எல்லாரும் இந் தப் பெரிய தீர்மானத்தைச் செய்ய அல்லது சந்தேகிக்க எது வுண்டு. அவர்கள் இந்தப் பிராயத்தில் சில மாதிரியான தெரிந்து கொள்ளுதலே அல்லது சில தீர்மானங்களைச் செய்கிருர்கள். அநேக விஷயங்களில் இந்தத் தெரிந்துகொள்ளுதல் ஜீவகாலபரியந்தம் நிலை நிற்கும்.

பன்னிரண்டாவது அத்தியாயத்தின்பேரில் கேள்விகள்

1. வாலிப மாணுக்கருக்குள் மிகப் பிரயோஜனமான வேலை நடத் துபபடியாக அவர்களுடைய சுபாவத்தில் உபாத்தியாயர் கவனிக்க வேண்டிய சில முக்கிய குறிப்புகளெவை?

2. என் வாலிபப் பிராயம் மிகவும் முக்கியமான காலம்?

3. பதினுறு வயது பையனுக்காவது பெண்ணுக்காவது மார்க் கத்தைக் காண்பிக்கும் விதத்தை உம்முடைய சொந்த வார்த்தைகளில் எழுதும்.

4. இளம் மாணுக்கரும வாலிப மாணுக்கரும் விரும்புகிற விருப் பத்திலுள்ள பேதாபேதம் என்ன?

5. வாலிபப் பிராயத்தில் படிப்பிபபதற்கு ஜீவிய சரித்திரப் பாடம் எப்படி முதன்மையானது?

6. பெரிய பிள்ளைகளுக்கு ஜீவிய சரித்திரத்தை விவரிக்கும்படி ஆயத்தம் செய்யும்போது உபாத்தியாயருடைய முக்கிய நோக்கம் என்ன?

7. வாலிப மாணுக்கருக்கு ஒவ்வொரு ஓய்வுநாட் பாடத்திலும் உடனே கிடைக்கும் பலன் என்ன என்றும், இந்தப் பலன்கள் இயேசுகிறிஸ்துவுக்குத் தங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானிப்பதற்கு எப்படி வழியை ஆயத்தம்செய்யும் என்றும் விவரித்துக் காண்பி.

8. வாலிப மாணுக்கர் கிறிஸ்துவுக்காகத் தீர்மானஞ்செய்யும்படி உபாத்தியாயர் முக்கியமாய் நாடவேண்டியதேன்?

அத்தியாயம் XIII

ஓர் சரித்திரம்—முதல் சீஷர்களின் அழைப்பு

பாடம்—மாற் 1. 14–20. யோவா. 1. 40–44. மத். 5. 17–20.

தங்கவாக்கியம்.—'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படியாக வேண்டிக்கொள்ளுங்கள்.' மத். 9. 37, 38.

வாலிபப் பிராயத்திலிருப்பதால் பாடமானது முன் பாடங்களைப் போலவே கதைப்போங்காய் இருக்கிறது. ஆனுல் பாடம் நல்ல வேலை செய்யவேண்டுமானுல் அதில் நாடகப்போங்கும் முகமுகமாய்ப் பேசும் விதமும் காட்டப்படவேண்டும். ஆகையால் இதுவரையும் ஆயத்தம் பண்ணினதுபோலவே செய்வது நல்லது.

வேலையாட்கள் மிகவும் அவசியம். இது நம்மெல்லாரையும் ஊழியஞ்செய்ய அழைக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்ற இந்த மனிதர்களுடைய தீர்மானத்தைப் படிப்பிக்கும்போது, அவர்கள் ஊழியஞ்செய்யும்படியாகவே இரட்சிக்கப்பட்டார்களென்றும் அழைக்கப்பட்

டார்களென்றும் தெளிவாய் விளக்கிக் காட்டுவோமாக. வாலிபர் மனதைக் கிரகிக்கும்படியான வழி இதுவே. உலகத்தில் ஏதாவது கிரியை நடப்பிக்கிறவர்களைப்பற்றிக் கேட்க விரும்புகிறார்கள். தேவனுக்கென்று ஊழியஞ்செய்வதென்பதைக் கவனிக்கும்படி செய்வோமானால், அவர்களைத் தனித்தனி தீர்மானம்செய்யும்படியாக ஏவலாம்.

இந்தப் பாடத்தில் பிள்ளைகள் கிறிஸ்துவுக்காகத் தீர்மானஞ்செய்யும்படி ஏவுவதற்கு நல்ல சமயமுண்டு. அது ஊழியத்தின் மூலமாய்த்தான். கிறிஸ்து தம்முடைய பெரிய வேலைக்காக ஆண்களையும் பெண்களையும் அழைக்கிறார். யாராவது ஒருவன் அல்லது ஒருத்தி கிறிஸ்துவின் பக்கத்தில் திட்டமாய் வந்தவுடனே, அவனுக்கு அல்லது அவளுக்கு இந்த வேலையில் பங்கு கொடுக்கப்படுகிறது. நல்ல தைரியத்தோடே வேலைசெய்தால் நல்ல பலன் கிடைக்கும். யார் அதை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளுவார்? கிறிஸ்துவுக்காகத் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு மற்றவர்களை இரட்சிக்கும்படி உதவிசெய்ய மேலான சக்தி கொடுக்கப்படுகிறது. இதை ஒரு ஊசிக்காந்தத்தினால் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டலாம். ஊசி, ஆணி இன்னும் சிற்சில இரும்புத்துண்டுகளை இழுக்கும்படியான ஆச்சரியமான சக்தி ஊசிக்காந்தத்துக்கு உண்டு. ஒரு ஆணி ஊசிக்காந்தத்தோடு சமீபமாய்த் தொட்டுக்கொண்டிருக்கும்போது, அதுவும் காந்த சக்தியடைந்து மற்ற ஆணிகளையும் இழுக்கக்கூடும்.

அனுதின அப்பியாசம்.

கிறிஸ்துவானவர் சாதாரண வேலையாட்களை உலக முழுவதும் பரவின தலைவர்களாகத் தெரிந்துகொண்டாரென்ற விஷயம் பிள்ளைகளுக்குப் பிரியத்தைக் கொடுக்கும். அதோடே அவர்கள் இயேசுவானவர் அழைத்தவுடனே மறுவார்த்தையில்லாமல் இணங்கி வருவது இன்னும் அதிகமாக கவனத்தை இழுக்கக்கூடியது.

காலம்.—சோதனைக்கு ஒரு வருஷத்திற்குப் பிறகு.

இடம்.—கப்பர்நகூமுக்குச் சமீபமாய் கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையோரமாய்.

சரித்திரம்

14, 15-ம் வாக்கியங்களில் கிறிஸ்துவின் வேலை என்னவென்று பார்த்தோம். ஆண்களையும் பெண்களையும் பாவத்தினின்று தேவனண்டைக்கு அழைப்பதுதான். பரலோக

ராஜ்யம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், நம்மை அடிமைகளாக்குகிற தீமைகளை எதிர்க்கவேண்டும் என்றும் சொல்லுகிறது. ஒரு வருஷமாக இதை அவரே தனிமையாக மற்றவர்களுடைய துணையின்றி செய்துவந்தார். ஆனால் அவரோ இந்தப் பெரிய சிலுவைப் போரைத் தொடங்கினார். அவருக்கு உதவியாட்கள் வேண்டும், இன்னும் அநேகர் வேண்டும், இப்போது வேலைக்காக ஆட்களைத் தெரிந்தெடுக்க ஆரம்பிக்கிறார்.

1. நால்வர் அழைக்கப்படுதல்

ஏரியின் ஜலம் வெகு தூரம் வியாபித்திருக்கிறது; அங்கே அநேக படவுகள், சில ஏரியின்மேலும் சில கரையோரமாய் நங்கூரம் போடப்பட்டும் இருக்கின்றன. ஆனால் அநேகம் கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கப்பர்நகூமாகிய பெரிய பட்டணம் அதின் அழகிய அரண்மனைகளோடும் தெருக்களோடும் தண்ணீர் ஓரம் வரைக்கும் கட்டப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் பட்டணத்திற்கு வெளியே கரையோரமாய்த் தனிமையாக உலாவிக்கொண்டிருக்கிறார். ஆழமில்லாத தண்ணீரில் நின்றுகொண்டு கைவலைகளைத் தண்ணீரில் எறிந்துகொண்டிருக்கும் பேதுருவும் அந்திரேயாவும் இருக்கிற இடத்திற்கு வருகிறார். சிறு வஸ்திரம் தரித்து, சாட்டாள்களான வெயிலில் அடிபட்ட செம்படவர்களைத் தங்களுடைய வேலையைவிட்டுத் தன்னைப் பின்பற்றும்படியாக கிறிஸ்து அழைக்கிறார் (வாக். 17). உடனே (இந்த வார்த்தையை வற்புறுத்திக் காட்டு) அவர்கள் தங்கள் வலைகளைவிட்டு, தங்கள் மேற்சட்டையைப் போட்டுக்கொண்டு, சந்தோஷத்தோடே அவரைப் பின்செல்லுகிறார்கள். இன்னும் கொஞ்சதூரம் போய்ச் சில கூட்டத்தார் வெகு சுறுசுறுப்பாய் அவர்களுடைய படகின் பக்கமாய் உள்ள பாதைமேல் தங்களுடைய வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள்; வயோதிபனான செபதேயு தன்னுடைய இரண்டு குமாரராகிய யாக்கோபு யோவான் என்பவர்களோடும் சில கூலியாட்களோடும் வேலையாயிருந்தான். இயேசு மெதுவாக 'வாருங்கள், உங்கள் வலைகளை விட்டு என்னைப் பின்பற்றுங்கள்' என்கிறார். உடனே யாக்கோபும் யோவானும் வெகு சந்தோஷத்தோடே இயேசுவின் அழைப்புக்குக் கீழ்ப்படிகிறார்கள். இதை கவனிக்கச் செய்.

2. புதுக் கூட்டத்தார்

கிறிஸ்துவின் போர்ச்சேனையில் முதல் நால்வர் வேலை செய்யும் படியாக அழைக்கப்படுகிறார்கள். அவர்களெல்லாரும் ஏகமாய்ச் சந்தோஷமாய் நடந்துபோகிறார்கள். எதைப்பற்றிப் பேசிக்கொண்டு போகிறார்கள். மீன்பிடிக்கிறதைப்பற்றியா? அவர்கள் பிறப்பிலேயே செம்படவர். அவர்களுக்கு அந்த வித்தையும் அதைப்பற்றிய சட்டங்களும் நன்றாய்த் தெரியும். இப்பொழுதோ அவர்கள் மீன்களையல்ல மனுஷரை எப்படிப் பிடிக்கவேண்டும் என்று காண்பிக்கிறார். அவர்கள் இன்னும் மனுஷரைப் பிடிக்கிறவர்களாய்த்தானிருக்கிறார்கள். இது ஒரு பெரிய வேலை. இதற்கும் அவர்கள் கலிலேயாக் கடலோரமாய்க் கற்றுக்கொண்ட தைரியம், கவலை, பொறுமை முதலியவை தேவை.

அவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்றால் பேதுரு பதஷ்டகுணமுள்ளவன், உற்சாகமுள்ளவன். பிற்பாடு அவன் சகோதரனாகிய அந்திரேயா நல்ல மனமும் அமரிக்கையும் நற்குணசாலியும் இணங்கு நெஞ்சனுமாயிருக்கிறான். படகை நடத்துகிறவன் யாக்கோபு. அவனும் அந்திரேயாவைப்போலவே நல்ல தளராத வேலைக்காரன். யாக்கோபின் சகோதரனாகிய யோவான், கூட்டத்தில் சிறியவன், வெகு உக்கிரகுணமும் தைரியமுமுள்ளவன், ஆனாலும் இயேசுவின்பேரில் மிகவும் அன்புள்ளவன்.

சில லக்ஷணங்கள் மிகவும் அவசியமானவை. ஒரு பெரிய வேலையை நடத்தும்படியாகவாவது, ஒரு பெரிய யுத்தம் செய்யும்படியாகவாவது, ஒரு பெரிய விளையாட்டில் ஜெயிக்கும்படியாகவாவது எவரையும் தெரிந்துகொள்ளமுடியாது. நாம் கவலையோடு தெரிந்துகொள்ள வேண்டும். அந்தக்காலத்தில் இயேசுவானவர் அப்படித்தான் செய்தார், இப்போதும் அப்படித்தான் செய்கிறார். அந்த லக்ஷணங்கள் எவை? கல்வியல்ல, ஏனென்றால் எருசலேமில் அநேக கல்விமான்கள் இருந்தார்கள். இயேசு விரும்பினால் அவர்களும் வருவார்கள். ஆனால் கல்வி முக்கியமானதல்ல. கடின வேலை செய்கிற சாதாரண மனிதர்தான் அவருக்கு வேண்டும் (லூக். 5. 2, 5. மாற். 1. 19). கட்டாயமான வேலையல்ல, தாராளமான மனப்பூர்வமான வேலை செய்கிற

வர்கள் (1 நாளா. 29. 5), சாமர்த்தியமுள்ளவர்கள். தங்கள் வேலையில் சித்தியுள்ளவர்கள். உண்மையான மனமுள்ளவர்கள். அவர்கள் முன்னதாகவே கிறிஸ்துவை நேசித்திருந்தார்கள் (யோவா. 1. 40). இந்த லக்ஷணங்களில் இரண்டு காரியங்களைக் கவனிக்கலாம் அதாவது கிறிஸ்து தெரிந்துகொள்ளுகிறவர்கள் நல்ல மாதிரியான மனிதர் என்று பிள்ளைகள் எண்ணிக்கொள்ளும்படி செய்கிறது; இரண்டாவது இம்மனிதருடைய லக்ஷணங்கள் யாவரும் அடையக்கூடியதாயிருக்கிறது. முதல் சீஷரைப்போலொத்த மனிதரின் லக்ஷணங்களைச் சொல்லும்படி செய்யலாம்.

இந்தப பாடத்தை மீன்பிடிக்கும் பாடமாகவே முதலில் தொடங்கலாம். பையன்களும் பெண்களும் மீன்பிடிப்பதில் பிரியமுள்ளவர்கள் மீன்பிடிப்பதைப்பற்றிய சட்டதிட்டங்கள் ஏதாவது தெரியுமா என்று கேள். நியாயம் சொல்லாமல் அவைகளை ஏற்றுக்கொண்டு, இயேசுவானவர் மனிதரை முதல்தரத்து மீன்பிடிக்கிறவர்களாகும்படியாகப் பழக்கினார் என்று சொல்லு. இந்த முகவுரையின்பேரில் இரண்டு அல்லது மூன்று நிமிஷம்மாத்திரம் செலவழிக்கவேண்டும். பிற்பாடு ஒழுங்குபடுத்தப்பட்ட முந்தின பாடத்தோடே இணைத்து, மேலே காண்பிக்கப்பட்டபிரகாரம் சரித்திரப்போக்காய்ப் பாடத்தை நடத்தவேண்டும்.

முகவுரை

அத்தியாயம் XIV

ஜீவிய சரித்திரம்—தானியேலும் அவனுடைய சிநேகிதரும்

பாடம்—தானி. 1.

தங்கவாக்கியம்—'(பர்னபா) போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.' அப். 11. 23.

இந்த ஜீவிய சரித்திரத்தில் ஒரு பெரிதும் பிரயோஜனமுமான ஜீவியத்தின் அஸ்திபாரத்தை வாலிப மாணுக்கருக்குக் காண்பிக்கும்படியாக ஒரு நல்ல விஷயம் இருக்கிறது. தானியேலின் முழு சரித்

திரத்திலும் நன்றாய்த் தெரிந்துகொள்ளப்படுமானால், அநேக பாடங்களுண்டு. அப்பேர்ப்பட்ட பாடவரிசையில் இது முதலாம் பாடம். வேதாகமத்தில் அதாவது உலக சரித்திரத்தில் காணப்படக்கூடிய நேர்த்தியான வீரச்செயல்களும் உத்தம ஜீவியமும் தானியேலின் புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது. நாம் ஒரு முக்கியமான நோக்கத்தோடு இந்த ஜீவிய சரித்திரத்தை நடத்துகிறபடியால், வழக்கம்போல இதில் ஆவிக்குரிய பாடம் என்ன என்கிற முதல் கேள்வியைக் கேட்போமாக.

ஜீவியத்தின் ரகசியம் இருதயத்திலிருக்கிறது. நீதி. 4. 23-ஐ வாசித்து மத். 15. 19, 20-ல் நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளை அதோடு ஒப்பிட்டுப்பார். இந்த ஆவிக்குரிய சத்தியத்தை அநேகர் தீர விசாரித்துக் கற்றுக்கொள்ளுகிறதில்லை, நாமோ அதை வெகு கவனமாய்ப் படிப்போமாக. மாணக்கருடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமானால், பிறகு தீர்மானம் செய்வதற்கு ஏற்ற கருவியாயிருக்கும். தானியேலின் பாடமானது இந்த ஆவிக்குரிய சத்தியத்தைத் தெளிவும் ஊர்ஜிதப்படுத்துவதுமாக்குகிறதற்கு ஏற்ற சமயத்தை உண்டாக்குகிறது. அநேகமான விஸ்தரிப்புகளினால் இந்தச் சத்தியத்தை மறைத்துப்போடாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

நாம் பாபிலோனில் இருந்தாலும், லண்டன் பட்டணத்திலிருந்தாலும், சென்னபட்டணத்திலிருந்தாலும், காட்டேர்களிலிருந்தாலும் எல்லாம் ஒன்றுதான். ஒரு மனுஷனுடைய யோக்கியதையை அவனுடைய பிறப்பினாலும் படிப்பினாலும் அவனுக்குள்ள ஆஸ்தியினாலும் அளவிடலாம் என்பது எத்திசையிலுமுள்ளவர்களுடைய எண்ணம்; ஆனால் அது அப்படியல்ல. ஒரு ஐசுவரியவானுடைய ஜீவியம் பிரயோஜனமற்றதாயிருக்கும்; மேல்குலத்தில் பிறந்தவன் உபயோகமற்றவனாயிருப்பான்; கல்வியில் தேறினவன் ஒன்றுக்கும் உதவாதவனாயிருப்பான்; இருதயந்தான் மனுஷனுடைய திறமையைக் காட்டுகிறது. நம்முடைய இருதயங்கள் எல்லாம் மனிதருக்கு முன்பாக திறந்துவைக்கப்பட்டிருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அப்போது அங்கே என்ன காணப்படும்? நித்திய நன்மையையும், பெருந்தன்மையையும் உண்டாக்குகிற விதைகள் அங்கே காணப்படுமா அல்

அனுதின அப்பியாசம்

லது பயங்கரமான அழிவையும் கேட்டையும் விளைவிக்கும் விதைகள் காணப்படுமோ? கர்த்தரோடு சேர்ந்து, நன்மையும், சுத்தமும், உண்மையுமானவைகளுக்காக நிற்போம் என்று தங்கள் இருதயத்தில் நிர்ணயம் பண்ணிக்கொண்டவர்களோடே நாமும் எண்ணப்படுவோமாக.

மாணக்கர் இந்தச் சமயத்தில் கிறிஸ்துவுக்காகத் தீர்மானஞ் செய்யக் கேட்பது அவசியமென்று உபாத்தியாயர் எண்ணினால், இந்தச் சமயத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாம்; ஆனாலும் அடிக்கடி பிள்ளைகளிடம் இதைப்பற்றிப் பேசினால், அதின் வல்லமை குறைந்து போகும் என்பதைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

இங்கே நேபுகாத்நேச்சாரால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பல பரீட்சைகளிலும், தானியேலும் அவனுடைய சிநேகிதரும் அவைகளில் விசேஷித்த விதமாய்த் தேறின மாதிரியிலும், வாலிபப் பிள்ளைகளின் முக்கிய விருப்பம் இருக்கும்.

முக்கிய மனக்கவர்ச்சி

காலம்.—கிறிஸ்துவுக்கு அறுநூறு வருஷங்களுக்குமுன் எருசலேமும் சமாரியாவும் சிறையிருப்பிலிருந்தது. பாபிலோன் ராஜ்யம் தன்னுடைய மகிமையின் கடைசிக்காலங்களிலிருந்தது.

சரித்திரம்

இடம்.—அப்பொழுது உலகராஜ்யங்களில் மகா வல்லமையுள்ள ராஜ்யத்தின் ராஜதானியாகிய பாபிலோன்.

இந்தப் பாடத்தில் இரண்டு நோக்கங்களுண்டு. அதாவது, மாணக்கருடைய இருதயத்தில் இந்த வீரனைப்பற்றிய ஆச்சரியத்தைப் பதியச்செய்வதும், இருதயத்திலிருந்துதான் ஜீவவிதை உண்டாகிறதென்ற எண்ணத்தைப் பலப்படுத்துவதுமே. தானியேலைப்பற்றி வியப்படைகிறார்களா என்று கேட்கவேண்டாம்; ஆனால் இயல்பாகவே அவனை மதிக்கும்படியாகப் பிரத்தியட்சமாய் எடுத்துக்காட்டிப் பிரயாசப்படு.

1. தானியேலின் பூர்வோத்திரம்

(a) யூதன். கைதி. ஜெயம்பெற்ற தேசத்தில் சிறையாக்கப்பட்டவன். சிறுபையனாயிருந்தபோதே வீட்டைவிட்டும் ஜனத்தைவிட்டும் பிரிக்கப்பட்டவன்.

(b) பெருந்தன்மையுடையவன். ராஜகுலத்தை, மெய்யாகவே மேல்குலத்தைச் சேர்ந்தவன்.

(c) நன்குமதிக்கப்பட்டவன், கெட்டிக்காரன், திறமையுள்ளோன். நல்ல முகப்பார்வையும், தேகவளர்ச்சியும், கூர்ந்த புத்தியும், கல்வியில் ஆசையுமுடையவன் என்பதற்குச் சந்தேகமில்லை (தானி. 1. 4) என்பதை வற்புறுத்திக் காட்டு. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஜெயிக்கப்பட்ட ஆட்களைப் பொறுக்கி எடுக்கப் பிரியப்பட்டான். யூதர்கள்தான் விசேஷித்த வரம்பெற்றவர்கள் என்று அவன் அறிந்திருக்கலாம். தன்னுடைய சொந்த ஜனங்களின் சீர்கேட்டை அறிந்திருந்தான். இதர ஜாதியிலிருந்து தனக்குப் பின்னடியாரைத் தேடிக்கொண்டான். இந்த விஷயம் ராஜா ஞானவான் என்று காட்டுகிறது.

அந்த நாலு வாலிபரையும் கவனியுங்கள். அவர்களுக்குப் பதினாலு அல்லது பதினைந்து வயது இருக்கும். பலசாலிகள், முகலட்சணமும் நல்ல உடைதரித்து ஊக்கமுமுடையவர்கள். மற்ற மூன்றுபேரும் தானியேலைப்போலவே உயர்குலத்தைச் சேர்ந்திருக்கலாம். அவர்களெல்லாரும் நெருங்கின சிநேகிதர்.

2. தானியேலின் நோக்கம்

தானியேலும் அவனுடைய மூன்று சிநேகிதரும், இன்னும் அநேக சிறைபிடிக்கப்பட்ட வாலிபரும் மேல்ஷார் (தானி. 1. 11) கையின்கீழ் அரண்மனை வேலை ஜீவியத்திற்காக (வாக். 5) மூன்று வருஷமாக விசேஷித்த பயிற்சிபெற்று வந்தார்கள். அவர்களுக்கு ராஜபோஜனமாகிய மச்சத்தாலும் திராட்சரசத்தாலும் போஷிக்கப்பட்டு உயர்குலத்து வாலிபரைப்போல சரீரப்பயிற்சியும் மனப்பயிற்சியும் கொடுக்கப்படவேண்டியிருந்தது. இப்பேர்ப்பட்ட வாலிபர் அந்தப் பெரிய செல்வம் நிறைந்த பொல்லாத பட்டணத்தில், ராஜ அரண்மனையில் வசித்து ராஜபோஜனம் புசித்து எப்படிப்பட்ட நடத்தையுள்ளவர்களாய் இருந்திருக்கக்கூடும் என்று நாம் கவனிக்கலாம்.

இதை நாம் முற்றிலுமாய் அறிந்துகொள்ளும்படியாகக் கவனிக்க வேண்டியதாவது—(a) பாபிலோனைப்போலொத்த பட்டணத்தில் வாலிபக் குலமகனுக்கு உண்டாகும் சோதனைகளாவன: பலவித

மான இச்சைகள், சோம்பல், சிற்றின்பம் ஆகிய ஆசாபாசங்கள் எப்பக்கமும் சுற்றிநின்றது. யூதேயாவின் அமரிக்கையான வீட்டிற்கும் இதற்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம். அநேக பையன்கள் இப்பேர்ப்பட்ட சோதனைகளில் விழுந்திருக்கிறார்கள். (b) ராஜாவின் போஜனத்தைப் புசித்து திராட்சரசத்தைக் குடிப்பதென்றால், வெளிப்படையாக பாபிலோனிய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டோம் என்றும் கர்த்தருக்காக நிற்பதை விட்டுவிட்டோம் என்றும் அர்த்தம். ஏனென்றால், இந்த போஜனமும் திராட்சரசமும் விக்கிரக ஆராதனையோடு சம்பந்தப்பட்டது. (c) இந்த போஜனாதிகள் இச்சிக்கப்படக் கூடியதாயிருந்தபோதிலும் சரீரத்தையும் மனதையும் பலவீனப்படுத்தக்கூடியது. லாகிரிவஸ்துக்களாலுண்டாகும் தீமையைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்லு.

தானியேல் மூன்று சிநேகிதருக்கு முகாமையாக அவர்களோடே சேர்ந்து ராஜாவின் போஜனத்தையும் பானத்தையும் தொடமாட்டேன் என்கிறான் (வாக். 8–14). அவனுடைய கூட்டாளிகளில் உத்தமமானவர்களுக்குள், தானியேலுடைய தைரியமும் குண அழகும் அவனுக்குக் கீர்த்தியை உண்டாக்கிற்று. தன்னுடைய கல்வியிலும் தேர்ச்சியிலும் எல்லாரைப்பார்க்கிலும் முதன்மையானவனாயிருந்தான் (வாக். 15–17). அவனுடைய குணத்தினால் காரியசித்தியுண்டாயிற்று. எங்கெங்கே தானியேலுடைய குணத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறதோ அங்கே அவனுடைய காரியசித்தியும் அதிகமாய் அல்லது கொஞ்சமாய்ச் சொல்லப்படுகிறதென்பதை வற்புறுத்திக்காட்டு. தானியேலின் இருதயத்தில் தெய்வ விசுவாசம் என்ற பலமான மாறாத பிரமாணம் இருந்தது. அந்த அஞ்ஞான ராஜசபையில், தீமைக்கேதுவான அநேக எண்ணிறந்த ஏதுக்களுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில், தானியேல் உறுதியாய் நிற்கிறான். அவனுடைய திடசித்தம் மற்றவர்களையும் அப்படியே செய்ய ஏவுகிறது.

3. தானியேலின் பரீட்சை

பயிற்சியின் காலம் போய்விட்டது. மகா பயங்கரமான ஜெயவீரனாகிய நேபுகாத்நேச்சார், டம்பமான உடைதரித்து இருபக்கமும் கல்லால் செய்யப்பட்ட பெரிய சிங்கங்கள் உள்ள விலையேறப்பெற்ற

சிம்மாசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறான்; அவனைச் சுற்றிலும் ராஜாங்கத்துக்குரிய பிரபுக்களும் உத்தியோகஸ்தரும் இருக்கிறார்கள்.

முந்தின பருவத்துப் பிள்ளைகளுக்கு விவரித்ததுபோல இந்த விஷயத்தைப்பற்றி இவர்களுக்கு விவரிக்கவேண்டிய அவசியமில்லை. நேபுகாத்நேச்சாருடைய மகத்துவமும், இந்த வாலிபருடைய அழகிய பயமற்ற நடத்தையுமே இங்கே கவனிக்கவேண்டியது. நேபுகாத்நேச்சார் அரண்மனையில் இருந்த வண்ணமாக படம் அகப்பட்டால் காட்டலாம்.

சிறைபிடிக்கப்பட்ட வாலிபர் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாகக் கொண்டுவரப்படுகிறார்கள். அவர்களுடைய சரீரபலம், தேகவளர்ச்சி, புத்திதேர்ச்சி இவைகளைப் பரீட்சிக்கிறான். இளைஞர் அதிகமாய் ஏவி எழுப்பப்படுகிறார்கள்; ஏனென்றால், இதுதான் அவர்களுடைய பிற்காலத்தைத் தீர்மானிக்கும் சமயம். தானியேல் வெகு லேசாய் முதலிலும் மற்ற மூன்று சிநேகிதர் அவனுக்கு அடுத்தாற்போலும் இருக்கிறார்கள். வேறொருவரும் அவர்களுக்குச் சமீபத்தில் வரக்கூடியவில்லை. ராஜா தன் சமீபத்திலேயே அவர்களை உயர்ந்த அந்தஸ்தில் ஏற்படுத்திக்கொண்டார். தானியேல் அந்தஸ்துக்குமுன்னதாக மார்க்கத்தை வைத்தான். தேவனே அந்தஸ்தையும் கூடக் கொடுத்தார். அந்த நாளிலிருந்து சித்திபெற்ற நீண்ட ஜீவிய ஓட்டத்தைத் தொடங்கினான். இது எழுபது வருஷங்களாக நாலு அரசருக்குக் கீழே நடந்தது. இவன் அதிர்ஷ்டசாலி மாத்திரமல்ல, மெய்யாகவே பெரிய மனுஷனுமிருந்தான்.

இன்றைக்கு நம்முடைய பாடம் உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியது. ஒரு சிறைப்பட்ட பையன் பூலோகத்தின் பெரிய ராஜ்யத்தில் மேலான அந்தஸ்துக்கு எப்படி வந்தான் என்று இது சொல்லுகிறது.

முகவுரை

மாணாக்கர் படத்தில் பாபிலோனைக் கண்டுபிடிக்கட்டும். அந்த ராஜ்யத்தைப் பற்றி அவர்கள் அறிந்தவைகளைச் சொல்லட்டும்.

அத்தியாயம் XV

ஜீவிய சரித்திரம்—எஸ்தர்

பாடம்—எஸ்தரின் புஸ்தகம்

தங்கவாக்கியம்.—'தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.' மத். 10. 39.

மற்றப் பாடங்களிலுள்ள முக்கிய பொருள்கள் பையன்களுக்கும் பெண்களுக்கும் உரியதாயிருந்தபோதிலும், இந்த ஜீவிய சரித்திரப் பாடம் முக்கியமாய்ப் பெண்களின் உபாத்திமாருக்குரியது. இந்த ஜீவிய சரித்திரம் ஒரு விசேஷித்த நோக்கத்தோடு சொல்லப்படுகிறதென்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். எஸ்தரிடத்தில் நாம் கற்றுக்கொள்வது மற்றவர்களுக்காக நம்மை பலியாக ஒப்புக்கொடுப்பதே கிறிஸ்தவர்களுடைய கடமை என்பதுதான்.

இந்த நற்குணமானது வெளிக்குத் தெரியாமலிருந்தபோதிலும், வாலிப மாணாக்கனின் ஜீவியத் தேர்ச்சியில் காணப்படுகிறது.

ஆவிக்குரிய பாடம் இந்த குணத்திற்கு இணங்குவது இயல்பாகவே குறைவு ஆகையால் அது பலப்படுத்தப்பட்டு, படிப்பிக்கப்பட்டு, வழிகாட்டப்படவேண்டும். அவர்கள் கிறிஸ்துவைப்பற்றித் தீர்மானம் செய்கிற விதத்தைக் காட்டுகிற வாலிப மாணாக்கரைப்பற்றிய விஷயங்களில் இது ஒன்று. இந்த சரித்திரத்தில் எஸ்தருடைய பலியின் பக்திக்குரிய குணமும் தேவபக்தியும் ஒருவகையாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை விவரி. பிள்ளைகளுக்கு அந்த அம்மாளைப்பற்றிய ஆச்சரியத்தை உண்டாக்கி, சுய வெறுப்பாகிய நற்குணத்தை மகிமைப்படுத்து.

எஸ்தர் என்பதற்கு நட்சத்திரம் என்று அர்த்தம். அவள் நம்மை வழிநடத்தும் ஓர் நட்சத்திரம். நாமறிந்தவரையில் அவளுக்கு ஒரே ஒரு லட்சண வரம் இருந்தது, அதாவது அழகுதான். அதை அநேகர் தங்களுக்காக மாத்திரம் உபயோகித்து அதினால் பெருமைகொண்டு, வீணராய், சுயநயப் பிரியராய்ப் போகிறார்கள். ஆனால் எஸ்தரோ

தன்னை தேவனுடைய வேலைக்காக முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தாள், அவள் தேவனுக்காகவும் தன்னுடைய ஜனங்களுக்காகவும் ஒப்புக்கொடுத்து, அப்படிச் செய்வதினாலுண்டாகும் மிகுந்த சந்தோஷத்தைக் கண்டடைந்தாள். அப்படியே உன்னுடைய பிள்ளைகளுக்கு ஒப்புக்கொடுக்கும் ஜீவியத்தைப்பற்றிய சில விதத்தைச் சொல்லு. முதல்தரமான தேசாபிமானத்தைக் காட்டும்படியாக அவர்கள் என்ன செய்யக்கூடும்? தங்களுடைய கூட்டாளிகளை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரும்படி உதவிசெய்து, பொல்லாங்கினின்று இரட்சித்து என்றைக்கும் நிலைத்து பலன் கொடுக்கக்கூடிய தன் ஜனத்தாருக்குச் செய்யும் ஊழியம் என்று அவர்கள் அறியும்படி செய்.

முக்கிய மனக்கவர்ச்சி

மனதைக் கவரக்கூடிய இந்தச் சரிதையில் பெண்களின் விருப்பத்தை எழுப்பிவிடுகிற சில குறிப்புகளில் ஒரு சாதாரணப் பெண் ராணியின் நிலைமைக்கு உயர்த்தப்பட்டாள் என்பது கவனிக்கப்படத்தக்கது

கலை ந

காலம்.—சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த பிறகும் தானியேலின் காலத்திற்குப் பிறகும். சில யூதர்கள பலஸ்தீனாவுக்குத் திரும்பிப் போய்விட்டார்கள், ஆனால் அநேகர் இன்னும் இந்த ராஜ்யத்திலேயே சிதறியிருந்தார்கள்.

இடம்.—சூசான் நகரம், இது பாரஸீக ராஜாக்களின் ராஜதானி; ஐப்பிராத்து நதியின் முகத்துவாரத்திலிருக்கிறது.

வேதாகமத்தில் உள்ள கதைகளில் எஸ்தரின் சரித்திரம் மிகவும் நாடகப் போக்கானது. ஆனால் அவளுடைய தைரியமான கிரியைகளின்மேல் பிள்ளைகளின் கவனத்தைச் செலுத்தும்படியாக உபாத்தியாயர் பார்த்துக்கொள்ளவேண்டும். எஸ்தர் ராணியாகத் தெரிந்துகொள்ளப்பட்ட விவரத்தை சுருக்கிச் சொல்லி (அதி. 1, 2) அவளுடைய பூர்வோத்தரத்தையும் அகாஸ்வேருவினுடைய கொடுங்கோல் அரசாட்சியையும் சொல்லு. இதற்கு ஐந்து நிமிஷத்திற்குமேல் செலவிடக்கூடாது. அந்த நேரத்துக்குள் முடிக்கும்படியாகக் கவனமாய் ஆயத்தம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

1. ஆமானுடைய சதியோசனையும் மொர்தெகாயின் செய்தியும்

இந்த சதியோசனையைப்பற்றிச் சொல்லும்படியாகக் கவலையோடே ஆயத்தம்செய். (a) ஆகாகியனாகிய ஆமான் அமலேக்கிய

ரைச் சேர்ந்தவன், அவர்கள் முன்காலத்திலிருந்தே யூதர்களுடைய சத்துருக்களாயிருந்தார்கள். (b) மொர்தெகாயின் தைரியத்தினாலே தான் இந்தப் பயங்கரமான பழிவாங்குதல் செய்யும்படியாக ஏவப் பட்டான். (c) வஞ்சகத்தினாலும், அழிக்கப்படும் ஜாதியின் பேரை (அதி. 3) ராஜாவுக்கு மறைத்ததாலும், இந்தக் கட்டளையைத் தயார் செய்தான்.

கட்டளையிலுள்ள சங்கதி ராஜ்யத்தின் பல பாகங்களில் தெரிந்த வுடனே சகல யூதரும் துக்கத்தால் பிடிக்கப்படுகிறார்கள். சூசானில் மொர்தெகாய் அநேக ஜனங்களோடு சேர்ந்து, தன்னுடைய ஜனத் தாரைப்பற்றிய துக்கத்தினால் நிறைந்து, துக்கத்தால் புலம்பிக் கொண்டு, இரட்டுடுத்தி ராஜாவின் அரண்மனைக்கு முன்பாக உட் கார்ந்துகொண்டிருக்கிறான். எஸ்தர் அரண்மனைக்குள்ளிருந்து இதைக் கேட்டு, காரணத்தை அறியும்படியாக ஆளனுப்பி விசாரிக்கிறாள். மொர்தெகாயின் உத்தரவையும் அவன் அவளிடத்தில் கேட்கிறதையும் கவனி (அதி. 4. 6-8). எஸ்தர் தானாக ராஜாவைக் கட்டாயம்செய்யும் விஷயத்தைப்பற்றிப் பயந்து நடுங்குகிறாள்; மொர்தெகாய்க்குத் தன் னுடைய மறுமொழியை அனுப்புகிறாள் (வாக். 11). அவளுக்கு இருக் கும் கஷ்டம் எவ்வளவு! அவமானத்திற்கும் மரணத்திற்கும் தன்னை ஆளாக்கிக்கொள்ளப் பயப்படுகிறாள். இப்பொழுது மொர்தெகாயினிட மிருந்து இரண்டாவது செய்தி வருகிறது. இதைப் படி (வாக். 13, 14). கடைசி வார்த்தையை வற்புறுத்திச் சொல்லு. 'நீ இப் படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்.'

2. எஸ்தருடைய தீர்மானமும் வீரச்செய்கையும்

எஸ்தருடைய மனம் வசப்படுத்தப்பட்டது (வாக் 15–17). ஜெபத் தோடே மூன்றுநாள் உபவாசித்தபிறகு, ராஜ சமுகத்தில் துணிந்து பிரவேசித்து தன்னுடைய ஜனத்தாரின் நன்மைக்காக ராஜாவின் இரக்கத்துக்கு மன்றாடுகிறாள். இது அவளுக்கு எவ்வளவு கடின மாயிருந்ததென்றும், ஆகையால் அவளுடைய மன உறுதி மெய்யாகவே புகழப்படத்தக்கதென்றும் விவரித்துக் காண்பி.

இப்போது மூன்றாவது நாள். தன்னுடைய உடுப்புகளை மிகவும் கவலையோடே எடுக்கிறாள்; ஏனென்றால், அவள் எந்தவிதமாக ராஜா

வுக்குக் காணப்பட்டு எப்பேர்ப்பட்ட எண்ணத்தைப் பிறப்பிக்கிறாளோ அதிலிருந்துதான் அநேக விஷயம் ஆகக்கூடும்; கடைசியாக அவள் ஆயத்தமாகி, தலையில் நேர்த்தியான கிரீடம் தரித்து, தோழிப் பெண்கள் பின்தொடர, ராஜாவின் சபா மண்டபத்திற்கு நடுக்கத்தோடே போகிறாள். அகாஸ்வேரு ஆபரணங்களால் ஜொலிக்கிற ஆடை தரித்து, கையில் பொற்செங்கோல் பிடித்து சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். ராஜாத்தி உள்ளே வருகிறதைக் கண்டு கோர்ட்டு உத்தியோகஸ்தரெல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள். அந்தக் காட்சியை வர்ணி. ராஜாவுக்கும் தனக்கும் கொஞ்சதூரமிருக்கும் போதே நின்றுவிடுகிறாள். அப்பாலே போ என்றபோதிலும் திடசித்தத்தோடே மூக்காட்டை எடுத்துப்போட்டு, அமைதலாய் விண்ணப்பம் செய்கிறவளாகக் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறாள். பயங்கரமான அமைதல் உண்டாகிறது. ராஜாவினிடத்திலிருந்து வரும் ஒரு வார்த்தை அல்லது கை சைகை இந்தத் துணிகரமான பெண்ணை இழுத்துக்கொண்டுபோய்க் கொலைசெய்வதற்குப போதுமானது. அவள் மெய்யாகவே தன்னுடைய ஜனங்களுக்காகத் தன்னைத் தத்தம் செய்திருக்கிறாள் (அதி. 5. 2, 3). வாக்கியங்களை ஒரு பிள்ளை வாசிக்கட்டும். இதற்குள்ளாக அவளுடைய விருப்பம் நிறைவேறிற்றா? இல்லை. ஒரு புத்தியில்லாத வார்த்தை எல்லாக் காரியத்தையும் கெடுத்துப்போடக்கூடும். அவள் என்ன செய்கிறாள்? (வாக். 3-5.)

3. விருந்துசாலை

அரண்மனையின் சங்கதிகளை அறியும்படி (அதி. 1. 5-7) வாசி. ராஜாத்தியின் தனி அறைகளைப்பற்றியும் வர்ணி. பிற்பாடு அதி. 5. 6-8-ஐ வாசி. ராஜாவை வசப்படுத்த இன்னும் அநேக விஷயங்கள் அவசியமென்று உணருகிறாள். ஆமான் தன்னுடைய சந்தோஷத்தினால் அன்றிரவே மொர்தெகாய்க்காக ஐம்பதுமுழ உயரமான தூக்குமரத்தைச் செய்விக்கிறான்.

மறுபடியும் ராஜாவும் ஆமானும் முந்தின நாளைவிட அதிக மாட்சிமையான விருந்துக்காக எஸ்தருடைய அறைக்குப் போகிறார்கள். அதி. 7. 3-7 வரை சொல்லப்பட்டிருக்கும் நாடகப்போக்கான

விஷயத்தைச் சொல்லிக் கடைசியில் எஸ்தர் மனவெழுச்சியினால் பிரமைகொண்டு நின்று ஆமானைச் சுட்டிக்காட்டி 'அந்தப் பகைஞன் இந்தத் துஷ்ட ஆமான்தான்' என்றபோது ஆமான் மரணபயத்தினால் பதுங்குகிறதையும் சொல்லு.

எஸ்தருடைய வீரச்செய்கையால் விளைந்த சங்கதியை விவரி.

(a) ஆமான் தான் செய்த தூக்குமரத்தில் தானே தூக்கிப் போடப்பட்டான்.

(b) புதுக்கட்டளை எழுதப்பட்டது, யூதர்கள் தற்காக்கப்பட்டார்கள்.

(c) மொர்தெகாயும் எஸ்தரும் கனம்பண்ணப்பட்டார்கள்.

(d) யூதர்கள் சந்தோஷத்தினால் எஸ்தருக்குத் தங்களுடைய நன்றியறிதலைக் காட்டுகிறார்கள். இதை வற்புறுத்திச் சொல்லு. ஏனெனில் இந்த விஷயம் மனதைக் கவரக்கூடியது. ராஜாவும், மொர்தெகாயும், யூதர்களெல்லாரும் எஸ்தருக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

தன்னுடைய தைரியத்தினால் தன் ஜனத்தாரை இரட்சித்த பெண்களைப்பற்றி நாம் அடிக்கடி வாசிக்கிறதில்லை. ஆனால் இங்கே அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் சரித்திரத்தைப் பார்ப்போம். அசீரியர் ஜெயிக்கப்பட்டபோது

முகவுரை

பாரவீகர் மிகவும் பலத்தவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய ராஜாக்கள் மகா பெரியவர்களாயிருந்தார்கள். அவர்களில் ஆகாஸ் ஒருவன். அவன் அரசாண்ட காலத்தில்தான் இந்தச் சரித்திரம் நடந்தது.

அத்தியாயம் XVI

உவமை—தாலந்துகள்

பாடம்—மத். 25. 14–30.

தங்கவாக்கியம்.—'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.' மத். 25. 21.

இந்த உவமை முக்கியமாய் வாலிப மாணக்கருக்கு உரியவை; ஏனென்றால் அவர்களுடைய யூகித்தறியும் சக்தியையும், மனச்சாட்சியையும் எவி எழுப்பி வல்லமையாய்க் கிரியைசெய்யும் ஏதுக்கள் இதிலுண்டு.

ஊழியத்திற்குப் பூரண பலன் கிடைக்கிறது; தமக்குச் செவிகொடுக்கிறவர்களுக்கு இயேசுவானவர் அடிக்கடி உபயோகித்த நியாயம் இதுவே; இது முக்கியமாய் இன்னும் பூரணப்படாத மனதுக்குரியது. என்றபோதிலும்

ஆவிக்குரிய பாடம்

ஆவிக்குரிய ஜீவியத்தில் அதினுடைய வல்லமையை முழுவதும் இழந்துபோகிறதில்லை. ஜீவியத்திலும் ஊழியத்திலும் அவனுடைய செய்கைக்குத் தக்கதாகவே அவனுக்குப் பலன் அளிக்கப்படுகிறதென்று மாணக்கர் அறியும்படியாக நாம் கண்டால் நம்முடைய கடைசியான நோக்கத்துக்கு இது அனுகூலமாயிருக்கும்.

தாலந்துகளை தேவனுடைய வேலைக்கென்று அவருக்காகவே பிரதிஷ்டை செய்வோமானால் சரியானபடி உபயோகிக்கலாம். சில வேளைகளில் மறைந்திருந்தபோதிலும் அநேக தாலந்துகள் நமக்குண்டு. சிலருடைய தாலந்துகள் உபயோகப்படுகிறதில்லை; ஏனென்றால், அவர்கள் உவமையிலுள்ள ஒரு தாலந்து வாங்கின மனுஷனைப்போல மறைத்துவைக்கும்படி இடங்கொடுக்கிறார்கள். தேவன் மாத்திரம்தான் நம்மை விருத்திசெய்யக்கூடும். முற்றும் உதவாத ஜனங்களிடத்திலுங்கூட அருமையான தாலந்துகளை வெளிப்படச் செய்கிறார். ஒரு காலத்தில் மகா கேவலமான குடிகாரனும் தகரவேலை செய்கிறவனுமாயிருந்த ஜான் பனியனுடைய சரித்திரத்திலிருந்து இதை விவரி. தேவன் பனியனுடைய மறைந்து கிடந்த தாலந்தை விருத்திசெய்யும்படியாக அவன் இடங்கொடாவிட்டால், மகா அதிசயிக்கப்படத்தக்க புஸ்தகமாகிய 'பரதேசியின் மோட்ச பிரயாணத்தை' எழுதியிருக்கமாட்டார். இந்த ஓய்வுநாள் பள்ளிக்கூடத்து வகுப்பிலுள்ளவர்களுக்குள் என்ன தாலந்து மறைந்து கிடக்கிறதென்று யார் சொல்லக்கூடும்? அவர் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை உபயோகப்படுத்தக்கூடியவர்களாக்கும்படி நம்மைத் தேவனுக்கென்று முழுவதுமாய் ஒப்புக்கொடுப்போமாக.

இதிலுள்ள விருப்பம் மூன்று விதமானது.

1. *சரீர ராஜ்யத்தில்:* உள்ளான வளர்ச்சியைப்பற்றினதைவிட வெளியரங்கமான சுறுசுறுப்பைப்பற்றிச் சொல்லுகிற சரித்திரம், முக்கிய எண்ணம், ஊழியம்.

2. *மனோராஜ்யத்தில்:* சரியானபடி விவரித்தால், பிள்ளைகளின் மனதிற்கு அதிக விளையாட்டாயிருக்கும்.

3. *சன்மார்க்க ராஜ்யத்தில்:* மனச்சாட்சிக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கிறது. ஏனென்றால் பலாபலன்களும் தண்டனைகளும் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அது தன்னிஷ்டமாய்க் கிடைக்கிறதல்ல, நம்முடைய செய்கைக்குத் தகுந்தாற்போல் இயல்பாகவே கிடைக்கிறது என்றும் காட்டப்பட்டிருக்கிறது.

முக்கிய மனக்கவர்ச்சி

காலம்.—கிறிஸ்துவானவர் காட்டிக்கொடுக்கப்படுவதற்கு இரண்டு நாளைக்கு முன்னாக. ஆகையால் இது அவருடைய கடைசி சம்பாஷணைகளில் ஒன்று.

இடம்.—எருசலேமுக்கு எதிரேயுள்ள ஒலிவமலைச் சரிவிலிருந்து சொல்லப்பட்டது.

1. எஜமான்

ஐசுவரியமுள்ள ஒரு குடியானவன் சீக்கிரம் தூரதேசத்திற்குப் போகும்படியாக எண்ணங்கொண்டவனாய் காம்பீரமான உடைதரித்துத் தன்னுடைய உத்தியோகசாலையில் உட்கார்ந்திருப்பதைப் பார். அவனுடைய உக்கிராணக்காரர் ஒருவர் ஒருவராய் வருகிறார்கள். தான் போனபிற்பாடு அவர்கள் செய்யவேண்டிய வேலை என்னவென்று அவர்களுக்கு நன்றாய் விவரித்துக் காட்டப்படுகிறது. அவர்கள் வியாபாரஞ்செய்யும்படியாக (வேலை செய்யும்படி) அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் பணம் கொடுக்கப்படுகிறது; அதிகமான வல்லமையும் அனுபவமும் உள்ளவர்களுக்கு அதிக பணம் கொடுக்கப்படுகிறது. எல்லாம் முடிந்த பிற்பாடு, எஜமான் தன்னுடைய பரிவாரத்தோடே போய்விட்டான். இவர்களோ தங்கள் காரியத்தைத் தாங்களே பார்த்துக்கொள்ளும்படியாக விடப்பட்டார்கள்.

இந்தப் பாடம் சொல்லப்பட்ட காலத்தை மாணாக்கருக்கு நினைப்பூட்டு. கிறிஸ்து இவ்வுலகத்தைவிட்டுப் போகிறதற்குச் சில நாட்க

னுக்கு முந்தி. இது இந்த உவமைக்குச் சுவை கொடுக்கிறது. கிறிஸ்து தாமே தூரதேசத்துக்குப் போய்த் திரும்பிவரப்போகிற எஜமான். இந்த உவமைதான் அவருடைய உத்தியோகத்தின் ஒழுங்கு. பெற்றுக் கொள்ளுகிறவனுடைய திறமைக்குத் தகுந்தாற்போல தாலந்துகள் கொடுக்கப்பட்டதென்பதைத் தெளிவாய்ச் சொல்லு. தாலந்து ஒரு பெரிய பணத்தொகை, இக்காலத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் பவுனுக்குச் சரி. கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிற தாலந்துகள் என்ன என்று பிள்ளைகளைக் கேள். [சுகம், சொத்து, குடும்பக்கட்டு, பலம், முயற்சி, படிப்பு, பயிற்சி, அனுபவம் என்பதை வருவி.] (யாக். 1. 17.)

2. ஐந்து தாலந்து வாங்கினவன்

லூக். 16. 19-21-ஐ வாசி. அவனுக்கு எவ்வளவு லாபம் கிடைத்தது? அவனுக்கு எப்படிப் பிரதிபலன் அளிக்கப்பட்டது? தங்களுடைய வேதாகமத்தில் இதற்கு உத்தரவு கண்டுபிடிக்கும்படியாக உற்சாகப்படுத்து.

(1) அதிகப்படுத்தப்பட்ட சொத்து. அவன் பெரிய மனுஷனாயிருந்தான் என்று காட்டுகிறது. மனுஷர் கர்த்தருக்கென்று ஊழியஞ்செய்யும்போது பெரிய மனுஷர் ஆகிறார்கள் என்று காட்டு.

(2) எஜமான் மெச்சிக்கொள்ளுதல். 'நல்லது......' மத். 13. 43-ஐ வாசி. சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜனங்களுக்கும் முன்பாக இது ஒரு மகா பெரிய மெச்சிக்கொள்ளுதலாயிருக்கும்.

(3) வேலை செய்வதற்கு இன்னும் விசாலமான இடம். முன்னே ஊழியன் இப்பொழுது அதிகாரி. 'அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக்கினேன்' வெளி. 3. 21-ஐ வாசி. பிரதிபலன் உயர்ந்த நிலைமைதான். சர்க்கார் உத்தியோகத்திலும், இன்னும் மற்ற ஜீவிய வழியிலும் நல்ல ஊழியத்திற்கு உயர்ந்த பதவிக்குப் போவதாகிய பிரதிபலன் கொடுக்கப்படுகிறதென்பதிலிருந்து உதாரணப்படுத்திக் காட்டு. மனிதர் எப்போதும் உலக உயர்நிலைமையை விரும்புகிறார்கள். ஆனால் தேவன் கொடுக்கிற அந்த நிலைமை எவ்வளவு உயர்ந்தது!

(4) எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசித்தல். எபி. 12. 2–ஐ வாசி.

3. இரண்டு தாலந்து வாங்கினவன்

வாக். 17-ஐவாசி. இவனுக்குலாபங்கிடைத்ததெவ்வளவு? இரண்டு தாலந்து. அதாவது முதல் மனிதன் செய்ததுபோலவே தனக்குக் கிடைத்ததை இரட்டிப்பாக்கினான். மற்றவனுக்குக் கிடைத்தது போலவே இவனுக்கும் வெகுமதி கிடைத்தது (வாக். 22, 23). நாலு மடங்கான வெகுமதியைப் பிள்ளைகள் மறுபடியும் சொல்லும்படி செய். ஆகையால் எஜமான் மற்றவனைப்போலவே செய்ததாகத் தீர்மானித்தான். இது எப்படியாகும்? மற்றவர்களைவிடத் தங்களுக்குக் கொஞ்ச தாலந்து இருப்பதாகச் சிலர் வெகு விசனத்தோடே உணருகிறார்கள். தேவன் இந்த விஷயத்தில் ஏதாவது பட்சபாதம் காண்பித்திருக்கிறாரா? இல்லை. எப்படியென்றால், முதலிலேயே ஐந்து தாலந்து உடையவனாயிருப்பது அதிகமான உத்தரவாதத்திற்கு ஆளாவதுதான். ஐந்து தாலந்து வாங்கினவன் நாலு தாலந்து லாபம் சம்பாதித்தானால், இரண்டு தாலந்து வாங்கினவன் இரண்டு தாலந்து லாபம் சம்பாதித்தவனுக்குச் சமமாகமாட்டான்.

4. ஒரு தாலந்து வாங்கினவன்

வாக். 18-ஐ வாசி. இவன் தன்னுடைய எஜமானுக்கு விரோதமாய் முறுமுறுத்துக்கொண்டே போனான். இதற்குச் சரியான முகாந்தரமேயில்லை. ஏனென்றால் நாம் முன் பார்த்தபடி பெற்றுக்கொண்ட தாலந்துக்குத் தகுந்தாற்போல் பலாபலன் தீர்மானிக்கப்படுகிறது. சித்திபெறாத மனிதர் அடிக்கடி தேவனைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவன் தன்னுடைய தாலந்தைப் புதைத்துவைத்தான். நாம் எப்படி தாலந்தைப் புதைத்துவைக்கிறது? அதை அலட்சியஞ்செய்வதினால்தான்; நாம் சிலவேளைகளில் மரியாதையினால் இழுப்புண்டு நம்முடைய தாலந்துகளை அலட்சியஞ்செய்கிறோம். நாம் பெரிய காரியங்களைச் செய்ய விரும்புகிறோம், ஆனால் சிறிய காரியங்களைச் செய்ய நேரிடும்போது அவைகளை அருவருக்கிறோம். இரண்டாவது மனிதன் தன்னுடைய கொஞ்சத் தாலந்தை பிரயோஜனப்படுத்தி அதிகம் பெற்றான். இந்த மனுஷனும் அப்படியே செய்திருக்கலாமே.

வாக். 24, 25-ஐ வாசி. அவனுடைய வாயே அவனை ஆக்கினைக்குள் தீர்த்தது. அவனுக்குக் கிடைத்த தண்டனை என்ன? வாக். 26-30-ஐ வாசி.

1. தன்னுடைய பதவியையும் எஜமானுடைய நல்விருப்பத்தைதையும் இழந்துபோனான். இதுதான் அவனுக்கேற்ற பங்கா?

2. அவனுடைய மெய்யான குணம் யாவருக்கும் வெளிப்படுத்தப் பட்டது. இது பயங்கரமான காட்சி.

3. அவன் தன்னுடைய தாலந்தை இழந்துபோனான். நாமும் பிரயோஜனப்படுத்தாவிட்டால் இழந்துபோவோம்.

4. அவன் புறக்கணிக்கப்பட்டான். இது பயங்கரமான வார்த்தை.

ஒரு காரியத்தை அடைய முயற்சிக்கும்போது அதினால் என்ன நன்மையுண்டாகுமென்று கவனிக்கிறோம். இந்தப் பெரிய ஜீவிய ஓட்டத்திற்கு என்ன பலன் கிடைக்கப்போகிறதென்று அறிய விருப்புவது நம்முடைய சுபாவம். இந்த விஷயத்தில் தேவன் நம்மை அறிவீனராக விட்டுவிடவில்லை. அதைக்குறித்து தாலந்துகளின் உவமையில் நம்முடைய கர்த்தராகிய இயேசு சொல்லியிருக்கிறார்.

முகவுரை

அத்தியாயம் XVII

ஒரு சங்கீதம்—சங். 32.

பாடம்—2 சாமு. 11. 12. சங். 51.

தங்கவாக்கியம்.—சங். 32. 1, 2.

இதைப்போலொத்த சங்கீதத்தைப் படிப்பிக்கும்போது உபாத்தியாயருக்குப் பிரசங்கம் செய்யும்படியான சோதனை உண்டாகிறது. இப்படிச் செய்வதினால் மாணாக்கருக்கு உண்டாகும் விருப்பத்தைக் கெடுத்துப்போடுகிறோம் என்று நாம் பார்த்தோம். வாலிப மாணாக்கருக்குப் படிப்பிக்கும்போது அவர்களுடைய இயல்பான கவர்ச்சியை நினைவுகூர்ந்து ஜீவிய சரித்திரத்தை நாடக சம்பந்தமாய்ப் பிரயோஜன

முள்ள விஷயங்களோடு பாடத்தை ஆயத்தம் செய்யவேண்டும். ஆன படியால் இந்தச் சங்கீதமும் அந்தமாதிரியாகப் படிப்பிக்கப்படக் கூடுமா என்ற கேள்வியைக் கேள். தன்னுடைய நேரத்தைப் பாட ஆயத்தத்திற்காகச் செலவழிக்க விரும்புகிற உபாத்தியாயருக்கு இதற்கு உத்தரவு ஆயத்தமாயிருக்கிறது. பெருந்தன்மையுள்ள தாவீதின் ஜீவியத்தில் மகா முக்கியமான கல்வி கற்பிக்கும் விஷயங்களடங்கிய சங்கீதம் இதுதான். சங்கீதத்திலுள்ள விசேஷித்த நன்மையை அடையும்படியாக இது சரித்திர சம்பந்தமாய் எங்கே வருகிறதென்று பார்ப்போம்.

இது இரண்டு பாகமாகப் பிரிக்கப்படுகிறது. சரித்திர சம்பந்தமானது அதாவது பயிற்சிக்குரியது; இன்னொன்று போதனை சம்பந்தமானது அதாவது கற்பனைக்குரியது. பிரிவுகளைத் தெளிவாய்ச் சொல்லாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனென்றால் முதல் பாகத்தில் உண்டாகிற விருப்பம் இரண்டாம் பாகத்திற்கு வந்தவுடனே இல்லாமற்போய்விடுகிறது.

ஆவிக்குரிய பாடம்

இங்கே சங்கீதக்காரனுடைய முக்கிய விஷயம் பாவமன்னிப்பின் சந்தோஷம; பாவத்தின் பயங்கரத்தைப்பற்றியும் மெய்யாகவே பாவத்திற்கு அறுப்புக்காலம் உண்டென்பதைப்பற்றியும் மாணாக்கருக்குத் திட்டமாய்ச் சொல்லவேண்டும்; அதிலும் முக்கியமாய் மன்னிக்கப்பட்ட மனிதனுடைய பாக்கியமான நிலைமையைப்பற்றி நன்றாய் வற்புறுத்தி விளக்கிக் காட்டவேண்டும். தாவீது மெய்யாகவே பாவத்திற்காகத் துக்கப்பட்டுக் கண்ணீர்விட்ட மனிதனாகவும், அது நீங்கிப்போனவுடனே சந்தோஷப்பட்டவனாகவும் மாணாக்கர் அறிந்துகொள்ளும்படி செய்; அப்படியானால் அவனுடைய சந்தோஷத்தை அறிய விரும்புவார்கள். பிள்ளைகளுக்கு முன்னதாகவே தாவீதின்மேல் மிகப் பிரியமாகையால் அவனுடைய ஜீவியத்திலிருந்து இந்தப் பாடத்தைப் படிப்பிப்பதின் முக்கியம் வெளியரங்கமாய் இருக்கிறது.

நீங்கள் ஏதோ ஒரு தப்பிதத்தைச் செய்து, அதை மறைக்கப் பிரயாசப்படும்போது எவ்வளவு சஞ்சலப்படுகிறீர்கள் என்று உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். (ஒரு பையன் அல்லது பெண் மறைவான பாவத்தினால் வேதனைப்பட்ட சரித்திரம் உண்டானால் அதை

இங்கே சொல்லலாம்.) இருதயத்தில் உள்ள பாவம் காலில் தைத்த முள்ளுக்குச் சமானம். அது அங்கேயே தங்கி அழிவுண்டாக்கி, அங்கேயிருந்து நீக்கப்படும்வரைக்கும் நோவுண்டாக்கிக்கொண்டே இருக்கிறது. தாவீது அறிக்கை செய்து மன்னிப்பைப் பெறுவதற்கு அவ்வளவு காலம் காத்திருந்தது பரிதாபமே! ஒருநாள்கூட காத்திருக்கவேண்டிய அவசியமேயில்லை. எல்லாப் பாவங்களும் கழுவப்படும்படியாகவே கர்த்தராகிய இயேசு கல்வாரியில் தமது சொந்த இரத்தத்தைச் சிந்தினார். வேறே வழியில்லை. பாவத்தை இருதயத்திலேயே மறைத்து வைத்தால் துன்பத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் உண்டாக்கும். அறிக்கைசெய்து மன்னிப்பைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும். நாம் ஒவ்வொருவரும் இரட்சகரிடத்தில் மன்னிப்பையும் பரிசுத்தத்தையும் கேட்டிருக்கிறோமா?

அனுதின அப்பியாசம்

சங்கீதத்தின் ஜீவிய சரித்திரப்போக்கு.

முக்கிய மனக்கவர்ச்சி

காலம்.—மனந்திரும்பின பிற்பாடு. தாவீதின் ஜீவியத்தின் மத்தியில்.

இடம்.—தாவீதின் ராஜதானியாகிய எருசலேம்.

(2 சாமு.; சங். 51. இன்னும் மற்ற இடங்களிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட அறிவை உபயோகப்படுத்தும்போது, இந்த சங்கீதத்தை ஆரம்பிக்கும் வாக்கியமாக மாத்திரம் உபயோகிக்காமல், இந்த சங்கீதத்தோடு அவைகளையும் சம்பந்தப்படுத்தியே காட்ட ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.)

1. தாவீதின் பாவம்

இந்த சங்கீதத்தில் நாம் கவனிக்கிற முதலாவது விஷயம் தாவீது பாவத்தைக்குறித்துப் பேசும் விதந்தான். அவன் அதற்கு எத்தனை வித்தியாசமான வார்த்தைகளை உபயோகிக்கிறான். அவைகளின் அர்த்தம் என்ன என்று பார்ப்போம். மீறுதல் = எல்லை கடந்துசெல்லுதல், வழிதப்பித் திரிதல்; பாவம் = முறியடிக்கப்படுதல், அபஜெயம்; அக்கிரமம் = கிரமம் தப்பிக் கோணலாய்ப்போதல்; கபடு = வஞ்சனை, தந்திரமான திருட்டுத்தனம். இவைகளெல்லாம் எதைக் குறிக்கிறது?

மாணாக்கருடைய வயதுக்குத் தகுந்தாற்போல், தாவீதின் பாவத்தை விஸ்தரித்தாவது சுருக்கியாவது சொல்லவேண்டும். முதலாவது

தன்னுடைய குறிக்கப்பட்ட வேலைக்குப் போகாமலிருந்த அவனுடைய சோம்பல்தனம். பிற்பாடு அதிலிருந்து விளைந்தது உரியாவின் மனைவியை விரும்பினதும், அவளைப் பெற்றுக்கொள்ளும்படியாக அவளுடைய புருஷனைக் கொலை செய்வித்ததுமே. உரியா தன்னுடைய தைரியமுள்ள ராஜாவின்பேரில் முழு நம்பிக்கையுடையவனாயிருந்தான் என்று விவரித்துக் காண்பி. துரத்தப்பட்டுக் காட்டில் அலைந்து திரியும்போது தாவீதோடே உரியாவும் இருந்தான். ஆகையால் தாவீதின் குற்றத்தின் அவலட்சணம் அதிகப்பட்டது. ஒரு பாவம் இன்னொரு பாவத்துக்கு நடத்தி, மகா வீரத்தன்மையும் மேன்மையுள்ளதுமான லட்சணங்கள், மகா ஈனமான தாழ்ந்த நிலைமைக்கு வரும்வரைக்கும் கெட்டுப்போகிறதென்று காட்டு.

2. தாவீதின் கஷ்டம்

வாக். 3, 4-ஐ வாசி. 'நான் மௌனமாயிருந்தபோது' தாவீது ஒரு வருஷத்துக்கு அதிகமாய்த் தன்னுடைய பாவத்தைத் தன் இருதயத்திலேயே மறைத்து வைத்துக்கொண்டான். 'நித்தம் என் கதறுதலினால் என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று' பாவம் அடிக்கடி பயங்கரப்படுத்திற்று. அறிக்கையிடாமலிருந்தானேயொழிய அழாமலிருக்கவில்லை. 'இரவும் பகலும்'; இரவில் அமர்ந்த தூக்கம் இல்லை. பகலின் வெளிச்சம் புண்பட்ட இருதயத்திற்கு மாறுதல் உண்டாக்கவில்லை. பரிதாபம்! மனவேதனை சுகவீனத்தை உண்டாக்கிற்று, தேகம் ஒடுங்கிப்போகிறதாகத் தோன்றிற்று.

ராஜா சிம்மாசனத்தின்மேல் ராஜ சபையாரால் சூழப்பட்டவனாக வீற்றிருக்கிறான். ஜெயவீரனான தளகர்த்தனும் மற்றச் சேவகரும் யுத்தத்திலிருந்து திரும்பி உரியா இல்லாமல் வருகிறார்கள். இதினிமித்தம் தாவீதுக்குச் சொல்லமுடியாத விசனம். சேவகருடைய முகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறான். பொதுவான சந்தோஷத்தில் கலந்துகொள்ளக்கூடவில்லை. சங். 42. 3, 4-ஐ வாசி. அவன் இன்னும் ஆலய ஆராதனைக்கு ஒழுங்காய்ப் போகிறான். ஆனாலும் தான் தேவனுக்கு முன்பாக மாய்மாலக்காரன் என்று உணருகிறான்.

3. தாவீதின் பாட்டு

வாக். 5-7-ஐ வாசி. இப்பொழுது தாவீதில் காணப்பட்ட வித்தியாசம் என்ன? அவனுடைய பாரம நீங்கிற்று.

அவனுக்குச் சமாதானம் மறுபடியும் கொடுக்கப்பட்டது

சந்தோஷம் மறுபடியும் தாவீதுக்கு உண்டானது

அவன் கடைசியாகத் தன்னுடைய பாவத்தை தேவனிடத்தில் அறிக்கைசெய்தான். அதற்குச் சாக்குப்போக்குச் சொல்லவாவது, அது அற்பமானதென்று காண்பிக்க முயலவாவது இல்லை. தாழ்மையோடும் மனஸ்தாபத்தோடும் அதைப்பற்றி எல்லாவற்றையும் தேவனுக்குச் சொன்னான். தேவன் அவனுக்கு உடனே மன்னித்துவிட்டார். மறுபடியும் 1, 2 வாக்கியங்களை வாசி.

பாவத்தின் பலன் இன்னும் காணப்பட்டதென்று மாணாக்கருக்கு நினைப்பூட்டு. மாணாக்கர் வயதுவந்தவர்களென்றும் பின்வரும் அதிகாரங்களை வாசிப்பதினால் பிரயோஜனமடைவார்களென்றும் கண்டால் 2 சாமு 13–19 அதிகாரங்களை வீட்டில் வாசித்து, தாவீது செய்த பாவத்தின் பலனாக நடந்த காரியங்களைக் கவனிக்கும்படி செய். பாவம் மன்னிக்கப்பட்டபோதிலும், பாவத்தின் பலன் முழுதுமாக மாறிப்போகிறதில்லை என்பதை விவரித்துச் சொல்லு. தாவீது இப்போது சரியானபடி நடந்துகொண்டபடியால் மனவேதனை நின்றுபோயிற்று.

4. தாவீதின் இரட்சகர்

வாக். 8–11-ஐ வாசி. புதுப்பிக்கப்பட்ட மனிதனிடத்தில் தேவன் பேசுகிறார். தாமே வழிநடத்திப் போதிப்பதாக வாக்களிக்கிறார். தாவீதின் கண் உரியாவின் மனைவியின்மேல் விழுந்து இந்தப் பாவக் குழியில் கொண்டுவந்துவிட்டது. இப்பொழுது தேவன் அவனைப் பார்த்து என்னுடைய கண்ணால் உன்னை நடத்துவேன் என்கிறார். அதாவது இனிமேல் தாவீது கர்த்தர்பேரில் தன்னுடைய கண்களை வைக்கவேண்டுமென்பதுதான் அதின் அர்த்தம். விளையாட்டுக்காகப் போகும் கூட்டத்தார் தங்களுடைய தளகர்த்தனையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டியதுபோல தாவீதும் தன் கர்த்தரையே நோக்கவேண்டியவனாயிருந்தான்.

இந்த சங்கீதம் தாவீதின் ஆனந்த சத்தத்தோடே முடிகிறது. அதை மறுபடியும் வாசி. ஆனால் தாவீது 'இருதயத்தில் நேர்மையுள்ளவன்' என்று தன்னைப்பற்றி எப்படிச் சொல்லலாம்? சங். 51. 7–10-ஐ வாசி. இதே சமயத்தில் தாவீதால் எழுதப்பட்ட வார்த்

தைகள். எப்படி இருதயங்கள் கழுவப்பட்டு சுத்தமாக்கப்படும் என்ற இரகசியத்தை தாவீது அறியாதிருந்தான். ஆனால் நாம் அறிவோம். (1 யோவா. 1. 7.)

சங்கீதத்தின் முக்கிய பாகத்தை எழுதினது யார் என்று மாணக்கரைக் கேள். தாவீது. அவனுடைய சங்கீதங்களிலிருந்து அவனுடைய ஜீவியத்தின் அதிகமான பாகத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். சிலர் அவனை மேய்ப்பன் என்றும், சிலர் துரத்தப்பட்டவன் என்றும், மற்றவர்கள் ராஜாவென்றும் சொல்லுகிறார்கள். 32-ம் சங்கீதத்தில் தாவீது அனுபவத்தால் அறிந்த ஒரு துக்கமான சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

முகவுரை

வாலிப மாணக்கருக்குரிய பாடங்களின்பேரில் கேள்விகள்

1. பின்வரும் பாடங்களில் வாலிப மாணக்கருக்கு அதிகப் பிரியமுண்டாக்கக்கூடிய விஷயங்களென்று நீ நினைப்பது எது?

(a) எருசலேமிலிருந்து எஸ்றாவின் பயணம். (எஸ்றா, 1.)

(b) மத்தேயு அழைக்கப்பட்டது. (மத். 9. 9–13.)

(c) சகேயுவின் குணப்படுதல். (லூக். 19.)

2. பின்வரும் பாடங்களில் இம்மாணக்கருக்கேற்ற ஆவிக்குரிய பாடங்கள் எவை?

(a) பார்வோன் இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்தது. (யாத். 14.)

(b) சூம்பின கையையுடையவன் சுகமாக்கப்பட்டது. (மத். 12 1–14.)

(c) அசுத்த ஆவி பிடித்தவனுடைய உவமை. (மத். 12. 43–45.)

3. பின்வரும் பாடங்களிலிருந்து இந்தப் பிராயத்து மாணக்கருள்ள வகுப்பில் உபயோகிக்கக்கூடிய ஆவிக்குரிய பாடமும் தினசரி ஜீவியத்தில் கொண்டு செலுத்தக்கூடிய விஷயங்களும் எவை?

(a) லோத்து தப்புவிக்கப்பட்டது. (ஆதி. 14.)

(b) வேலைக்காரனுடைய உவமை. (லூக். 12. 35–48.)

(c) ஸ்தேவானுடைய மரணம். (அப். 7.)

4. பின்வரும் பாடங்களில் வாலிப மாணக்கருக்கு எப்படி முகவுரை சொல்லுவீர்.

(a) தாவீதினிடத்தில் யோனத்தானுக்கிருந்த அன்பு. (1 சாமு. 18.)

(b) நாசரேத்தில் புறக்கணிக்கப்பட்டது. (லூக். 4. 16–31.)

(c) லாசரு, ஐசுவரியவான் என்பவர்களின் உவமை. (லூக். 16.)

5. பின்வரும் விஷயங்களிலிருந்து வாலிப மாணக்கருக்குப் படிப்பிக்கும்படியாக மாதிரிப்பாடத்தில் காட்டப்பட்ட பிரகாரம் பாடம் ஆயத்தம்பண்ணும். (உத்தரவு ஐந்நூறு வார்த்தைகளுக்கு அதிகப்படக்கூடாது.

சரித்திரம்

(a) எலியா ஓடிப்போனது. (1 இரா. 19.)
தங்கவாக்கியம். (ஏசா. 41. 10.)

(b) கிறிஸ்துவும் யோவான்ஸ்நானகனும். (மத். 11. 1–15.)
தங்கவாக்கியம். (1 பேது. 1. 8.)

ஜீவிய விருத்தாந்தம்

(c) யோவாசு. (2 நாளா. 24.)
தங்கவாக்கியம். (நீதி. 16. 18.)

(d) ரூத். (ரூத்தின் சரித்திர புஸ்தகம்.)
தங்கவாக்கியம். (சங். 45. 7.)

(e) யாக்கோபும் யோவானும் வேண்டிக்கொண்டது. (மத். 20. 17–28.)
தங்கவாக்கியம். (வெளி. 3. 21.)

(f) மந்திரியின் குணப்படுதல். (அப். 8.)
தங்கவாக்கியம். (கொலோ. 1. 13, 14.)

(g) சிறைச்சாலைக்காரன் குணப்பட்டது. (அப். 16.)
தங்கவாக்கியம். (அப். 16. 31.)

உவமை

(*h*) பணக்கார மூடன். (லூக். 12.)

தங்கவாக்கியம். (மத். 6. 33.)

(*i*) கெட்ட குமாரன். (லூக். 15.)

தங்கவாக்கியம். (ஏசா. 55. 7.)

சங்கீதம்

(*j*) சங். 3. (தாவீது தன் மகனாகிய அபசலோமால் துரத்தப்பட்டபோது எழுதின சங்கீதம்.)

தங்கவாக்கியம். (சங். 59 16.)

-600 008

இந்திய கல்வி அபிவிருத்தி சங்கத்தாரால்

விற்பனை செய்யப்படும் புத்தகங்கள்

	ரூ.	அ.	பை.
ஏலி, சாமுவேல், சவுல்	0	3	0
இயேசுவின் இளமைப் பருவம்	0	2	0
லார்சன் ஜெபம்	0	5	0
ஊழியஞ் செய்கிற ஜீவியம்	0	3	0
நமது இந்திய ஓய்வுநாள் பாடசாலைகள்	0	8	0
கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்	0	10	0
ஓய்வுநாள் பாடசாலை மாணாக்கரும் பரிசுத்த லூக்காவின் சுவிசேஷமும்	0	9	0
இயேசுகிறிஸ்துவின் போதகம்	0	1	0
முப்பது உவமைகள்	0	1	0
நான் வசிக்கும் விநோத மாளிகையும் அதைப் பேணும் முறையும்	0	1	0
இந்திய கிறிஸ்தவர்களின் குடும்ப ஜெபங்கள் ...	0	1	0
சின்ன ஜீவியின் ஆறு உபாத்திமார்	0	1	6
முதலாம் வேதோபதேச வினாவிடை...	0	0	3
வேதத்தைப்பற்றிய முதற் புத்தகம்	0	1	6
இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும்... ...	0	3	0
என் பாட்டனார்	0	3	0
ஆட்கொல்லி	0	3	0
மீதி இருள்	0	1	6
விவாத தோஷம்	0	1	6
சுந்தரமுத்துக் கதை	0	1	6
கமலா	0	6	0
சகுணா	0	4	0
ஜப்பானும் இந்தியாவும்	0	4	0
ரூபின்சன் குரூசோ	1	4	0
இரட்சண்ய யாத்திரிகம்	0	12	0
இரட்சண்ய மனோகரம்	0	3	0

C. L. S. PRESS, MADRAS—1914

இந்திய கல்வி அபிவிருத்தி சங்கத்தாரால்

விற்பனை செய்யப்படும் புத்தகங்கள்

	ரூ.	அ.	[illegible]
பவுல் அப்போஸ்தலன் நடபடி விளக்கம்	0	4	0
லார்சன் ஜெபம்	0	5	0
மாதர் ஜோதி	0	1	6
கிறிஸ்து மார்க்கத்தின் போதசாரம்	0	10	0
புதிய ஏற்பாடும் அதின் ஆசிரியர்களும்	0	4	0
கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்	0	10	0
ஓய்வுநாள் பாடசாலை மாணாக்கரும் பரிசுத்த லூக்காவின் சுவிசேஷமும்	0	8	0
இயேசுகிறிஸ்துவின் போதகம்	0	1	0
டாக்டர் லிவிங்ஸ்டோன் என்பவரின் ஜீவிய சரிதை	0	1	6
முப்பது உவமைகள்	0	1	0
திருஷ்டாந்த பொக்கிஷம்	2	8	0
என் தங்கை (புதிய பதிப்பு)	0	2	0
நான் வசிக்கும் விநோத மாளிகையும் அதைப் பேணும் முறையும்	0	1	0
மாதர்க்கேற்ற கதை உவமானங்கள்	0	2	0
இல்லற இன்ப இரகசியம்	0	4	0
சின்ன ஜீவியின் ஆறு உபாத்திமார்	0	1	6
மூடின முத்து	0	1	6
பள்ளிக்கூடத்துப் பிள்ளை	0	0	6
பரஞ்சோதி கிருபை	0	4	0
ஏலியும் சாமுவேலும் சவுலும்	0	3	0
ஜீவிய ஊழியம்	0	3	0
குணப்படுதல் என்றால் என்ன?	0	0	6
இரட்சிப்புக்குக் கர்த்தருடைய வழி	0	1	0

ஷேக்ஸ்பியர் நாடகக் கற்பித கதைகள்

லீயர் மகாராஜன் கதை	0	1	0
ஒதெல்லோ டெஸ்டிமோனா	0	1	0
ரோமியா ஜூலியத்து	0	1	0
ஹாம்லெத்	0	1	0
நகைபிழை நாடகம்	0	1	0
வெனீஸ் வர்த்தகன்	0	1	0
மக்பெத்	0	1	0

CHRISTIAN LITERATURE SOCIETY, POST BOX 501, MADRAS

1 E. 2 M.